



கல்கி

KALKI 24.9.1972 45காசு



உங்கள் கணவர் வேண்டும் பண்டமெல்லாம் உண்டு மகிழட்டுமே!

ஸான்ஸைம் மல்ட்டி-யென்ஸைம் காம்பௌண்ட்

எல்லா வகை உணவுப் பண்டங்களையும் விரைவில் ஜீரணிக்கச் செய்கிறது.


மைக்ரோன் செய்யப்பட்ட 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' ஒரே ஒரு பொட்டலம் பவுடர் அல்லது 3 மாத்திரைகள் அஜீரணத் தொல்லைகளிலிருந்து பூரண விடுதலை அளிக்கிறது. உலகெங்கும் பாராட்டு பெற்ற ஜீரணத் தூண்டுகோலான மல்ட்டியென்ஸைம் 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' இன்சுவையும் நன்மணமும் கொண்டது.

'ஸான்ஸைம் காம்பௌண்ட்' 4 சிறந்த வழிகளில் செயல்புரிகிறது.


- 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' எல்லாவித உணவுப் பொருட்களையும் ஜீரணித்து, சத்துக்களை உட்கிரகிப்பதோடு பசியையும் தூண்டுகிறது.
- 'ஸான்ஸைம் காம்பௌண்ட்டில்' உள்ள 'ஸிலிக்கன்' என்னும் விசேஷ நுரை எதிர்ப்புப் பொருள் வாயுவை விரைவில் கலைத்து, வலியைப் போக்குகிறது.
- 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' கொடிப் பொழுதில் அமிலங்களைச் சமனப்படுத்துகிறது.
- 'ஸான்ஸைம் காம்பௌண்ட்' இன்சுவையும் நன்மணமும் கொண்டு இருப்பதால் சாப்பிட அருவருப்பு தோன்றுவதில்லை. மேலும் மலச் சிக்கல் ஏற்படாமல் தடுக்கிறது.

ஜீரண பலமே பூரண நலமாகும்.

உடனடி நிவாரணத்துக்கு மைக்ரோன் செய்யப்பட்ட பவுடர் உட்கொள்ளவும். மாத்திரையாகவும் ஸான்ஸைம் கிடைக்கிறது.



சாப்பிடும் அளவு: உணவுக்குப்பின் தண்ணீருடன் அல்லது தாம்பூலத்துடன் சாப்பிடவும் ஒரு பொட்டலம் அல்லது 2 முதல் 4 மாத்திரைகள்.



இலவச விவரமான வெளியீட்டுக்கு எழுதவும்.

'ஸான்ஸைம் காம்பௌண்ட்' எல்லா பிரபல மருந்து கடைகளிலும் கிடைக்கிறது.

யூனி ஸாங்க்யோ லிட்.
22, B. தேசாய் ரோடு, பம்பாய்-26.

PRATIBHA 1711-29 Tam R


தமிழ்நாட்டிற்கு விநியோகஸ்தர்கள்:
M/s கணபதி & கோ, 108/104, லிங்கி செட்டித் தெரு, த.பெ. நெ. 1986, சென்னை-1

இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

அவர்களின் விஜயம்



சந்திக்கும் விலாசங்கள்

1-ந் தேதி திருநெல்வேலி: நெல்லை லாட்ஜ் காலை 8 மணி முதல் 12 மணி வரை.

1-ந் தேதி நாகர்கோவில்: உடுப்பி ஸ்ரீகிருஷ்ண பவன், மாலை 2 மணி முதல் 4 மணி வரை.

2-ந் தேதி மதுரை: மணீஸ் கபே, காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

2-ந் தேதி புதுக்கோட்டை: வஸந்தா லாட்ஜ் மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை.

3-ந் தேதி காரைக்குடி: AVM. PL. ரெஸ்ட் ஹவுஸ், காலை 8 மணிமுதல் 11 மணிவரை.

3-ந் தேதி அறந்தாங்கி: கோகுலம் லாட்ஜ் பகல் 12 மணி முதல் 1 மணி வரை.

3-ந் தேதி பட்டுக்கோட்டை: அசோகாலாட்ஜ் பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை.

3-ந் தேதி மன்னார்குடி: மன்னை லாட்ஜ் மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை.

4-ந் தேதி திருச்சி: ஹோட்டல் அஜந்தா காலை 8 மணி முதல் 2 மணி வரை.

4-ந் தேதி கரூர்: பெரியார் உணவு விடுதி மாலை 3-30 முதல் மாலை 5 மணி வரை.

5-ந் தேதி தஞ்சை: ராஜா ரெஸ்ட் ஹவுஸ் காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை.

5-ந் தேதி திருவாரூர்: அபூபக்கர் பில்டிங் மாலை 2 மணி முதல் 4 மணி வரை.

5-ந் தேதி நாகை: தினகர விலாஸ், மாலை 5 மணி முதல் 7 மணி வரை.

6-ந் தேதி காரைக்கால்: அசோக் லாட்ஜ் காலை 8 மணி முதல் 10 மணி வரை.

6-ந் தேதி கும்பகோணம்: தாஜ்மஹால் லாட்ஜ், காலை 11 முதல் 2 மணி வரை.

6-ந் தேதி மாயவரம்: காளியாகுடி லாட்ஜ் பகல் 3 மணி முதல் 4-30 மணி வரை.

6-ந் தேதி கடலூர் N. T.: ஹோட்டல் பிருந்தாவனம், இரவு 7 மணி முதல் 8-30 மணி வரை.

7-ந் தேதி பாண்டிச்சேரி: அருணா லாட்ஜ் காலை 8 மணி முதல் 10 மணி வரை.

பழனி சித்தர் வைத்தியசாலை

போன்: 316] பழனி [தந்தி: சித்தர்

ஒரு வேண்டுகோள்

பம்பாய் மாநகர், மேற்கு ஸயான் 255/257 நெம்பரில் ஸ்ரீ மானவ ஸேவா சங்கத்தின் நிர்வாகத்தில், இச் சேவா சங்கத்தின் மேற்கூறிய முகவரியில், பம்பாய் மேல்நகர் (Uptown) ரோட்டரி கிளப் மருத்துவ பரிசோதனை நிலையமும், ராம் கிஷன் ஈஷ்வர்கௌர் மெஹ்ரா மருத்துவ மனையும், சில நாட்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு நிலையங்கள் அளிக்கும் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இங்கே வசூலிக்கப்படும் கட்டணம் குறைவானவை. மருத்துவ பரிசோதனைகளை எல்லாம் பரிசோதனை வல்லுநர்களாலேயே மேற்கொள்ளப் படுகின்றன.

அலுவல் நேரங்கள் :

காலை 9-00 a. m. to 11-00 a. m.

மாலை 5-30 p. m. to 7-30 p. m.

மூல நோயை

முற்றவிடாமல்

நம்பிக்கையான

ஹெடன்ஸா

களிம்பு

உபயோகித்து

நிவாரணம்

அடையுங்கள்;

—ரண

சிகிச்சையையும்

தடுங்கள்

Bensons-2141 TAM

ஃப்ளோரைட்* பற்களுக்கு உறுதி அளித்து வலி தரும் சோத்தையையும் பற்சிதைவையும் தடுக்கிறது.

ஆகவே சிபா ஆராய்ச்சிக் குழு உருவாக்கியது பினகா ஃப்ளோரைட்

பல் வைத்தியர்களும் ஆராய்ச்சி விஞ்ஞானிகளும் இதை ஊர்ச்சிதம் செய்கின்றனர்.

''ப்ளோரைட் பல் எனுமலில் அணு அளவே பிரயோகிக்கப்படுகிறது. இது சொற்ப அளவாயினும் பற்களை உறுதியாக்கி வலியையும் பற்சிதைவையும் தடுக்க வல்லது''.

ஃபின் ப்ருடெவால்ட்: "பல் வைத்திய ஆண்டு புத்தகம்"—1960-61 (பக்கம் 116)

பினகா ஃப்ளோரைடினல் பல் துலக்குங்கள் பற்களை உறுதியாக வைத்திருங்கள்



பினகா டூத் பிரஷ்களிலுள்ள மழுக்கப்பட்ட முனைகள் ஈறுகளுக்கு ஊறு செய்யாது.

CIBA

ULKA-CF-32 TAM

கல்கி

பொருளடக்கம்



பரிதாபி, புரட்டாசி 8 - செப்டம்பர் 24, 1972

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50



நெல்பத்தூர் ஸ்ரீ ராஜகோபால அய்யர் பேத்தியும், கதிராமங்கலம் பிரபல மிராசுதார் ஸ்ரீ கே. வி. நடராஜன் அவர்களின் குமாரத்தியுமான சௌ. ரமாவுக்கும், குன்னியூர் பிரபல மிராசுதார் ஸ்ரீ சாம்பசிவ அய்யர் அவர்களின் குமாரர் சிரஞ்சீவி துரைசாமிக்கும் 27-8-72 அன்று மாயூரத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. திருமணத்துக்கும், அன்று மாலை நடைபெற்ற வரவேற்புக்கும் ஏராளமான நண்பர்களும், உறவினர்களும், நகரப் பிரமுகர்கள் பலரும் வருகைதந்து மணமக்களை வாழ்த்தினர். வரவேற்பு வைபவத்தில் சங்கீத கலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் இன்னிசைக் கச்சேரி வழங்கினார்கள்.

வாழ்க மணமக்கள்

கல்கி

மலர் 32

இதழ் 8

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

மதுவிலக்கும் பிரதமரும்

புதிய காங்கிரஸ் தலைவருக்குப் பிரதமர் இந்திரா காந்தி எழுதியுள்ள நீண்ட கடிதத்தில் நாட்டில் மது பானம் அருந்தும் பழக்கம் அதிகரித்துள்ளதால் விளையும் தீமைகளைக் கண்டு தாம் கவலைப்படுவதாகச் சொல்கிறார்.

மதுவிலக்கை ரத்து செய்யும் உரிமை மாநில அரசாங்கங்களுக்கு உண்டு. இதைப் பயன்படுத்தி வருமானத்தைப் பெரிதாக நினைத்து, பல மாநிலங்கள் மதுவிலக்கை ரத்து செய்து விட்டன.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை கள்ளுக் கடைகள் திறக்க ஆரம்பித்த முதல் ஆண்டில் சுமார் 23 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைத்தது. இரண்டாவது ஆண்டில் கள்ளுக் கடை, சாராயக் கடைகளை ஏலம் விட்டதிலும் மதுபானக் கடை லைசென்சுகள் மூலமும் சுமார் 33 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது.

இதனால் விளையும் தீமை எவ்வளவு பயங்கரமானது! ஒரு சின்னக் கணக்கு. ஒரு ரூபாய் கலால் வருமானம் அரசாங்கத்துக்குக் கிடைக்க வேண்டுமானால் குறைந்தது மூன்று ரூபாய்க்காவது கள்ளும், சாராயமும் விற்பனையாக வேண்டும். அதாவது குறைந்தபட்சமாக 100 கோடி ரூபாய்க்கு மக்கள் கள்ளுச் சாராயம் உட்கொண்டுதான், அரசுக்கு இந்த 33 கோடி ரூபாய் வருவாயை அள்ளி அளிக்கின்றனர்!

இன்னொரு கணக்கு இதைவிடப் பயங்கரமானது! கள்ளுக் கடை ஏலம் எடுத்தவர்கள் தாங்கள் போட்ட ஏலத் தொகையை வட்டியும், லாபமும், முதலுமாக எடுக்க வேண்டுமானால் சுமார் 400 கோடி ரூபாய் மதிப்புள்ள மதுவகைகளை விற்பனை செய்தே அந்த லாபத்தை அடைய வேண்டும்.

இவ்வளவு ஏராளமான கள்ளையும், சாராயத்தையும் யார் குடிக்கிறார்கள்? ஏதோ உயர் மட்டத்தில் உள்ள சில பணக்காரர்கள் மட்டும் என்று எண்ணி விட வேண்டாம். சராசரியில் ஒரு நாளைக்கு 1¼ ரூபாய்க்கும் குறைவான வருமானமுள்ள அடிமட்டத்திலுள்ள ஏழை எளியவர்கள்தான் இத்தீய பழக்கத்தின் விஸ்தரிப்பினால் பாழாகிக் கொண்டிருக்கின்றனர். இந்த வறியவர்கள் தமிழ் நாடு அரசுக்குக் கொடுக்கும் காணிக்கை தான் இந்த 33 கோடி ரூபாய்.


இந்தக் கணக்கு ஒருபுறம் இருக்கட்டும். இக் கொடிய பழக்கத்தினால் மக்கள் மன உறுதியை இழந்து, குடும்ப அமைதியை இழந்து, ஒழுங்கீனத்தில் ஈடுபட்டுச் சமூகத்தில் உண்டாக்கும் சீர்கேட்டை எந்த அளவைக் கொண்டு கணக்குப் போடுவது?


இம்மாதிரி சீர்கேடுகள் நிகழும் என்று கருத்தில் கொண்டுதான் அரசியல் சாஸனத்தின் கொள்கை வகுக்கும் பகுதியில் லாகிரியூட்டுவதும், உடல் நலத்தைப் பாதிப்பதுமான மதுபான வகைகளை மருந்துக்காக மட்டுமேயன்றி, மற்றபடி சமூகத்தில் அனுமதிக்கலாகாது என்று அரசுக்கு ஆலோசனை சொல்லப் பட்டிருக்கிறது.

இதை மத்திய அரசு புறக்கணித்து விட்டது. கள்ளும் சாராயமும் மதுவும் சமூகத்தில் புக அனுமதித்து விட்டது. புகுந்து விட்ட பின்னர் இந்தப் பழக்கம் வேகமாகப் பரவி வருகிறது.


இதைக் கண்டு கவலை கொள்ளும் பிரதமர் இப்போது அரசாங்கத்தின் மூலம் நடவடிக்கை எடுக்காமல், தமது கட்சிக்குக் கடிதம் எழுதியிருப்பது விந்தையாக உள்ளது. இதற்காக அவர் சொல்லியுள்ள, சம்பளத் தேதிகளில் கள்ளுக் கடைகள் திறக்காதிருத்தல், கோவில், பள்ளி மருத்துவமனை போன்ற இடங்களுக்கு அருகில் கள்ளுக்கடைகள் வைக்காமல் இருத்தல் முதலிய ஆலோசனைகளைத் தும்பைவிட்டு விட்டு வாலைப் பிடிப்பதற்குத்தான் சமானமாகச் சொல்ல வேண்டும்.

நிர்வாக யந்திரம் அரசாங்கத்தினிடம் பூரணமாக இருக்கும்போது புதிய காங்கிரஸ் தலைவரிடம் பிரதமர் தமது கவலையைத் தெரியப்படுத்துவதினாலும் புதுக் காங்கிரஸ் விடும் தாக்கீதினாலும் என்ன பயன் ஏற்படக் கூடும்? தீரத்துடன் செயலாற்ற உண்மையிலேயே பிரதமர் எண்ணினால் மதுவிலக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அரசாங்கத்தின் கொள்கையை ஆணித்தரமாக எடுத்துச் சொல்லி, அதை மாநில அரசுகள் தீவிரமாகக் கடைப்பிடிக்கச் செய்வதுதான் முறை.





அண்ணா பிறந்த நாளை யொட்டி அண்ணா சிலைக்கு ஒளி அலங்காரம் —செய்தி


பிரகாசமாகத்தான் இருக்கு... ஆனால் சுட்டுப்பொசுக்கற உஷ்ணத்தைத் தாங்க முடியலியே!
உலகம்


விலைவாசி உயர்வு

நியாயமற்ற வேலைநிறுத்தம்

இன்றியமையாத சேவை, சமூகத்துக்கு மிக மிக அவசியமான அம்சம் என்பதால் தான் ரயில் போக்குவரத்து இடைவெளி இல்லாமல் இருபத்துநான்கு மணி நேரமும் இயங்கி வருகிறது. ஷிப்டு முறைகள், அதிக நேர அலவன்சுகள், விசேஷ சலுகைகள் முதலிய ஏற்பாடுகள் ரயிலோட்டிகளுக்காகச் செய்யப்பட்டுள்ளன. ஆதார சம்பளத்தைப் போல இரு மடங்கு, மும்மடங்கு அலவன்சுகள் மூலம் அவர்கள் பெற வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. எனினும் குறைகள் இருக்குமேயானால் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளுவதுதான் உண்மையான தொழிற்சங்க முறையாகும். இம்முறையில் நம்பிக்கை இல்லாதவர்கள் என்று பொதுமக்கள் நினைக்கும்படி ரயிலோட்டிகளும் அவர்களின் தலைவர்களும் நடந்து கொண்டதை மக்கள் வெகுவாக ரசிக்கவில்லை. அவர்களுடைய அனுதாபத்தைப் பெற வேண்டும் என்று ரயிலோட்டிகள் உண்மையிலேயே நினைத்தால், சமூகத்துக்குத் தொல்லை தராத விதத்தில் நடந்து கொண்டால்தான் முடியுமே தவிர, இவர் வேலை நிறுத்தங்கள் மூலமல்ல. ஒழுங்கையும் அமைதியையும் எப்படியும் நிலை நாட்டித்தான் ஆகவேண்டும். அதுவும் அத்யாவசியமான ரயில் போக்குவரத்துத் துறையில் உறுதியுடன் நடந்து கொண்டதற்கு அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும்.

பன்னிரண்டு நாட்களுக்குப் பின்னராவது விவேகம் வந்து வேலைநிறுத்தத்தை வாபஸ் பெற்று ரயில் போக்குவரத்தை சகஜ நிலைக்குக் கொண்டு வந்ததற்கு ரயிலோட்டிகளுக்கு நமது பாராட்டும் நன்றியும் உரித்தாகும்.

பங்களாதேஷும் பாகிஸ்தானும்

உலக நாடுகள் அனைத்தும் பங்களா தேஷை அங்கீகரித்து விட்டன. இதைவிட முக்கியமாக, 'தான் ஒரு தனி நாடு' என்ற உணர்வை பங்களா தேஷ் பெற்று, தன்னைத் தானே அங்கீகரித்துக் கொண்டு விட்டது. ஆனால் இன்னமும் பாகிஸ்தான் அதை அங்கீகரிக்கவில்லை. பங்களாதேஷ் விடுதலைப் போரை பாகிஸ்தான் ஒரு புரட்சியாக ஒப்புக்கொள்ளாமல் உள்நாட்டுச் சிறு பூசல்களில் ஒன்று என்றே இன்னமும் எண்ணிக் கொண்டிருக்கிறது. இது நகைப்புக்கிடமானது. ஜார்ஜ் வாஷிங்டன் நடத்திய பெரிய புரட்சிக்குப் பின்னும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரிட்டனின் ஓர் அங்கம்தான் என்று பிரிட்டிஷார் எண்ணியிருந்தால் அது எத்தனை கேலிக்கிடமோ, அப்படிப்பட்ட கேலித்தனமான எண்ணத்தில் இருக்கிறது பாகிஸ்தான். பாகிஸ்தானின் தஸ்தாவேஜுகளில் வேண்டுமானால் இந்த மாயக் கற்பனையைக் காப்பாற்றலாமே ஒழிய பிரத்யட்சத்தில் இது எடுபடாது. 'பங்களாதேஷ் ஒரு சுதந்திர தேசம்' என்று சகல நாடுகளும் ஒப்புக் கொண்டாகிவிட்டது. இச்சமயத்தில் பாகிஸ்தான் ஒரு மாயத்தை நிஜமாக்க முடியாது. பேச்சு வார்த்தை நடத்துவதற்கும், பேரம் செய்வதற்கும் இந்த மாயக் கற்பனையை நீடிப்பது உதவி புரியும் என்று வாதம் செய்யலாம். உண்மையில் இந்த அம்சத்திலும் கூட அது உதவிக்கு மாறாகத் தடங்கலே செய்யும். ''சத்தியமே வெல்லும், அசத்தியம் அல்ல'' என்ற உயர்ந்த மொழியின் அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்துவதுதான் சிலாக்கியம். பாகிஸ்தானின் ஒரு பகுதியே பங்களா தேஷ் என்பது அப்பட்டமான அசத்தியம். உபநிஷத ரிஷிகள் ஹிந்துக்களுக்கு மட்டுமின்றி உலகம் முழுவதற்குமே தங்கள் உபதேசத்தைத் தந்தனர்.

— இவ்வாறு ராஜாஜி ஸ்வராஜ்யாவில் எழுதியுள்ளார்.

திப்பு சுல்தானின் மதுவிலக்கு

மிஸ்டர் வில்க்ஸ் என்ற ஒரு சரித்திர ஆசிரியர் எழுதியுள்ள சரித்திரப் புத்தகத்திலிருந்து திப்பு சுல்தான் மதுவிலக்குப் பிரசாரத்திற்காக அரும்பாடு பட்டார் என்று தெரியவருகிறது.

ஸ்ரீரங்கப் பட்டணத்தைச் சுற்றிக் கள்ளுக்காக விடப்பட்டு வந்த பனைமரங்களை யெல்லாம் வெட்டி எறியும்படி சுல்தான் உத்தரவிட்டார். தமது ராஜதானியில் இவ்வளவு கள்ளுக் கடைக்கு மேல் இருக்கக்கூடாது என்று உத்தரவிட்டார். கள் வியாபாரம் சம்பந்தமாக அநேக சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அந்த வியாபாரம் க்ஷீணித்து விடுவதற்கு ஏற்பாடு செய்தார். இவ்வாறு கள்ளை ஒழிக்க அவர் செய்த முயற்சியில் வெற்றி அடைந்தார் என்றே சொல்ல வேண்டும்.

கஞ்சாச் செடி முதலியவைகளை தமது ராஜதானியில் சொந்தத் தோட்டங்களிலும் பயிரிடக்கூடாது என்று உத்தரவிட்டார். இவ்வளவு தூரம் அவர் ராஜாங்க வருமானத்தையும் கவனியாது மதுவிலக்குச் செய்ததற்குக் காரணம் அவருக்குத் திருக்குர்-ஆனிடமிருந்த பக்தியே யாகும். ''தலையைக் கிறுக்கும் பண்டங்களைக் கொள்ளாதே'' என்று குர்—ஆன் ஷரீபு எச்சரிக்கை செய்தாரல்லவா ?

பொது மக்களிடை மட்டுமல்ல, தமது ராணுவத்திலும் மதுப் பேச்சு இல்லாதவாறு சுல்தான் ஏற்பாடு செய்தார். சுதந்திரச்சங்கு — 31-8-1931. நன்றி : குமிலன்.

தமிழ் நாட்டிலே

தீரன்

மானத்தைக் கப்பல் ஏற்றுகிறார்கள்

களவு என்ற சமூக விரோதக் காரியத்தின் பிரிவுகளாக, 'பிக்பாக்கெட்', 'கன்னம் வைத்தல்' - 'வழிப்பறி' என்றெல்லாம் சொற்றொடர்கள் ஏற்பட்டிருப்பதுபோல் இப்போது சில நாட்களாகச் 'சிலைத் திருட்டு' - என்றும் ஒரு சொற்றொடர் பத்திரிகைகளில் அடிபடத் தொடங்கி யிருக்கிறது. நம் நாட்டின் - குறிப்பாகத் தென்னாட்டின் கலையழகு மிக்க சிலைகளையும், ஐம்பொன் விக்கிரகங்களையும் திருடி அந்நியருக்கும், அந்நிய நாடுகளுக்கும் விற்கும் அல்லது கடத்தும் இழிசெயலே இந்தப் புதிய சொற்றொடரால் குறிக்கப் படுகிறது. இந்த வியாபாரத்துக்குத் தரகர்கள், இடைத் தரகர்கள் வாங்குவதற்கும், விற்பதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் நிறுவனங்கள் எல்லாமே ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கலையழகுமிக்க பொருள்களையெல்லாம் வாங்கிச் சேர்க்க வேண்டும் என்கிற அந்நிய நாட்டினரின் ஆவலையும், அதே பொருள்களைச் சொந்த நாட்டுக் கோவில்களிலிருந்தும், காட்சிக் கூடங்களிலிருந்தும் திருடி விற்றுவது பிழைக்க வேண்டும் என்று முனையும் இங்குள்ளவர்களின் செயலையும் ஒப்பிட்டால் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. சமீபத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியிலும், தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களிலும் இப்படிச் சிலைத் திருட்டுக்கள் அதிகமாக நடைபெற்றிருக்கின்றன. வழிபாட்டில் இருக்கும் கோவில் சிலைகளே சில இடங்களில் திருடப்பட்டுள்ளன. சிலைகளையும் விக்கிரகங்களையும் திருடிக் கப்பல் ஏற்றுகிறவர்கள் யாரோ அவர்கள், வெறும் சிலைகளையும் விக்கிரகங்களையும் மட்டும் கப்பல் ஏற்றவில்லை. நம் நாட்டு மானத்தையே கப்பலேற்றி விடுகிறார்கள். சிலைத் திருடர்கள் தேசபக்திக்கும் விரோதிகள். தெய்வ பக்திக்கும் விரோதிகள். அவர்கள் மிகவும் கடுமையாகத் தண்டிக்கப் பட வேண்டியவர்கள். தேசத்தின் பெருமைகளை யார் திருடி விற்றாலும் அவர்கள் சமூக விரோதிகளே. இதில் இரண்டாவது கருத்து யாருக்குமே இருக்க முடியாது.

ஆங்கிலத்தை அடிமையாக்கிக் கொள்ளலாம்

இந்த மாத முதல்வாரத்தில் சென்னையில் நடைபெற்ற வ.உ.சி. விழாவில் வ.உ.சி. பற்றிய தம்முடைய நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது ம.பொ.சி: ஆங்கிலம் பற்றிய தம் நோக்கை மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். வ.உ.சி.யின் புகழ் தமிழ்நாட்டில் பரவக் காரணமாக இருந்தவர்களில் முக்கியமானவராகிய ம.பொ.சி.,

'நான் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்ப்பவன். ஆனால் எனது நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட நான் அனுமதித்தது பிழையாகாது. நான் எதிர்ப்பது ஆங்கிலத்தை அல்ல. அதன் ஆதிக்கத்தையே. ஆங்கிலத்துக்குத் தமிழர் அடிமைப்பட்டுவிடக் கூடாது. ஆங்கிலத்தை நமக்கு அடிமையாக்கிக் கொள்ள வேண்டும். அந்த மொழியின் மூலம் நம்மவர்கள் புகழ் திக்கெட்டும் பரவ வேண்டும். அதற்காகத்தான் இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியிடப்படுகிறது' என்று அந்த வ. உ. சி. விழாவில் கூறியுள்ளார். இதுவரை ஆங்கிலத்தைப் பற்றி ம.பொ.சி. கூறியிருப்பதை எல்லாம்விட இப்போது மிகவும் தெளிவாகவும், அழகாகவும் கூறியிருப்பதற்காக முதலில் அவரைப் பாராட்டுகிறோம். ஏனெனில் 'ஆங்கில மொழி மூலம் ஒரு கருத்தும் அதன் புகழும் திக்கெட்டும் பரவ முடியும். அந்த ஆங்கில மொழியைத் தமிழர்கள் தங்களுக்கு அடிமைப் படுத்திக் கொண்டு பயனடைய வேண்டும்' என்ற அருமையான அறிவுரையை இப்போது ம.பொ.சி. நம்மவர்க்குக் கூறியிருக்கிறார். ம.பொ.சி. நம்மவர்களைச் சாதாரணமாக ஆங்கிலம் கற்கச் சொல்லவில்லை. புகழ் திக்கெட்டும் பரவும்படி கற்கச் சொல்கிறார். அந்த மொழி நாம் இழுத்த இழுப்புக்கு எல்லாம் வந்து நமக்குத் தொண்டூழியம் செய்யும் அளவு (அடிமையாக்கிக் கொண்டு) கற்க வேண்டும் என்கிறார். நாம் எதிர்ப்பது



ஆங்கிலத்தை அல்ல, ஆங்கில ஆதிக்கத்தையே என விளக்கியதற்காக மீண்டும் ம.பொ.சி.க்கு நமது பாராட்டுக்கள்!

இடையில் இருப்பது யார்?

'பல்வேறு மக்கள் நலனுக்கான திட்டங்களுக்காக மாநில அரசுக்கு மத்திய அரசு ஒதுக்கும் பணம் மக்களுக்குப் போய்ச் சேருவது இல்லை. நடுவில் இருப்பவர்கள் மூட்டையடித்துக் கொள்கிறார்கள்' என்னும் பொருளில் மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் சேலத்தில் பேசும்போது வருத்தப்பட்டிருக்கிறார். இப்படி இடையில் இருந்து கொள்ளையடிப்பவர்களில் பலர் இடைப் பணக்காரர்கள் ஆகியிருப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார். 'இந்த அக்கிரமத்துக்கு முடிவு கட்ட வேண்டும்' என்றும் அவரே தொடர்ந்து கூறியுள்ளதைக் கவனிக்கும்போது அக்கிரமத்துக்கு முடிவு கட்டும் வழி வேறு யாரிடமோ இருப்பதுபோல் பேசியிருப்பதாகத் தோன்றுகிறது. அக்கிரமத்தை அறியவும், விசாரிக்கவும், தவறு செய்த 'இடையில் உள்ளவர்களை' தண்டிக்கவும் மத்திய அரசாங்கமும் கடமைப்பட்டிருக்கிறது என்பதை திரு சி. எஸ். ஸுக்கு நினைவுபடுத்துவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

பஞ்சாயத்து ஆசிரியர்கள்

பஞ்சாயத்து ஒன்றியங்களில் (யூனியன்) ஆசிரியர்களாக வேலை பார்க்கிறவர்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு மாற்றுவதற்கு இதுவரை ஒவ்வோர் ஒன்றியத்திலும் அதன் தலைவர், அதன் ஆணையாளர், உள்ளூர் எம். எல். ஏ., கல்வித் துறை அதிகாரி, ரெவின்யூ டிவிஷனல் அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு இருந்தது.

இந்த ஏற்பாட்டினால் வேண்டாத ஆசிரியர்களை அடிக்கடி மாறுதல் செய்வது, குழுவிலுள்ளவர்கள் தங்களுக்குள்ளேயே அடிக்கடி கருத்து மோதலால் ஆசிரியர்களைத் தொல்லைப்படுத்துவது போன்ற பல குறைகள் இருந்தன. இக்குறைகளைத் தவிர்க்கக் கருதி இப்படி உள்ள குழுக்களையெல்லாம் கலைத்துவிட்டு இனிமேல் மாவட்டக் கல்வி அதிகாரியின் இசைவு பெற்று ஒன்றிய ஆணையாளரே மாற்றுதல்களைக் கவனிக்கலாம் என்று ஏற்பாடு செய்ய விருக்கிறார்கள். இந்தப் புதிய ஏற்பாட்டில் குழப்பங்கள் குறைவு. ஆனால் இதிலும் விருப்பு வெறுப்பில் ஆசிரியர்களை அங்கும் இங்குமாகப் பந்தாடிக் கொண்டிருக்க முடியலாம். அப்படிச் செய்யாமல் இந்தப் புது நடைமுறையால் ஏராளமான பள்ளி ஆசிரியர்கள் நன்மை அடையும்படியும், அமைதியாக வாழும்படியும் வசதிகள் கிடைக்கும் என்று ஏற்படுமானால், இது பயனுள்ளதாக இருக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.

பிழை திருத்தும் பெருமை

சென்னை நிருபர்கள் சங்க விழாவிலே பேசும்போது தமிழக முதல்வர் திரு மு. க. "....ஒரு காலத்தில் நான் எழுதியவன் மாத்திரமல்ல. பிழை திருத்துவதிலும் நான் வல்லவனாக இருந்திருக்கிறேன்" — என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். பாராட்டத்தக்க வல்லமைதான். ஆனாலும் இது கடந்த காலப் பெருமையே.

எப்போதோ முதல்வர் திருத்திய பிழைகளுக்காகப் பெருமைப்படுவதை விட இனி மேல் திருத்த வேண்டிய பிழைகளில் கவனம் செலுத்தலாம்; செலுத்த வேண்டும் என்பது அவருக்கு நம் யோசனை. அச்சுப் பிழைகளை விட அதிகமான பிழைகள் நாட்டிலும், சமூக ஆட்சியிலும் இருக்கலாம். அவற்றையும் திருத்திவிட்டு அப்புறம் முதல்வர் தாராளமாகப் பெருமை கொண்டாடலாம்.

பெற்றோர்களும் கவனிக்க வேண்டும்

சர்வகலாசாலை ஆசிரியர்கள் சங்கம் தமக்கு அளித்த பாராட்டு விழாவில் பேசும்போது சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு சுந்தரவடிவேலு அவர்கள், "இன்று சமூகத்தில் மாணவ மாணவியர்களின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பற்றிக் கவலைப்படுவதுமில்லை; கவனிப்பதும் இல்லை. அவர்களை ஆசிரியர்களே முழுமையாகக் கவனிப்பதற்கு அனுமதிப்பதும் இல்லை" — என்று வருந்திக் கூறியிருக்கிறார். இக்கருத்து மேலும் சிந்திப்பதற்கு ஏற்ப அமைந்துள்ளது. இன்றைய மாணவன் ஒருவன் மேல் பெற்றோர், ஆசிரியர், அரசியல்வாதி மூவரில் யாரும் முழுப் பொறுப்பைக் காட்டுவதில்லை. ஆசிரியர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுவிட்டது. அரசியல்வாதியின் பொறுப்பு தனக்குப் பயன்படும் எல்லையோடு முடிந்து விடுகிறது. பெற்றோர்கள் இன்னும் பொறுப்போடு கவனிக்க வேண்டும் என்று துணைவேந்தர் கூறுவதில் நியாயமிருக்கவே செய்கிறது.

திருடிய மருந்துகள்

சென்னை நகரிலும், பிற இடங்களிலுமுள்ள பல்வேறு மருத்துவ மனைகளிலிருந்து திருடப்பட்ட ரூ. 13,000 பெறுமானமுள்ள விலை உயர்ந்த மருந்துகளை ஒரு லாட்ஜிலிருந்தும், மற்றொரு வீட்டிலிருந்தும் போலீஸார் கைப்பற்றியிருக்கிறார்கள். பொது உபயோகத்துக்கான மருந்துகளையும், 'ஊசி போடும் 'சிரிஞ்சு' முதலியவற்றையும், திருடி விற்பவர்கள் கடுமையான சமூகக் குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். கைப்பற்றப்பட்ட மருந்துகளில் சென்னை நகரில் உள்ள இரண்டு ஆஸ்பத்திரிகளின் முத்திரைகளும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. பொதுச் சொத்துக்களைத் திருடி விற்கும் கூட்டம் எல்லாப் பிரிவுகளிலும் இருக்கிறது. பொது மக்களும், அதிகாரிகளும் ஒத்துழைத்து இந்தத் திருட்டுக் கூட்டத்தைக் கண்டு பிடிக்கிறவரை ஊழல்களிலிருந்து விடுதலை இல்லை. அப்பாவி நோயாளிகளின் பாவத்தைக் கொட்டிக் கொண்டு மருந்துகளைத் திருடிவிட்டால் அந்த நோயாளிகளைக் காப்பது யார்?

வயிற்றுக் கோளாறு?

வாயுவா?
அமில உபாதையா?
நெஞ்செரிச்சலா?
அஜீரணமா?





2 ரென்னி மாத்திரைகளை
மெல்லுங்கள்...
விரைவிலேயே
நிவாரணம் பெற

பெப்பர்மின்ட்
சுவையுள்ள ரென்னியை கைவசம்
வைத்திருங்கள்.

நிக்கோலஸ் ® தயாரிப்பு

mcm/nl/4 tam



குற்றத்தைக் குறைக்கும் வழி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

ராஜாங்கம் எதற்காக இருக்கிறது? ஒரு தேசத்தில் அதிக பலம் உள்ளவர்கள் குறைந்த பலம் உள்ளவரை ஹிம்ஸிக்கலாம். பெரிய கூட்டத்தார் சிறிய கூட்டத்தாரைக் கஷ்டப்படுத்தலாம். பலர் சேர்ந்து ஒருவனை நிர்ப்பந்தப்படுத்தி அவனது சொத்து, வீடு முதலியவற்றை ஆக்கிரமித்துக் கொள்ளலாம். இப்படி எல்லாம் நேராமல் தேசத்தில் ஒழுங்கு இருக்கச் செய்வதற்கு ஏற்பட்டதே ராஜாங்கம்.

தப்புச் செய்பவர்களை அவ்விதம் செய்யாமலிருக்கச் செய்வதற்காக ராஜாங்கம் என்ன செய்கிறது? தண்டனை தருகிறது. தண்டனை உண்டு என்ற பயம் இருப்பதாலேயே பலர் தப்பு செய்யாமல் தடுக்கப்படுகிறார்கள்.

. இம்சை செய்த ஒருவனுக்கு, அவன் செய்ததைக் காட்டிலும் ராஜாங்கம் அதிக இம்சை தருகிறது. பத்து ரூபாயை ஒருவன் திருடினால், திருட்டுக் கொடுத்தவருக்குச் சிறிது கஷ்டம் உண்டாகிறது. திருடியவனுக்கோ அதைவிடப் பெரிய கஷ்டமாகப் பல நாட்கள் சிறைவாசம் விதிக்கப்படுகிறது. இப்படிச் செய்தால்தான் அவன் மீண்டும் அந்தத் தப்புப் பண்ண மாட்டான், மற்றவர்களும் அந்தத் தப்பைப் பண்ணப் பயப்படுவார்கள் என்கிற அடிப்படையில் தண்ட நீதி அமைந்திருக்கிறது. மனித இயல்புப்படி பார்க்கும் போது இதையும் ஒப்புக் கொள்ளவே நேருகிறது.

ஆனால் இதனிலும் சிலாக்கியமான ஓர் உபாயத்தையும் அரசாங்கம் அதே சமயத்தில் விருத்தி செய்ய வேண்டும். குற்றம் இழைத்த பின் ஒருவரைத் தண்டிப்பதும், ஒருவர் ஸ்வபாவமான தர்ம உணர்ச்சி இல்லாமல் தண்டனைக்காகப் பயந்தே குற்றம் செய்யாமல் இருக்கச் செய்வதும் இரண்டாம் பட்சம்தான். குற்றம் செய்கிற எண்ணமே தோன்றாமல் இருக்கச் செய்வதுதான் சிலாக்கியமானது.

முதலில் ஒருவன் இம்சை தருவது, பிறகு அரசாங்கம் அவனுக்கு அதைவிட அதிக இம்சை தருவது என்கிற 'அர்த்த சாஸ்திர' நீதியைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தாலும் இந்த அர்த்த சாஸ்திரமும் தர்ம சாஸ்திரத்தின் காலில் விழுந்து கிடக்க வேண்டியது தான் என்பதை ராஜாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். தர்ம சாஸ்திரப்படி ஒழுகும் சத்துக்கள் உருவாவதற்கு உரிய சூழ்நிலையை அரசாங்கம் காப்பாற்றிக் கொடுத்தால், ஜனங்களுக்குக் குற்றம் செய்கிற உணர்வே குறைந்து போய்விடும். தர்மம் அறிந்தவர்கள், தர்மத்தை அனுஷ்டிப்பவர்கள் விருத்தியாவதற்கு வசதி இருந்தால் அவர்கள் மற்றவர்களிடமும் சாந்தத்தைப் பரப்புவார்கள். சண்டை, பூசல், குற்றம் எல்லாம் குறையும். முதலில் ராஜாங்கப் பதவியில் உள்ளவர்கள் தர்மசீலர்களாய் இருக்க வேண்டும். 'இவர்கள் செய்வதும் சொல்வதும் சொந்த நன்மைக்காக அல்ல; நம் நன்மைக்காகத்தான்' என்று ஜனங்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய தர்மிஷ்டர்கள் தர்மப்படியே ராஜாங்கம் நடத்த வேண்டும். இவ்விதம் தர்மிஷ்டர்கள் தர்மங்களைச் சாந்தமாக எடுத்துச் சொன்னால் ஜனங்கள் அதன்படியே நடப்பார்கள். ராஜாங்கத்தார் மட்டும் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாது. தர்மசீலர்களான மற்றவர்களும் சேர்ந்து இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். தர்மிஷ்டர்கள் இந்தக் கைங்கரியம் செய்வதற்கு உகந்த சூழ்நிலையை ராஜாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

போலீஸையும் கோர்ட்டையும் விருத்தி செய்வதைவிட தர்மக்ஞர்களை விருத்தி பண்ணுவதில் ராஜாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். சொந்த நலன்களைக் கருதாமல், உபதேசத்தைப் பணம் பண்ணும் தொழிலாக்காமல், பரோபகாரமே லட்சியமாகக் கொண்டு சாந்தமாகத் தர்மங்களை எடுத்துச் சொல்கிறவர்களுக்கு ராஜாங்கம் உற்சாகம் தர வேண்டும். இந்த உற்சாகத்தாலேயே மேலும் பலர் அவ்விதம் உருவாவார்கள்.

கோர்ட்டுகள் அதிகமாகின்றன என்றால் குற்றங்கள் அதிகமாகின்றன என்றே அர்த்தம். இதற்குப் பதில் கோயில்கள் அதிகமானால் எங்கும் சாந்தம் பரவும். பழைய கால ராஜாக்கள் கோர்ட்டுகளுக்குப் பதிலாகக் கோயில்களைக் கட்டி வந்தார்கள்; பழைய கோயில்களைப் புதுப்பித்தார்கள். அந்தக் கோயில்களிலேயே பொழுதுபோக்குக்கான சகல கலைகளும்கூடத் தெய்விகமாக்கப்பட்டு அர்ப்பணமாயின. ஜனங்களும் ஆலய வழிபாடு செய்து சாந்தர்களாக இருந்தார்கள். இப்போதுள்ளது போலச் சமூகச் சச்சரவு, பூசல் எல்லாம் அப்போது இல்லை.


சட்டம் போட்டுக் குற்றம் செய்யாமல் தடுப்பதைவிட, ஒரு நல்ல மார்க்கத்தைக் காட்டி அதில் ஜனங்களைத் திருப்பித் தேசத்தில் சாந்தியை உண்டாக்குவதுதான் சிலாக்கியம். இந்த சாந்திதான் நிலைத்தும் நிற்கும். சாந்தர்களுக்கும், சத்துக்களுக்கும், தர்மிஷ்டர்களுக்கும் ராஜாங்கம் மதிப்புத் தந்தாலே தேசத்திலும் இந்த நல்ல பண்புகள் விருத்தியாகும்.



இப்போது பாரீர் பியர்ஸ்

சென்னை நகரம்,
திருவனந்தபுரம்,
கோழிக்கோடு
ஆகிய இடங்களில்
மட்டுமே கிட்டும்.

புத்தெழில் கொஞ்சும் அட்டைப் பெட்டிக்குள்ளே!



அன்றும் இன்றும்... சிலருக்கு அதே இளம் தளிர் மேனி. வெளிப் பகட்டுக் காட்டும் ரகம் அல்ல. புதிதாக வந்துள்ள பியர்ஸ் அட்டைப் பெட்டியைப் பார்த்தீர்களா? கொஞ்சும் எழில் கோலப் புதுமை. உறையழகே உரைக்குதே... உள்ளிருப்பது மாணிக்கம்... உமதுள்ளம் கவர்ந்த சோப். பியர்ஸ்— துளிரெனத் தழுவும் தூய, மென்குண கிளிஸரின் சோப். உள்ளார்ந்த தூய்மையை உமக்குக் கண்கூடாகக் காட்டுவது பியர்ஸ்.

பியர்ஸ் சருமக் களை...கன்னிப் பருவக் களை.

லின்டாஸ்- PS. 46-140 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.


அலை ஓசை
அமரர் கல்கி
மூன்றாம் பாகம்
எரிமலை

பூர்வகதை

பட்டாபிராமன், அமரநாதன், சூரியநாராயணன் என்னும் மூன்று நண்பர்கள் தேவ பட்டணத்தில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மூவரிலும் சூரியா வயதில் சின்னவன். தன்னுடைய தங்கை லலிதாவைக் கல்யாணத்துக்காகப் பார்க்க மதராஸிலிருந்து மனுஷர்கள் வருகிறார்கள் என்று கேள்விப்பட்டு ராஜம்பேட்டைக் கிராமத்துக்குச் சூரியா சென்றான்.

ராஜம்பேட்டை பட்டாமணியம் கிட்டாவய்யரின் சகோதரி பம்பாயில் வாழ்க்கைப்பட்டிருந்தாள். அவள் நீடித்த நோயினால் மெலிந்திருப்பது அறிந்து கிட்டாவய்யர் பம்பாய் சென்று ராஜத்தையும் அவளுடைய புதல்வி சீதாவையும் அழைத்து வந்திருந்தார்.

சூரியாவுக்குத் தன் பம்பாய் அத்தை வாழ்க்கையெல்லாம் துயரப்பட்டவள் என்று தெரிய வந்தது. அதன் காரணமாக அத்தையின் பேரிலும் அவள் புதல்வி சீதாவின் பேரிலும் சூரியா மிக்க அனுதாபம் கொண்டான்.

மதராஸிலிருந்து லலிதாவைப் பார்க்க வந்த சௌந்தரராகவன் எம். ஏ., மாஜி டைப் இட்டு- பத்மலோசன சாஸ்திரியின் புதல்வன், புதுடில்லி சர்க்கார் காரியாலயத்தில் வரவு செலவு இலாகாவில் அவனுக்குப் பெரிய உத்தியோகம் ஆகியிருந்தது. கிட்டாவய்யர் குமாரி லலிதாவைப் பார்க்க வந்த சௌந்தரராகவன், அவருடைய சகோதரியின் பெண் சீதாவைத் தேர்ந்தெடுத்து அவளை மணம் புரிந்து கொள்வதாகச் சொன்னான்.

சூரியாவுக்கு இது மிக்க திருப்தி அளித்தது. ஏனெனில் தன் தங்கை லலிதாவைத் தன்னுடைய சிநேகிதன் பட்டாபிராமனுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் மனத்தில் இருந்தது. அதை இப்போது வெளியிட்டுச் சொல்லிப் பெற்றோர்களின் சம்மதம் பெற்றான்.

ஒரே பந்தலில் இரண்டு முகூர்த்தங்களும் நடைபெற்றன. சீதாவின் தகப்பனார் துரைசாமி ஐயர் முதலில் கல்யாணத்துக்குச் சம்மதித்துக் கடிதம் எழுதியிருந்தார். கல்யாணத்துக்கு முதல் நாள் அவரிடமிருந்து 'கல்யாணத்தை நிறுத்தி விடவும்' என்று தந்தி வந்தது. அதை முதலில் வாங்கிப் பார்த்த சூரியா, "தந்தி உண்மையானது தானா?" என்பதில் சந்தேகம் கொண்டு மற்றவர்களிடம் அதைப் பற்றிச் சொல்லாமல் இருந்து விட்டான்.

திருமாங்கல்ய தாரணம் நிறைவேறிய சிறிது நேரத்துக்கெல்லாம் துரைசாமி ஐயர் வந்து சேர்ந்தார். சூரியாவிடமிருந்து கல்யாணம் நடந்த விஷயத்தை அறிந்து கொண்டு 'கடவுளின் சித்தம்' என்று சொல்லித் திருப்தியடைந்தார்.

• • •

நாலு வருஷங்களுக்குப் பிறகு 1938ம் ஆண்டில் சௌந்தரராகவன் புதுடில்லியில் வசதியான வீடு அமர்த்திக் கொண்டான். அவனுடைய மனைவி சீதாவும் தாயார் காமாட்சி அம்மாளும் குழந்தை வஸந்தியும் டில்லிக்கு வந்து சேர்ந்தார்கள்.

கிராமத்தில் குடியானவர்கள் தகராறு காரணமாகச் சூரியாவுக்கும் அவனுடைய தமையன் கங்காதரனுக்கும் சண்டை மூண்டது.

சூரியா காலேஜ் படிப்பை நடுவில் நிறுத்தி விட்டு ஹரிபுரா காங்கிரஸுக்குச் சென்றான். சீதாவும் அவள் மாமியாரும் சென்ற அதே ரயிலில் சூரியாவும் பிரயாணம் செய்தான்.

ஹரிபுரா காங்கிரஸிலிருந்து திரும்பி வந்து டில்லியிலே வசிக்கத் தொடங்கினான்.

ராகவனும் சீதாவும் சூரியாவும் ஆக்ராவுக்குத் தாஜ்மகால் பார்க்கச் சென்றார்கள். அங்கே சௌந்தரராகவன் அவனுடைய பழைய சிநேகிதி தாரிணியைச் சந்தித்தான். தாஜ்மகாலில் சூரியா மற்றவர்களுடன் விவாதம் சண்டையிட்டு விட்டு டில்லிக்குத் திரும்பி விட்டான். மற்றவர்கள் ஃபதேபூர் ஸிக்ரி பார்க்கச் சென்றார்கள். ராகவனும் தாரிணியும் சிநேகமாகப் பழகுவதைப் பார்த்துச் சீதாவுக்கு உள்ளம் கொதித்தது. ஏரியில் படகில் சென்றபோது வெறி பிடித்தவள் போல அலறிக் கொண்டு ஏரியில் விழுந்து விட்டாள். ராகவனுக்கு நீந்தத் தெரியாது. அவன் திகைத்து நிற்கையில் தாரிணி தண்ணீரில் குதித்துச் சீதாவைக் காப்பாற்றினாள். அது முதல் தாரிணியைச் சீதா தெய்வமாகப் போற்றத் தொடங்கினாள்.

முன்பு சீதாவின் தாயார் பம்பாயில் நோய்ப்பட்டிருந்தபோது ஒரு வடநாட்டு ஸ்திரீ மர்மமாக வந்து சீதாவுக்கு ஒரு ரத்தின ஹாரமும் அவளுடைய கல்யாணத்துக்கு இரண்டாயிரம் ரூபாய் சீதனமும் கொடுத்துவிட்டுப் போனாள். அந்த ஸ்திரீயின் வளர்ப்புப் பெண் தாரிணி என்று சீதா பின்னால் தெரிந்து கொண்டாள்.

டில்லியில் ராகவனுடைய வீட்டுக்குச் சமீபத்தில் ஒரு கொலை நடைபெற்றது. தாரிணியின் வளர்ப்புத் தாய், இருட்டிய பிறகு கையில் இரத்தம் தோய்ந்த கத்தியுடன் வந்து அன்றிரவு தான் ஒளிந்திருப்பதற்கு இடம் கொடுக்கும்படி சீதாவை வேண்டினாள். பாதி பயத்தினாலும் பாதி பிரியத்தினாலும் சீதா அதற்கு உடன்பட்டாள். பின்னால் கொலை செய்தவன் வேறொரு மனிதன் என்று வெளியாயிற்று.

சூரியாவும் தாரிணியும் சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்து வேலை செய்து வந்தார்கள். அவர்களுடைய சிநேகம் ராகவனுடைய மனத்தில் பொறாமைத் தீயை வளர்த்தது. ஒருநாள் ராகவன் தன் மனத்தைத் திறந்து தாரிணியிடம் தன் காதலை வெளியிட்டான். அவளை இரண்டாவது மனைவியாக மணப்பதாகச் சொன்னான். தாரிணியோ தன்னுடைய வாழ்க்கை இலட்சியமும் ராகவனுடைய வாழ்க்கை இலட்சியமும் பொருத்தமாட்டா என்று சொல்லி ராகவன் காதலை உறுதியாக நிராகரித்தாள்.

மேற்கூறிய சம்பவங்கள் எல்லாம் நடைபெற்று ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன.

1. ஊதுவத்தி வியாபாரி

தேவபட்டணத்துத் தேரோடும் வீதியில் ஒரு குதிரை வண்டி கடகடவென்ற சத்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. வண்டிக்குள்ளே ஓர் இளம் பிரயாணி உட்கார்ந்திருந்தான். அவன் தலையிலே பல வர்ணக்கோடுகள் போட்ட ஒரு மாலையைத் தலைப்பாகையாகக் கட்டிக் குஞ்சம் தொங்கவிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தால், மத்திய இந்தியாவிலிருந்து வரும் வியாபாரியைப் போல் காணப்பட்டது. அவனுக்குப் பக்கத்தில் இருந்த தகரப் பெட்டியும் துணி மூட்டையும் மேற்கூறிய ஊகத்தை உறுதிப்படுத்தின.

அட்வகேட் ஆத்மநாதய்யரின் வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றது. இளைஞன் வண்டிக்குள்ளிருந்தபடியே வண்டிக்காரனுக்கு வாடகைப் பணம் கொடுத்துவிட்டு ஒரு கையில் பெட்டியையும் ஒரு கையில் துணி மூட்டையை

யும் எடுத்துக் கொண்டு வண்டியிலிருந்து இறங்கினான்.

''நிற்கட்டுமா, சேட்? ஜல்தி வருவீங்களா?'' என்று வண்டிக்காரன் கேட்டதற்கு ''நை! தும் ஜாவ்!'' என்றான் அந்த வாலிபன். ஜட்கா வண்டி புறப்பட்டுச் சென்றது.

ஆத்மநாதய்யர் வீட்டு வாசலில் இரும்புக் கம்பிக் கதவண்டை அந்த வாலிபன் நின்று உள்ளே எட்டிப் பார்த்தான். ஓர் இளம் பெண்மணியின் முகம் தெரிந்தது. ''ஊதுவத்தி வேண்டுமா, அம்மா! அத்தர் புனுகு ஜவ்வாது வேண்டுமா? பௌடரிஸ் ஸில்க் வேண்டுமா?'' என்று அந்த வாலிபன் கேட்டதற்கு உள்ளேயிருந்து ''ஒன்றும் வேண்டாம், போ!'' என்று ஒரு பெண் குரலில் பதில் வந்தது.

''என்னம்மா, இப்படி ஒரேயடியாய் ஒன்றும் வேண்டாம் என்று சொல்றே? இந்த வீட்டில்தானே நாளைக்குக் குழந்தைக்குச் சஷ்டியப்த பூர்த்திக் கல்யாணம் என்று சொன்னாங்க?'' என்று சொல்லிக் கொண்டே அந்த மார்வாரி இளைஞன், பூட்டப்படாமல் வெறுமே சாத்தியிருந்த இரும்புக் கம்பிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான்.

வீட்டுத் தாழ்வாரத்துக்கும் வெளிக் கேட்டுக்கும் மத்தியில் இருந்த சுமார் பத்து அடி அகலமுள்ள இடத்தில் ஒரு பன்னீர் மரம், ஒரு மனோரஞ்சிதச் செடி, சில அழகிய பல வர்ணக் குரோடன்ஸ் செடிகள் ஆகியவை இருந்தன.

வீட்டின் வாசல் திண்ணைக்கு அருகில் ஓர் இளம் பெண்ணும் ஒரு வயதான





ஸ்திரீயும் நின்றார்கள். ''பார்த்தாயோ இல்லையோ, இவன் சொல்லுகிறதை! குழந்தைக்கு ஒரு வயது ஆகப் போகிறது; சஷ்டி அப்த பூர்த்திக் கல்யாணமாம்!'' என்று சொல்லிவிட்டுக் கடகடவென்று சிரித்தாள் அந்த இளம் பெண்.

''திடு திடுவென்று உள்ளே நுழைந்து வருகிறானே? கேள்வி முறையில்லையா? கதவைப் பூட்டி வைக்க வேண்டும்!'' என்றாள் வயதான ஸ்திரீ.

உள்ளே நுழைந்த இளைஞன் அவர்களுடைய பேச்சைக் கவனியாதவன் போல் ''அரே பாப்ரே! இங்கே இருக்கிற புஷ்பங்களின் வாசனை நம்முடைய ஊதுவத்தி, அத்தர், சவ்வாது வாசனையைத் தோற்கடித்து விடும்போலிருக்கிறதே!'' என்றான்.

பிறகு பெட்டியையும் மூட்டையையும் கொண்டு போய்த் திண்ணையில் வைத்து, ''ஏன் அம்மா! நிஜமாக ஊதுவத்தி, அத்தர், புனுகு சவ்வாது ஒன்றும் வேண்டாமா?'' என்று சொல்லிக்கொண்டே பெட்டியைத் திறந்ததும், உள்ளேயிருந்து ஊதுவத்தியின் மணம் கம்மென்று வீசிற்று.

''ஏன் லலிதா, நல்ல ஊதுவத்தியாயிருக்கிறதே! கொஞ்சம் வேணுமானால் வாங்கி வைக்கலாமே?'' என்று லலிதாவின் தாயார் சரஸ்வதி அம்மாள் சொன்னாள்.

''ஒன்றும் வேண்டாம்! நீ கொசடு போ, அப்பா!'' என்றாள் லலிதா.

''அப்படி முகத்தில் அடித்ததுபோல் சொல்லாதே சின்னம்மா! பெரியம்மா சொல்கிறதைக் கேள்!'' என்று ஊதுவத்தி வியாபாரி சொல்லி விட்டு, சரஸ்வதி அம்மாளைப் பார்த்து, ''ஊரிலேயிருந்து கிட்டாவய்யர் வந்திருக்கிறார்களா, அவர்களுடைய மூத்த பிள்ளை கங்காதர ஐயர் வந்திருக்கிறார்களா?'' என்றான்.

''ஏது, ஏது! உனக்கு எல்லாரையும் தெரியும் போலிருக்கிறதே! நீ யாரப்பா?'' என்று கேட்டாள் சரஸ்வதி அம்மாள்.

''காலம் அப்படி ஆகி விட்டது! என்ன செய்யலாம்? பெற்ற தாய்க்குப் பிள்ளையை அடையாளம் தெரியாமல் போய்விட்டது!'' என்று ஊதுவத்தி வியாபாரி சொல்லி விட்டுத் தலையில் சுற்றியிருந்த வர்ணக் கோட்டு முண்டாசைக் கையில் எடுத்தான்.

''அம்மா! நம்ம சூரியான்னா?'' என்று கூவினாள் லலிதா.

''அட என் கண்ணே!'' என்று சொல்லிக் கொண்டு சரஸ்வதி அம்மாள் தன்னுடைய குமாரனைக் கட்டிக்கொண்டாள்.

''ஏன், சூரியா! இது என்ன வேஷம்? சகிக்கவில்லையே?'' என்றாள் லலிதா.

''சும்மா உங்களையெல்லாம் ஒரு தமாஷ் செய்யலாம் என்று நினைத்தேன்'' என்றான் சூரியா.

உடனே சரஸ்வதி அம்மாள், ''தமாஷாவது, மண்ணாங்கட்டியாவது? அழகாயிருக்கிறது! லலிதாவின் மாமனார் இப்போது கோர்ட்டிலேயிருந்து வந்து விடுவார். உன்னை இந்தக் கோலத்திலே பார்த்தால் ஏதாவது நினைத்துக்கொள்வார். உன் அப்பா, அண்ணா எல்லாரும் இராத்திரி ரயிலிலே வருகிறார்கள். இந்த வேஷத்தைக் கலைத்து விட்டு மறு காரியம் பார்!'' என்றாள்.


''ஆகட்டும்! ஆனால் வேஷத்தைக் கலைப்பதற்கு என்னை அரை மணி நேரம் தனியாக இருக்க விட வேண்டும். லலிதா! மேலே உன் அகத்துக்காரர் அறை காலியாகத்தானே இருக்கிறது!'' என்று சூரியா கேட்டான்.

லலிதா பதில் சொல்வதற்குள் சரஸ்வதி அம்மாள், ''காலியாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தப் பெண் அந்த அறையில் யாரும் போவதற்கு விடுவதில்லை. மாப்பிள்ளையின் படத்தை அங்கே மாட்டியிருக்கிறாள். அந்தப் படத்துக்குத் தினம் பூத்தொடுத்து மாலை போடுகிறது இவளுக்கு ஒரு வேலை! சத்தியவானுக்காகச் சாவித்திரிகூட இப்படித் தபசு இருந்திருக்க மாட்டாள்! ஏண்டாப்பா சூரியா? உனக்குச் சமாசாரம் தெரியுமோ, இல்லையோ?'' என்றாள்.

''மாப்பிள்ளை ஜெயிலுக்குப் போயிருக்கிறதைத்தானே சொல்கிறாய்? அது எனக்குத் தெரியாமல் இருக்குமா அம்மா? ஆனால் பத்திரிகையிலே படித்ததும் ஒரே ஆச்சரியமாகத்தான் இருந்தது. நம்ம பட்டாபி இப்படித் துணிந்து இறங்குவான் என்று நான் நினைக்கவேயில்லை'' என்றான் சூரியா.

''ஆனால் ஒன்று, சூரியா! இவர் மற்றவர்களையெல்லாம்போலக் கோர்ட்டைக் கொளுத்தினார்; தண்டவாளத்தைப் பெயர்த்தார்; பாலத்தை உடைத்தார் என்றெல்லாம் பெயர் வாங்கிக் கொண்டு ஜெயிலுக்குப் போகவில்லை. போன அக்டோபர் இரண்டாந் தேதி காந்தி மகான் ஜயந்தியில் காந்திஜியைச் சிறையில் வைத்திருப்பதைக் கண்டித்துப் பொதுக் கூட்டத்தில் பேசினார். அதற்காக இவரைப் பிடித்துப் போட்டு விட்டார்கள்!'' என்றாள் லலிதா.

''இந்தக் கஷ்டமெல்லாம் என்னத்திற்காக, எப்போது முடியப் போகிறது என்று தெரியவில்லை. எல்லாம் என்னுடைய துரதிர்ஷ்டம்தான்! நீயானால்



சுவை மிகுந்த போஷாக்கு செறிந்த பானம்

விவா சுவையானது. பெரியவர்களுக்குப் பிடித்தமானது. குழந்தைகள் விரும்புவது. இல்லத்தரசிகளின் நம்பிக்கைக்கு உகந்தது—விவா. எல்லோரும் விரும்புவது விவா.

ஏனெனில், விவா தூய பாலாடைக் கலவையோடு இன்னும் பல நல்ல பொருட்கள் அடங்கியது. விவாவில் உள்ள ப்ரோட்டீன் உங்களுக்கு வலிமை அளிக்கிறது. விவாவில் அடங்கிய கார்போஹைட்ரேட் உங்களுக்குப் புத்துணர்ச்சியைத் தருகிறது. விவாவில் மால்ட் செய்யப்பட்ட பார்லியும், கோதுமையும் நிறைந்துள்ளது. எனவே விவா எல்லாவற்றையும் விட சுவை மிகுந்த போஷாக்கு பானமாகத் திகழ்கிறது. விவா அதிநவீன தொழில்நுட்ப முறையில் உருவானது. எனவே அதன் பூரண போஷாக்கு தன்மை நீடித்து நிலைத்து நிற்கிறது. மேலும் உடனடியாக கரைகிறது.

இன்றே உங்கள் குடும்பத்துக்கு ஒரு பாட்டில் விவா வாங்கிச் செல்வீர்—புதிய வலிமையும் புத்துணர்ச்சியும் பெறுவீர்!

சிறந்த சுவைக்கும், செறிந்த சக்திக்கும் நவீன விவா

ULKA-V4- TAM

இப்படி அம்மாவுக்குப் பிள்ளையாக இராமல் போய் விட்டாய்! ஊர் ஊராய் அலைந்துகொண்டிருக்கிறாய். லலிதாவை எவ்வளவோ நல்ல இடம் என்று பார்த்துக் கொடுத்தேன். அவளுடைய தலையெழுத்து இப்படி இருக்கிறது!'' என்று சரஸ்வதி அம்மாள் வருத்தப்பட்டுக் கொண்டு சொன்னாள்.

''நம்ம ராமாயணத்தை அப்புறம் வைத்துக் கொள்ளலாமே, அம்மா! முதலிலே சூரியா அவன் காரியத்தைப் பார்க்கட்டும். எல்லாரும் வருவதற்குள்ளே!'' என்றாள் லலிதா.

''உன் அகத்துக்காரரின் அறையை இரண்டு நாட்கள் நான் வைத்துக் கொள்ளலாம் அல்லவா லலிதா?''

''பேஷாக வைத்துக் கொள்ளலாம். நீயும் அவரும் எவ்வளவு சிநேகம் என்று எனக்குத் தெரியாதா? அடிக்கடி உன்னைப் பற்றி அவர் பேசிக் கொண்டிருப்பார். அவருடைய அறையிலே உனக்கு இல்லாத பாத்தியதை வேறு யாருக்கு?'' என்றாள் லலிதா.

மேல் அறையிலிருந்த மச்சுப் படி வழியாகச் சூரியா பெட்டி மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு மேலே போய்ப் பட்டாபிராமனுடைய அறையை ஆக்கிரமித்துக் கொண்டான். அந்த அறை வெகு சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. மேஜை, அதன் மேலிருந்த மைக்கூடு, பேனா, புத்தக அலமாரி, கோட் ஸ்டாண்டு எல்லாம் ஒரு தூசி துப்பு இல்லாமல் இருந்தன. சுவர் மூலைகளில் ஓர் ஒட்டடை கிடையாது. ஒரு பக்கச் சுவரில் சரஸ்வதி அம்மாள் சொன்னது போல் பட்டாபிராமன் படம் காணப்பட்டது. இன்னொரு பக்கச் சுவரில் மகாத்மா காந்தி படம் இருந்தது. இரண்டு படங்களும் அப்போதுதான் தொடுத்துப் போட்ட பூமாலைகளுடன் விளங்கின. மல்லிகைப் பூவின் மணம் அறையில் கம்மென்று நிறைந்திருந்தது.

பின்னோடு தன்னை அறையிலே கொண்டு விட வந்த லலிதாவைப் பார்த்து, ''என்ன லலிதா! மகாத்மா காந்தியையும் உன் அகத்துக்காரரையும் ஒன்றாக வைத்து விட்டாய் போலிருக்கிறதே! இனிமேல் உன் புருஷனையும் 'மகாத்மா பட்டாபிராமன்' என்று அழைக்க வேண்டியதுதான் போலிருக்கிறது!'' என்றான் சூரியா.

''மகாத்மா காந்தி உலகத்திலேயே பெரியவர்; ஆகையால் அவரைப் பூஜிக்கிறேன்; உன்னுடைய சிநேகிதர் எனக்குத் தெய்வம்; ஆகையால் அவரை



'' சார்! ஒரு வேண்டுகோள்.''
'' என்ன ?''
'' ரயிலில் எத்தனையோ இடங்களுக்குப் போய் வந்துட்டேன். ஆனா ஒரு நாளும் என் லைஃப்பிலே இதுவரை ரயில் டிக்கட்டைப் பார்த்ததே இல்லே. தயவு செய்து மாதிரிக்கு ஒன்று காட்டுறீங்களா ?''

யும் பூஜை செய்கிறேன்!'' என்றாள் லலிதா.

''உன்னுடைய பக்தியை ரொம்பப் பாராட்டுகிறேன், லலிதா! உன்னுடைய மாமியார் கூடக் காலமாகிவிட்டாளாமே!''

''அவர் கண்ணை மூடி இப்போது வருஷம் இரண்டாகிறது. போன வருஷத்தில் உயிரோடிருந்து பிள்ளை ஜெயிலுக்குப் போனதைப் பார்த்திருந்தால் நெஞ்சு உடைந்து போயிருப்பார். என்னுடைய நெஞ்சு கல் நெஞ்சு; அதனால் உயிரோடிருக்கிறேன், அண்ணா! என் மாமியாரைப் பற்றி நான் புகார் கூறியதை எல்லாம் நினைத்தால் எனக்கு வெட்கமாக இருக்கிறது. அவரைப் போல் உத்தமி இந்த உலகத்திலேயே கிடைக்க மாட்டார். என் பேரில் அவருக்கு இருந்த பிரியம் அப்புறந்தான் எனக்குத் தெரிய வந்தது. என்னைக் குற்றம் கூறியதெல்லாம் என்னுடைய நன்மைக்காகவே என்று தெரிந்து கொண்டேன். கேள், சூரியா! என் மாமியார் சாகும்போது என் கையை அவருடைய கையால் பிடித்துக் கொண்டே செத்துப் போனார். அவருடைய பிள்ளையைப் பற்றிக் கூட அவ்வளவு கவலை காட்டவில்லை.''

''உலகமே அப்படித்தான் இருக்கிறது, லலிதா! நாம் ரொம்ப நல்லவர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் பொல்லாதவர்களாகி விடுகிறார்கள், பொல்லாதவர்கள் நல்லவர்களாகி விடுகிறார்கள். உலகத்தின் இயல்பே மாறுதல்தானே? சீதாவின் புருஷன் சௌந்தர ராகவன் இப்படிப்பட்ட

மூர்க்கனுவான் என்று யார் எதிர்பார்த்தார்கள்? உன்னுடைய அதிருஷ்டக் கட்டையைப் பற்றி அம்மா சொன்னுளே, பட்டாபிக்குக் கொடுக்காமல், சௌந்தர ராகவனுக்கு உன்னைக் கல்யாணம் செய்து கொடுத்திருந்தால் அப்போது தெரிந்திருக்கும். ஐயோ! சீதா படுகிற கஷ்டத்தை நினைத்தால் எனக்கு இதயம் வெடித்து விடும்போலிருக்கிறது.''

''ஆம், அண்ணு! அதைப் பற்றி நீ எனக்கு விவரமாகச் சொல்ல வேண்டும். டில்லிக்குப் போன புதிதில் எவ்வளவோ உற்சாகமாகக் கடிதம் எழுதியிருந்தாள். வர வரக் கடிதம் வருவதே குறைந்து விட்டது. கடைசியாக அவள் எழுதிய கடிதங்கள் ஒரே துக்க மயமாக இருந்தன.. குழந்தையைக்கூட மாமியாருடன் மதராஸுக்கு அனுப்பி விட்டாளாமே? எதற்காக?''

''விவரமாகப் பிற்பாடு சொல்கிறேன். மொத்தத்தில் சீதாவின் வாழ்க்கை நரக வாழ்க்கையாகி விட்டது. உன்னுடைய நிலைமை எவ்வளவோ தேவலை. உன் மாமனுர் எப்படி இருக்கிறுர்?''

''என் மாமனுர் என் பேரில் காற்றும் படக் கூடாது என்கிறுர். வீட்டுக்கு நான்தான் இப்போது எஜமானி. இரும்புப் பெட்டிச் சாவி என்னிடம்தான் இருக்கிறது. குழந்தைக்கு நாளைக்கு ஆண்டு நிறைவுக் கல்யாணம் வேண்டாம் என்று சொன்னேன். 'இவர் ஜெயிலில் இருக்கும்போது கல்யாணம் எதற்கு?' என்றேன். என் மாமனுர் 'அதெல்லாம் கூடாது; வீட்டுக்கு முதல் பிள்ளைக் குழந்தை; கட்டாயம் அப்த பூர்த்திக் கல்யாணம் செய்ய வேண்டும்' என்று சொல்லி விட்டார். அதற்குத் தகுந்தாற்போல் இவரும் சிறைச்சாலையிலிருந்து எழுதியிருந்தார்.''

''எதிர் வீட்டுக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட மனஸ்தாபம் எப்படி இருக்கிறது? போக்குவரத்து நின்றது நின்றதுதானு?''

''இதுவரையில் அப்படித்தான். ஆனுல் இரண்டு நாளைக்கு முன்பு இவருடைய சிநேகிதர் அமரநாதனும் அவர் மனைவி சித்ராவும் கல்கத்தாவிலிருந்து வந்திருக்கிறுர்கள். நாளைக் காலையில் மாமனுரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு அவர்களைப் போய் அழைத்து விட்டு வரலாமென்றிருக்கிறேன். எதிர் வீட்டுக்காரர்கள் வராமல் என்ன கல்யாணம் வேண்டிக் கிடக்கிறது?''

''அப்படியே செய், லலிதா! கட்டாயம் போய் அவர்களை அழைத்து விட்டு வா! நான் இன்று ராத்திரியே எதிர் வீட்டுக்குப் போய் வரலாம் என்றிருக்கிறேன். நானும் உன் புருஷனும் அமரநாதனும் எதிர்வீட்டு மொட்டை மாடியில் உட்கார்ந்து எத்தனை நாட்கள் குஷியாகப் பேசிக் கொண்டிருந்திருக்கிறேம் தெரியுமா? அப்படி சிநேகமாயிருந்தவர்கள் திடீரென்று விரோதம் செய்து கொள்ள எப்படித்தான் முடிந்ததோ, தெரியவில்லை!''

''இவருக்கு அந்த விஷயம் ஒன்றும் பிடிக்கவேயில்லை, சூரியா! எல்லாம் கிழவர்கள் செய்த வேலை. தகப்பனுரிடம் உள்ள பக்தியினுலேதான் இவர் சும்மா இருந்தார்!''

இந்தச் சமயத்தில் கண்டுப் பயல் — இப்போது நன்றாய் வளர்ந்து வாலிபப் பருவத்தை அடைந்திருந்தவன் — தடதடவென்று மாடிப் படி ஏறி வந்தான்.

''சூரியா வந்திருக்கிறுனமே? எங்கே?'' என்று கேட்டுக் கொண்டே இரைக்க இரைக்க ஓடி வந்தவன், சூரியாவைப் பார்த்துத் திகைத்து நின்று, ''ஐயையோ! இவனு சூரியா? முகத்திலே மீசை வைத்துக் கொண்டிருக்கிறுனே?'' என்றுன்.

''கண்டு! என் மீசை உனக்குப் பிடிக்கவில்லையா? அப்படியானுல் அதை எடுத்தெறிந்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்!'' என்று சொல்லிவிட்டுச் சூரியா முக க்ஷவரம் செய்து கொள்ள ஆரம்பித்தான். வடநாட்டு உடையைக் களைந்தெறிந்துவிட்டு, வேஷ்டி ஜிப்பா அணிந்ததும் பழைய சூரியாவாகக் காட்சியளித்தான்.


2. "ஜப்பான் வரட்டும்!"

அன்றிரவு சுமார் எட்டு மணிக்குச் சூரியா எதிர் வீட்டுக்குப் போகலாம் என்று புறப்பட்டுச் சென்றபோது அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவன் போல் அமரநாத் நின்று கொண்டிருந்தான்.

''வருக! வருக! சுதந்திர வீரர் சூரியாவின் வரவு நல்வரவாகுக!'' என்று தமாஷ் செய்து கொண்டே சூரியாவின் கைகளைப் பிடித்து வீட்டுக்குள் அழைத்துப் போனுன் அமரநாத்.

கூடத்தில் போட்டிருந்த சோபாக்கள் ஒன்றில் உட்கார்ந்து வர்ண நூலினுல் பூவேலை செய்து கொண்டிருந்தாள் ஒரு பெண். இவர்கள் உள்ளே வந்ததும் அவள் எழுந்தாள்.


பவுடரினால் துலக்கிய
இடத்திலே கீறல்
விழுந்ததுதான் மிச்சமா?
மாசில்லாத பளபளப்பை வீசிட
வைப்பது விம்.
Vim
கசடு இல்லை!
பிசுக்கு இல்லை!
கீறல் இல்லை!




பால்!
ஆனால் அது
இன்னும்
வரவில்லை!

இரகசியம் –
அமுல் மில்க் பவுடர்!

எதிர்பாராதது நேருவது சகஜம். பால்காரர் தாமதித்து வருகிறார். பால் பொங்கி வழிகிறது. பால் தீய்ந்து விடுகிறது. பால் புளித்து விடுகிறது. பால் வண்டி பழுதடைந்து விடுகிறது. எதிர்பாராது விருந்தாளிகள் வருகிறார்கள். பூனை பாலைக் குடித்து விடுகிறது. ஆனால் என்றுமே உங்களைக் கைவிடாது, அமுல் மில்க் பவுடர்.

ஆரோக்கியமான நல்ல பாலைத் தட்டில்லாமல்
பெறவும், கட்டியான ஆடைத் தயிர்,
இனிப்புகள் மற்றும் பழத்தின்பண்டங்கள்
தயாரிக்கவும் சிறந்தது, அமுல் மில்க் பவுடர்.
கறியுடன் இரண்டொரு ஸ்பூன் அமுல் மில்க்
பவுடர் சேர்த்தால், வளமுடன் சுவை
கொழிக்கும். மிகவும் வசதியானது;
சிக்கனமானதும்கூட!



அமுல்

ஆரோக்கியமான
நல்ல பாலை அமோகமாகத் தருகிறது.

ASP/AMP-13 TAM.

அமரநாத் அவளைப் பார்த்து, ''சித்ரா ! என் அருமை நண்பன் சூரியாவை உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். சூரியா ! இவள்தான் என்னை மணம் புரிந்த பாக்கியசாலி சித்ரா. பெயர் சித்ராவாக இருப்பதற்கேற்பச் சித்திரக் கலையில் மிகத் தேர்ந்தவள். அணில் போட்டால் கிட்டத்தட்ட ஆடு மாதிரி இருக்கும் !'' என்று சொன்னான்.

சூரியா சிரித்துக் கொண்டே ''ஆடு போட்டால் எப்படி இருக்கும் ?'' என்று கேட்டான்.

சித்ரா பளிச்சென்று, ''ஆடு போட்டால் அமரநாத் மாதிரி இருக்கும் !'' என்று கூறினாள்.

''பார்த்தாயா, சூரியா! இதிலிருந்து என்ன ஏற்படுகிறது ? இந்த மாதரசியின் இதய கமலத்தில் எப்போதும் எழுந்தருளியிருப்பது இந்த அமரநாத் என்று தெரிகிறதல்லவா? ஆகா ! என்னைப் போன்ற பாக்கியசாலி யார் ?'' என்றான் அமரநாத்.

''குடியிருக்க வீடு கிடைப்பதுதான் இந்தக் காலத்தில் கஷ்டமாயிருக்கிறதே ! ஒருவருடைய இதய கமலத்தில் இன்னொருவர் குடியிருக்கிறது என்று வைத்துக் கொண்டால் எவ்வளவோ சௌகரியமாயிருக்கும்!'' என்றாள் சித்ரா.

இந்தத் தம்பதிகளின் அன்னியோன்ய உல்லாசப் பேச்சைக் கேட்ட சூரியா, ''புருஷன் மனைவி என்று இருந்தால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்?'' என்று எண்ணிக் கொண்டான்.

வெளிப்படையாக, ''அமரநாத் ! உங்கள் மனைவியைப் பற்றி லலிதா வர்ணித்திருந்ததெல்லாம் சரிதான் !'' என்று சொன்னான்.

''லலிதா என்பது யார்?'' என்று சித்ரா ஒரு கேள்வி கேட்டாள்.

''இதென்ன, இப்படிக் கேட்கிறீர்கள்? உங்களுக்கு எதிர் வீட்டில் இருக்கும் என்னுடைய சகோதரி லலிதாவைத்தான் சொல்லுகிறேன் !''

''ஓகோ ! எங்கள் சத்துரு வீட்டு நாட்டுப் பெண்ணையா ? நான் அவளைப் பார்த்து எத்தனையோ வருஷங்கள் ஆயிற்றே ! என்னைப் பற்றி அவள் என்ன வர்ணித்திருக்க முடியும் ?'' என்று கேட்டாள் சித்ரா.

''முன்னே எழுதியிருந்ததைத்தான் சொல்கிறேன். அவளும் தாங்களும் ரொம்பச் சிநேகம் என்று எழுதியிருந்தாள்.''

''சிநேகமும் இல்லை. ஒன்றுமில்லை. நாங்கள் ஜன்ம விரோதிகள் அல்லவா?''

இதற்குள் அமரநாத், ''சூரியா ! முனிசிபல் எலெக்ஷன் விஷயமாக இந்த இரண்டு வீடுகளுக்கும் கொஞ்சம் மனஸ்தாபம் ஏற்பட்டதல்லவா ? அது விஷயத்தில் இவளுக்கு ரொம்பக் கோபம். அந்தக் கோபத்தை இப்படிக் காட்டுகிறாள்!''

''எனக்குக் கோபம் ஒன்றுமில்லை. மனிதர்கள் இப்படி மூடர்களாயிருக்கிறார்களே என்று பரிதாபந்தான். மொத்தத்தில் நமது தமிழ் நாட்டு ஜனங்கள் வாழத் தெரியாதவர்கள். வாழும் வகை தெரிய வேண்டுமானால் கல்கத்தாவுக்குப் போய் வங்காளிகளுக்கு மத்தியில் இரண்டு வருஷங்களாவது இருந்துவிட்டு வர வேண்டும்!'' என்றாள் சித்ரா.

''நான் அதை ஒப்புக் கொள்ளமாட்டேன். தமிழ் நாட்டார் மற்றவர்களிடம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன இருக்க முடியும்?'' என்றான் சூரியா.

''இதைக் கேள், சூரியா! எலெக்ஷன் சண்டைக்குப் பிறகு இவளை இங்கே வைத்துக் கொண்டு காலட்சேபம் செய்ய முடியாது என்றுதான் முக்கியமாக நான் கல்கத்தாவுக்குப் போனேன். போன பிறகு, ஏண்டா அப்பா போனோம் என்று இருக்கிறது. இவளுக்கு வங்காளி நாகரிகத்தில் அத்தனை மோகம் பிறந்துவிட்டது. அதுவும், நேதாஜி சுபாஷ் மலாய் நாட்டில் சுதந்திர இந்திய சர்க்காரை ஸ்தாபித்திருக்கிறார் என்று தெரிந்த பிறகு இவளுக்கு ஒன்றுமே தலைகால் புரியவில்லை. ஆகாச விமானம் ஒன்று கிடைத்தால் என்னை இவள் பரிதவிக்க விட்டு விட்டு நேதாஜி போஸிடம் பறந்து போய்விடுவாள்!'' என்றான் அமரநாத்.

இந்தச் சமயத்தில் வாசலில் ஆள் வரும் சத்தம் கேட்கவே, சித்ரா, ''மாமனார் வருகிறார் போலிருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து, மச்சுப் படி ஏறத் தொடங்கினாள்.

''நாளை ஆண்டு நிறைவுக்கு உங்களை வந்து லலிதா அழைப்பாள் ! அவசியம் வரவேண்டும்'' என்றான் சூரியா.

தாமோதரம் பிள்ளை உள்ளே வந்ததும், இளைஞர்கள் இருவரும் எழுந்து நின்றார்கள். ''அப்பா ! யார் பார்த்தீர்களா? அடையாளம் தெரிகிறதா?'' என்று அமரநாத் கேட்டான்.

''ஓகோ ! நம்ம சூரியா போலிருக்கிறதே ? ஒரு வேளை தவறாகச் சொல்கிறேனோ? கண் அவ்வளவு துல்லியமாக இல்லை. வயதாகி விட்டதல்லவா ?'' என்றார் தாமோதரம் பிள்ளை.

"சூரியாதான், அப்பா! சூரியாவே தான்!" என்றான் அமரநாத்.

"நமஸ்காரம்" என்றான் சூரியா.

தாமோதரம் பிள்ளை அவருடைய ஆபீஸ் அறைக்குப் போய் விடுவார் என்று அமரநாத் நினைத்ததற்கு மாறாக அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்தார். வாலிபர்கள் இருவரும் உட்கார்ந்த பிறகு சூரியாவை அவர் மறுபடியும் உற்றுப் பார்த்தார்.

"ஆமாம், சூரியாதான்! ஓய் சூரியநாராயண அய்யரே! நீர் எங்கேயோ ஆப்கானிஸ்தானத்தில் இருக்கிறதாகச் சொன்னார்கள்;—மாஸ்கோவில் பார்த்ததாகச் சொன்னார்கள்; அப்புறம் சைகானுக்கு வந்து விட்டதாகச் சொன்னார்கள்; — கடைசியில் நம்ம ஊரிலே இருக்கிறீரே? இந்தியாவின் சுதந்திரம் எந்தமட்டில் இருக்கிறது? எங்கே கொண்டு வந்து நிறுத்தி வைத்திருக்கிறீர்?" என்றார்.

"மாமா! என்னைப் பற்றி இவ்வளவு தூரம் ஞாபகம் வைத்துக் கொண்டு, எந்த நாட்டுக்குப் போயிருக்கிறேன் என்றெல்லாம் விசாரித்து வைத்திருக்கிறீர்களே? அதற்காகச் சந்தோஷம். ஆனால் நான் எந்த அயல் நாட்டுக்கும் போகவில்லை. இந்தியாவின் சுதந்திரம் இந்தியாவிலேதான் இருக்கிறது. இந்தியாவின் சுதந்திரத்துக்காக ஆப்கானிஸ்தானத்துக்கு ஏன் போக வேண்டும்?" என்றான் சூரியா.

"அப்படிச் சொல்லாதேயும், ஓய் சூரியநாராயண ஐயரே! நேதாஜி போஸ் மலாய் நாட்டிலேதானே சுதந்திர இந்திய சர்க்காரை ஸ்தாபித்திருக்கிறாராம்? அப்புறம், ஜயப்பிரகாச நாராயணன் நேபாளத்திலோ திபேத்திலோ இந்தியாவின் சுதந்திரத்தை ஸ்தாபித்திருப்பதாகச் சொல்கிறார்கள்! அதெல்லாம் பொய்யா?"

"உண்மையில் இந்தியாவின் சுதந்திரம் ஆமத் நகர் சிறைச்சாலையில் காந்தி மகாத்மா, நேருஜி முதலிய தலைவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது" என்றான் அமரநாத்.

"சூரியநாராயண ஐயரே! அமரநாத் சொல்வதை நீர் ஒத்துக் கொள்கிறீரா?" என்றார் தாமோதரம்பிள்ளை.

"மாமா! என்னைச் சூரியா என்று அழைத்தால்தான் இனிமேல் பதில் சொல்வேன்."

"சரி அப்பா, சூரியா! இப்போது சொல்லு! இந்தியாவுக்குச் சுதந்திரம் எந்த வழி மூலமாக வரப் போகிறதென்று நினைக்கிறாய்?" என்று தாமோதரம்பிள்ளை கேட்டார்.

"சொல்ல முடியாது, மாமா! எந்த வழியினாலும் வரும்; எல்லா வழியினாலும் வரும். ஆனால் வரும்போது அதைக் கைப்பற்ற ஜனங்கள் தயாராயிருக்க வேண்டும். இதற்கு நம்முடைய ஜனங்களைத் தயார் செய்வதுதான் இப்போது நாம் செய்ய வேண்டிய முக்கியமான வேலை....."

"சுதந்திரத்துக்கு நம்முடைய ஜனங்களைத் தயார் செய்கிறதா? சூரியா! அது ஒரு நாளும் முடியாத காரியம். நம்முடைய ஜனங்களைச் சுதந்திரத்துக்குத் தயார் செய்ய வேண்டுமானால் அதற்கு வழி என்ன தெரியுமா? ஜப்பான்காரன் படையெடுத்து வந்து இந்தியாவைப் பிடித்து ஒரு பத்து வருஷங்களாவது ஆட்சி நடத்த வேண்டும். நம்ம ஜனங்களுக்கு ஜப்பான்காரன்தான் சரி. அவன் உச்சிக் குடுமிகளையெல்லாம் பிடித்து ஓர் உலுக்கு உலுக்கிச் சாதி வித்தியாசம், மத வித்தியாசம் எல்லாவற்றையும் அடியோடு ஒழிக்க வேண்டும். அரிசியும் பருப்பும் சாப்பிட்டு ஏப்பம் விட்டுக் கொண்டிருப்பவர்களையெல்லாம் சவுக்கினால் நாலு அடி அடித்து மாமிசமும் மீனும் சாப்பிடச் செய்ய வேண்டும். பத்து வருஷங்கள் இப்படி ஜப்பானிய ஆட்சியிலே இருந்தால் இந்தியா சுதந்திரத்துக்கு லாயக்காகும்! என்ன சொல்கிறாய், சூரியா!"

"நான் அதை ஒப்பவில்லை. ஜப்பான் ஆட்சியில் பத்து வருஷங்கள் இருந்தால் அதற்குப் பிறகு இன்னும் 140 வருஷங்கள் ஜப்பான் ஆட்சியிலே இருக்க நேரிடும். ஆனால் ஜப்பானியர்கள் அவ்வளவு மூடர்கள் என நான் நினைக்கவில்லை. இந்தியாவைத் தாங்கள் ஜயிப்பதற்குப் பதிலாக, நேதாஜி சுபாஷ் போஸுக்கு உதவி செய்து அவரைக் கொண்டு இந்தியாவின் சுதந்திரத்தை நிலைநாட்டவே பார்ப்பார்கள். இந்தியாவை ஜயித்து ஆள்வதைக் காட்டிலும் இந்தியாவைச் சிநேகமாக வைத்துக் கொள்வதுதான் ஜப்பானுக்கு அநுகூலம்."

"ஜப்பானுக்கு எது அநுகூலம் என்று உமக்குத் தெரிந்திருக்கிறது. ஓய்! அது ஜப்பானுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே? நாய் குரைத்ததைப் பார்த்து ஒருவன் பயப்பட்டானாம். 'குரைக்கிற நாய் கடிக்காது என்கிற பழமொழி தெரியாதா?' என்று இன்னொருவன் சொன்னானாம். 'பழமொழி எனக்குத் தெரியும்; ஆனால், அந்த நாய்க்குத் தெரிந்திருக்க வேண்டுமே?' என்றானாம் பயந்த பேர்வழி. அந்த மாதிரி நேதாஜிக்கு உதவி செய்வதின் அநு

கூலத்தை ஜப்பான் உணர்ந்திருக்க வேண்டுமே?''

''நேதாஜியின் படையில் இதுவரை ஐம்பதினாயிரம் வீரர்கள் சேர்ந்திருக்கிறார்களாம். ஜப்பான்தான் ஆயுதம் கொடுத்து உதவியிருக்கிறதாம்!'' என்றான் அமரநாத்.

''ஐம்பதினாயிரம் வீரர்கள் என்றால் அவ்வளவு அதிகமா? அவர்களைக் கொண்டு இந்தியா தேசத்தையே பிடித்துவிட முடியுமா?'' என்றார் தாமோதரம் பிள்ளை.

'' நேதாஜி ஐம்பதினாயிரம் பேரோடு வந்தால் இந்தியாவில் அவருடன் சேர்வதற்கு ஐம்பது லட்சம் பேர் காத்திருக்கிறார்கள்!'' என்றான் சூரியா.

'' வங்காளத்தில் மட்டுமே ஐம்பது லட்சம் பேர் சேர்வார்கள். கல்கத்தாவெல்லாம் ஓயாமல் இதைப் பற்றிய பேச்சாகவே இருக்கிறது'' என்றான் அமரநாத்.

''ஐம்பது லட்சம் பேர் சேரட்டும்; ஐந்து கோடிப் பேர் வேணுமானாலும் சேரட்டும். நேதாஜி புது டில்லிக்கு வந்து சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்ளட்டும். நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் அரசனை நம்பிப் புருஷனைக் கைவிடுகிற காரியம் மட்டும் உதவாது. நேதாஜி எப்போதோ வரப் போகிறார் என்பதற்காக இப்போது இங்கே சில தறிதலைகள் 'ஸாபொடாஜ்' வேலையில் இறங்குகிறார்களே, அது சுத்த முட்டாள்தனம். ஜப்பான் வருகிற வரையில் காத்திருப்பதுதானே! அதற்குள்ளே ரயிலைக் கவிழ்க்கிறேன், பாலத்தை உடைக்கிறேன் என்று ஆரம்பிக்கிறார்களே! 'ஸாபொடாஜ்' வேலைகள் அரசாங்கத் துரோகம் மட்டுமல்ல; பொதுஜனத் துரோகம். நான் ஜட்ஜாயிருந்தால் அப்படிப்பட்ட காரியம் செய்பவர்களுக்கு மரண தண்டனை விதிப்பேன்.''

இவ்விதம் தாமோதரம்பிள்ளை சொல்லி வந்தபோது சூரியாவின் முகத்தில் ஒரு மாறுதல் காணப்பட்டது. மலர்ந்திருந்த அவன் முகம் சட்டென்று கருங்கிற்று. இந்த மாறுதலை அமரநாத் கவனித்தான். அமரநாத் கவனித்தான் என்பதைச் சூரியாவும் தெரிந்து கொண்டான். தெரிந்து கொண்டதும் அமரநாத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். சூரியாவின் கண்கள் ஏதோ ஓர் உறுதியை அமரநாத்திடம் எதிர்பார்த்ததாகத் தோன்றியது. அமரநாத் கண்கள் அந்த உறுதியைச் சூரியாவுக்கு அளித்தன. (தொடரும்)

இரண்டு மனங்களை எடை போட்டபோது....



பார்வதி மணாளன்

வேதாசலம் பிரச்னையே இல்லாத மனிதர். கல்யாணமாகி இருபத்தைந்து வருடங்கள் உருண்டோடிய பின்னும் அவருக்குக் குழந்தை குட்டி என்று எதுவும் கிடையாது. இனி மேலும் தமக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை அவருக்கு. கவலைப்பட்டுக் கவலைப்பட்டுக் கண்ணீரை யெல்லாம் செலவழித்துவிட்ட அவர் இனியும் குழந்தை இல்லை என்பதற்காகக் கவலைப்படத் தயாராயில்லை. கலைமகள் உயர்நிலைப் பள்ளியின் தலைமைத் தமிழாசிரியராயிருந்து வரும் அவருக்கு இன்றுவரை எந்தக் குறையுமில்லை. மாதக் கடைசியில் யாரிடமாவது கையேந்துவது போன்ற சமாசாரங்களே கிடையாது. இன்னும் சொல்லப் போனால் மீந்த வருமானத்தைச் சேமித்தும் வருகிறார்.

இப்பேர்ப்பட்ட வேதாசலம் இன்று என்ன செய்வதென்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டு மேஜையடியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவரை இப்பொழுது ஒரு பிரச்னை புதிதாக முளைத்து அரிப்பாய் அரித்து எடுத்துக் கொண்டிருக்கிறது. அதுவும் இது அவருக்குச் சொந்தப் பிரச்னையே அல்ல. அவர் நினைத்தால் அதைத் தூசி தட்டுவது மாதிரி 'பூ' என்று ஊதித் தட்டிவிட்டு நிம்மதியாக இருக்கலாம். ஆனால் அவர் மனசுதான் கேட்கவில்லை! கிடந்து தவிக்கிறது. என்ன செய்வதென்றே வழி தெரியாமல் தனியாய்த் தவித்துக் கொண்டிருந்தார் வேதாசலம்.

விஷயம் வேறொன்றுமில்லை. கலைமகள் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகம் அப்பள்ளியின் சுமார் நூறு ஆசிரியர்களுக்கு ஒரு குடியிருப்பைக் கட்டிக் கொடுத்திருக்கிறது. அப்படிக் கட்டிக் கொடுக்கப்பட்ட ஒரு வீட்டில் தான் வேதாசலம் குடியிருக்கிறார். சுமார் ஒரு மணி நேரத்துக்கு முன் 'சி பிளாக்'கில் இருக்கும் ராஜசேகரன் வேதாசலத்தைத் தேடி வந்தார். இவர் கணக்கு வாத்தியாராக இருக்கிறார். பெரிய குடும்பி; கஷ்ட ஜீவனம். மனுஷர் பரக்கப் பரக்க ஓடி வந்தார். அவருடைய மூத்த பையன் கிருஷ்ணமூர்த்திக்கு ஏதோ ஒரு கம்பெனியில் காஷியர் உத்தியோகம் கிடைப்பதற்கு நிச்சயமான ஒரு வாய்ப்பு இருக்கிறதாம். அதற்கு ஐந்நூறு ரூபாய் டெபாஸிட் கட்டினால்தான் அந்த உத்தியோகம் கைமேல் கிடைக்குமாம். வந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு ராஜசேகரன் வேதாசலம் முகத்தைப் பரிதாபத்துடன் பார்த்தார். இவருக்கு இளகிய மனசு. தானில்லை. பாங்கில் அவ்வளவு 'பாலன்ஸ்' இருக்காது என்பது அவர் எண்ணத்தில் பளிச்சிட்டது. வீடு தேடி வந்த நண்பரைப் பட்டென்று தட்டிக் கழிக்கவும் மனசு இடம் கொடுக்கவில்லை. தெரிந்த நண்பர்கள் யாரிடமாவது கேட்டு வாங்கிக் கொடுக்கலாமென்றாலும் எவருடைய பெயரும் நினைவுக்கு வரவில்லை. இதுவரைக்கும் பணம் என்று வாயைத் திறக்காத மனுஷர் கடவுளின் பதிலை எதிர்பார்த்து நிற்பவர் போல் எதிரில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். கடைசியில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராய், ''ஓய் ராஜசேகரன்! இதற்காக ஏன் இப்படி இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறீர்? இன்றைக்கு என்ன திங்கட்கிழமைதானே! புதன்கிழமை தானே உம்ம பையன் டெபாஸிட் பணத்தைக் கட்டணும்? அதுக்குள்ளே இந்த உலகத்தையே ஒரு புரட்டுப் புரட்டிப்புடலாம். நீர் நிம்மதியாய்ப் போய் வாரும்! பணத்துக்கு எப்படியும் ஏற்பாடு பண்ணிவிடுகிறேன்!'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறித் தைரியப்படுத்தி அனுப்பி வைத்தார். ராஜசேகரன் காலில் விழுந்து கும்பிடாத குறையாக விடைபெற்றுச் சென்றார்.

ஏதோ அசட்டுத் தைரியத்தில் வேதாசலம் அவரைச் சந்தோஷப்படுத்தி அனுப்பி வைத்தாரே தவிர இவருக்கு இன்னும் பணத்துக்கான வழி ஒன்றுகூடப் புலப்படவில்லை.

பள்ளிக்கூடத்துக்கு நேரமாகிக் கொண்டிருந்தது. அன்றைய டைம் டேபிளை ஒரு பார்வை பார்த்துக் கொண்டார். அவருக்கு இரண்டு பீரியட் ஓய்வு நேரமாக அடுத்தடுத்து இருந்தது. அது அவருக்கு ஒரு வகையில் சந்தோஷத்தை அளித்தது.

அவருடைய மனைவி சாவித்திரி கையில் காப்பி டம்ளருடன் மேஜையடிக்கு வந்தாள். கடக் கடக் காப்பியை ருசித்துக்கொண்டே அவர் சாவித்திரியைப் பார்த்தார்.

''என்னு? அவருக்கு என்னமோ பெரிசாத் தைரியம் கொடுத்து அனுப்பினீங்களே, என்ன பண்ணறதா உத்தேசம்?''

அவருடைய காது அவள் கேட்ட கேள்வியை ஜீரணித்துக் கொண்டிருந்த அதே வேளையில் அவருடைய கண்கள் சாவித்திரியின் கழுத்தை மொய்த்துக் கொண்டிருந்தன.

''சாவித்திரி! நான் ஒரு யோசனை சொல்றேன். கோபப்படாமல் கேட்கணும். என்ன தெரிந்ததா?''.

''என்ன சொல்லப் போறீங்க?''

''ராஜசேகரன் பெரிய குடும்பஸ்தன்! ரொம்பவும் கஷ்ட ஜீவனம் நடத்திக் கொண்டு

இருக்கான். இந்த மாதிரி சமயத்திலே அவன் பையனுக்கு ஒரு வேலை கிடைச்சா அது அவனுக்கு ரொம்பவும் ரிலீஃபா இருக்கும். அதனுலே நம்மாலே முடிஞ்ச உபகாரம் ஏதாவது செய்யனும். அதனுலே....''

வேதாசலம் தயங்கினுர்.

''அதனுலே....?''

''கோவிச்சுக்காதே! உன்னுடைய ரெட்டை வடத்தைக் கொடேன்! பாங்கியிலே அடகு வைத்துக் கொடுப்போம்! பையன் உத்தியோகத்துக்குப் போனவுடனே திருப்பிடுவான்!''

''நானும் அதைத்தான் சொல்ல வந்தேன்!''

''சாவித்திரி, உனக்குத் தங்க மனசு! ஆனுல், ஆண்டவன்தான் உனக்குத் துரோகம் பண்ணிட்டான்!'' வேதாசலம் குரல்வளையில் துக்கம் வெடித்துச் சிதறியது. கண்களில் கண்ணீர் கரை கட்டியது.

''ஐயே! இதுக்கா வருத்தப்படறீங்க? அவர் பையன் உத்தியோகத்துக்குப் போனுல் என்ன, நம்ம பையன் உத்தியோகத்துக்குப் போனுல் என்ன? நீங்களே சொல்லுங்க, நமக்கு அப்படி ஒரு பையன் இருந்தா செய்வோமில்லியா? இந்தாங்க!''

கழுத்தில் இருந்த ரெட்டை வடத்தை ஒரு சுற்றுச் சுற்றி எடுத்து, அவளே காலண்டர் காகிதத்தைக் கிழித்துப் பொட்டலம் கட்டிக் கொடுத்தாள்.

அது சுமார் எட்டு சவரன் எடை இருக்கும். சாவித்திரியின் மனசை எந்தத் தராசுப் படிக்கல்லைக் கொண்டு நிறுப்பது?

* * *

எட்டாவது ஸ்டாண்டர்டு 'சி' பிரிவில் கணக்கு வகுப்பை முடித்துக் கொண்டு ராஜசேகரன் ஆசிரியர்களுக்கான ஓய்வு அறையில் நுழைந்தார். அங்கே ஏற்கனவே வந்து உட்கார்ந்து கொண்டிருந்த வேதாசலம் மிகுந்த உற்சாகத்துடன் ராஜசேகரனை அழைத்தார்.

''ஓய் ராஜசேகரன்! இங்கே வாரும். உம்ம பையன் ரொம்பவும் அதிருஷ்டக்காரனய்யா. கேட்ட இடத்தில் பணம் உடனே கிடைத்து விட்டது. இந்தாரும். இப்பவே போய் ஒரு மணி நேரம் பெர்மிஷன் போட்டுவிட்டு அந்த ஆபீசுக்குப் போய் நேரே பணம் கட்டிவிட்டு வாரும்'' என்று சொல்லி, அவர் உள்ளங் கையில் ஐந்து நூறு ரூபாய்த் தாள்களைத் திணித்தார் வேதாசலம்.

ராஜசேகரனுக்கு மகிழ்ச்சிப் பெருக்கால் எப்படி நன்றி சொல்வதென்று புரியவில்லை.

''மிஸ்டர் வேதாசலம்! இந்த உபகாரத்துக்கு நான் ஏழேழு ஜென்மங்களுக்கும் உம்ம கிட்டே கடன் பட்ட மாதிரி! என்னுலே உமக்கு என்ன செய்யறதுன்னே தோணலியே! வாரும். கான்டீனில் டிபன் சாப்பிடுவோம்!''





''ஓய்! முதலில் பணத்தைக் கட்டிவிட்டு வாரும்! டிபனை அப்புறம் பார்த்துக்கொள்வோம். டிபன் என்ன ஓடியா போய்விடப் போகுது! போய்க் காரியத்தை ஜெயமாக்கிக் கொண்டு வாரும்!'' என்று உற்சாகப்படுத்தி அனுப்பி வைத்தார்.

ராஜசேகரன் ஒரு மணி நேரம் 'பெர்மிஷன்' போடுவதற்குத் தலைமை ஆசிரியரின் அறைக்குப் பணமும் கையுமாக ஓடினார்.

*　　　*　　　*

செவ்வாய்க்கிழமை காலை சுமார் ஏழு மணி! கலைமகள் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் குடியிருப்பில் இருக்கும் 'டாக்டர் ராதாகிருஷ்ணன்' வாசகசாலையில் வழக்கமான கூட்டம். 'இன்றையச் செய்தி'யைச் சுடச் சுட வாசிக்க, வாதிக்கச் சுறுசுறுப்பானவர்கள் மூழ்ந்து கொண்டிருக்கும் நேரம். அரசியல் பித்தலாட்டங்களில் மனசை ஈடுபடுத்த விரும்பாத கொஞ்சம் பேர் தம்முடைய சொந்த க்ஷேமநலன்களைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''ஓய் உமக்கு விஷயம் தெரியுமா? நம்ப வேதாசலம் பாங்குக்கு வந்தாரய்யா!''

''ஏனய்யா மனுஷன்னு உம்ம மாதிரி பாங்குப் பக்கம் தலைவைச்சே படுக்கக் கூடாதுங்கற எண்ணமாய்யா உமக்கு?''

''நான் அதைச் சொல்லல்லே! மனுஷருக்கு என்னய்யா கேடு? தமிழ் டிபார்ட்மெண்டையே தலையிலே தூக்கி வெச்சிண்டிருக்கார். இவருக்கென்னய்யா வந்தது நகையை அடகு வச்சிப் பாங்கிலே பணம் வாங்குகிற அளவுக்கு?''

ராஜசேகரனின் காதுகளில் இது சுரீரென்று விழுந்தது. பத்திரிகையில் மனசு மீண்டும் லயிக்கவில்லை. வேதனை மனசை ஆக்கிரமித்துக் கொண்டது.

ஞாயிற்றுக் கிழமை இரவு தமக்கும் தம் மனைவிக்கும் இடையே நடந்த காரசாரமான விவாதத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டார்.

''இதோ பார் ராஜம்! நீ பெத்த பிள்ளை நல்ல உத்தியோகத்திலிருந்தா அது உனக்குப் பெருமைதானே? நாளைக்கு அவன் நாலு காசு சம்பாதித்துக் கொண்டாந்து கொடுத்தால் அது நம்ம கஷ்ட காலத்துலே கைகொடுக்குமே! அதனாலே பெரிசு படுத்தாமே உன்னுடைய சங்கிலியைக் கழற்றிக் கொடு! அதை அடகு வச்சி நம்ம கிருஷ்ணமூர்த்திக்கு டெபாசிட் தொகையைக் கட்டி விடலாம்!''

மிகவும் இதமாகத்தான் கேட்டார் ராஜசேகரன். வேறு போக்கிடமில்லாததால் தான் அவர் அப்படித் தயங்கித் தயங்கிக் கேட்க வேண்டியதாயிற்று. ஆனால் ராஜம் சீறி வெடித்தாள்.

''இந்த பாருங்க! இன்னிக்கு நான் கழற்றிக் கொடுத்தால் அது என்னிக்கு என் கழுத்திலே ஏறுமோ, அது ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். அதுவும் நீங்க சம்பாரிச்சுப் போட்டதில்லே. எங்க வீட்டிலே செஞ்சு போட்டது. நான் கழற்றித் தரவே மாட்டேன். நீங்க என்ன வேணாலும் பண்ணுங்க. கிருஷ்ணமூர்த்திக்கு இந்த வேலை கிடைக்காட்டாலும் பரவாயில்லே. ஆனைவந்த நகையை நான் கழற்றித் தரவே மாட்டேன்.''

ராஜசேகரனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது; அறைந்து விடலாமா என்றுகூட நினைத்தார். மனம் இடம் கொடுக்கவில்லை. தம் சொந்தப் பிள்ளைக்கு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க இப்படி இவள் தயங்குகிறாளே என்று மனத்துக்குள் கவலைப்பட்டுக் கொண்டார். வேறு வழி

க்ஷேமம் தழைக்க ராமன் திருவிழா

''ஸ்ரீ ராமா'' என்று கூறி ஒரு துளசியைப் பரமன் பாதத்தில் அர்ச்சித்தாலே மகத்தான புண்ணியம் கைகூடும். அஷ்டோத்தரம், ஸஹஸ்ரநாமம், லட்சார்ச்சனை ஆகியவற்றின் புண்ணியப் பலனைச் சொல்லத் தேவையில்லை. தனிமனிதருக்காக இன்றி ஒரு தேசம் முழுவதன் நன்மைக்காகக் கோடி அர்ச்சனைகள் நடத்தப்பெறுவதையும் கேள்விப்படுகிறோம். ஆனால் நாம் கேள்விப்பட்டிராத பெரு வைபவமாக தசகோடி (ஆயிரம் லக்ஷம்) அர்ச்சனைக்குத் திருவனந்தபுரம் ஸ்ரீ சீதாராம பக்த சபையினர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தாய்த் திருநாட்டின் செழிப்பையும் சாந்தியையும் தார்மிக மேம்பாட்டையும் வேண்டி இவ்வாண்டு அக்டோபர் 22ந் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குத் திருவனந்தபுரம் ஸ்ரீ வராஹத்தில் உள்ள ஸ்ரீ லக்ஷ்மிவராஹ ஸ்வாமி கோயில் வடக்கு நடையில் ஸ்ரீ சீதாராம கல்யாண மண்டபப் பந்தலில் ஸ்ரீராம ஸஹஸ்ரநாம தசகோடி அர்ச்சனைப் பெருவிழா நடக்கவிருக்கிறது. ஒரு ஸஹஸ்ரநாம அர்ச்சனைக்கான கட்டணம் ரூ. 11. வேறு பல விதமான அர்ச்சனை விவரங்களை ஸ்ரீ சீதாராம பக்தசபைக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

இப்பெருவிழாவின் குறிப்பிடத் தக்கதோர் அங்கமாக அகில இந்திய ராமாயண மகாநாடும் டிசம்பர் 9ந் தேதியிலிருந்து 12ந் தேதி உட்பட நான்கு தினங்களுக்கு நடைபெறும். பாரத தேசமெங்கிலும் இலக்கியமாகவும் நாட்டுப் பாடலாகவும் பன்மொழிகளில் வழங்கும் ஸ்ரீராம காதைகளைப் பற்றிப் பேரறிஞர்கள் உரை நிகழ்த்துவார்கள். பாரதமெங்கிலுமுள்ள ராமன் திருக்கோயில்களின் படங்களும் விவரங்களும் கொண்ட கையேடும் வெளியிடப்படும்.

ஸ்மார்த்த - வைஷ்ணவ - மத்வ சமயாச்சாரியர்கள் அனைவரது ஆசியுடனும் நடைபெறும் இவ்விழாக்களில் அன்பர்கள் கலந்து கொண்டும், பொருள் வழங்கியும் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் இன்னருள் பெறவேணும். இதில் மிஞ்சிப்படும் நிதியம் ஸ்ரீ சீதாராம கல்யாண மண்டபம் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: Treasurer, Sree Seetharama Bhakta Sabha, First Puthen Street, Trivandrum - 9.

வெட்டுக் காயங்கள்! சுட்ட புண்கள்!

விரைவில் இட்டுப் பாருங்கள் பர்னால்

குளுமையுடன் இதமளிக்கும் நிவாரணி





பர்னல் பட்டவுடனே சட்டென ஆற்றும்.



ஆற்றும் போதே இதம்.



பட்டு துண்டவே இன்றியே சட்டெனக் காயமாற்றும்.

வீடு என்றால் விபத்துக்கள் நேரத்தான் செய்யும். அடிக் கடி விளையாடும் குழந்தைக்கு அடிக் கடி அடிபடுவது சகஜம். சமையலறையிலோ ... கொதி எண்ணெய் தெறிக்கலாம்; காய்கறி நறுக் கும்போது விரலிலே பட்டு விடலாம். எனவே எப்போதும் கைவசம் இருக்கட்டும் பர்னால்! குளுமையுடன் இதமளிக்கும் பர்னால், தீப்புண், வெட்டு, சிராய்ப்பு, கட்டி மற்றும் காயங்களை ஆற்றும் பயன் நிவாரணி. இட்ட வுடன் இதமளித்து ஆற்றுவது பர்னால்

பர்னால் 40 ஆண்டுகளுக்கும் மேலாக கணக்கற்ற இல்லங் களில் காயமாற்றிவரும் நம்பகமான நிவாரணி



ASP/B/B-14 TM

இல்லாமல்தான் வேதாசலத்திடம் கடன் கேட்டுப் பார்க்கலாமா என்று முடிவுக்கு வந்தார். அவரே தம் பெண்டாட்டியின் நகையை அடகு வைத்துத் தமக்குக் கொடுத்திருக்கிறார் என்ற விஷயம் அவருக்குத் தெரிய வந்ததும் அவருடைய உள்ளம் அனலாகக் கொதித்தது. தம் மனைவியும் பெண் குலத்தவள்தானே? வேதாசலத்தின் மனைவிக்குள்ள பண்பட்ட உள்ளமும் பரந்த நோக்கமும், பரோபகாரச் சிந்தையும் இவளுக்கு இல்லாமல் போவானேன்? பெண்களுக்கு நகையைப் பிரிவதென்றால் மனம் வராதுதான். ஆனால் மூன்றும் மனிதரின் பிள்ளைக்குத் தன் நகையைக் கழற்றிக் கொடுக்கும் பெண்ணும் பெண்தானே? வேதாசலத்தின் துணைவி சாவித்திரியின் சீரிய செய்கையை உடனே போய்த் தன் மனைவியிடம் கூறி அவளை இடித்துரைக்க வேண்டும் என்ற வேகம் மிகுந்தது ராஜசேகரிடம். அதே சமயம் ராஜுத்தின் மீது ஆத்திரம் பெருக்கெடுத்தது. கையிலிருந்த செய்தித்தாளை விசிறியடித்துவிட்டு வேகமாக நடந்தார்.

ராஜசேகரனும் அவருடைய மனைவியும் பரக்கப் பரக்க வேதாசலத்தின் வீட்டினுள் நுழைந்தார்கள். வேதாசலம் அவர்களை எதிர் கொண்டு வரவேற்றார்.

"என்ன ஓய் மிஸ்டர் ராஜசேகரன்? ஏது இந்நேரத்தில் இப்படித் தம்பதி சமேதராய்?"

"அது கிடக்கட்டும் மிஸ்டர் வேதாசலம்! எப்படி அந்த ஐந்நூறு ரூபாயை அவ்வளவு சீக்கிரத்தில் திரட்டிக் கொடுத்தீர்?"

வேதாசலம் தயங்கினார். சாவித்திரி அவருக்கருகில் நின்று கொண்டிருந்தாள். ராஜசேகரன் அவளுடைய கழுத்தை உன்னிப்பாகப் பார்த்தார்.

"எப்படியோ திரட்டிக் கொடுத்தேன் உமக்கெதுக்கய்யா அந்த வம்பெல்லாம்?" வேதாசலம் சமாளித்தார்!

"அதே வழியிலேதான் எனக்கும் இன்னிக்கு ஐந்நூறு ரூபாய் கிடைத்தது. இத் தாரும். சமயத்திலே எங்களுக்கு நீங்கள் செய்த உபகாரத்தை நாங்கள் என்றென்றைக்கும் மறக்க மாட்டோம்." — நன்றிப் பெருக்குடன் ராஜசேகரன் ஐந்நூறு ரூபாயை அவரிடம் நீட்டினார்.

அப்பொழுதுதான் சாவித்திரியும் ராஜத்தின் கழுத்தில் பார்வையைச் செலுத்தினாள்.


"மிஸ்டர் வேதாசலம்! உம்முடைய பண்பட்ட குணத்தினாலே என்னுடைய பையனுக்கும் உத்தியோகம் கிடைத்து விட்டது. என் வீட்டுக்காரிக்கும் ஒரு நல்ல பாடம் கிடைத்தது. அவள் அதைத் தன் ஆயுக முடியறவரைக்கும் மறக்கவே மாட்டாள்!"


ராஜசேகரன் என்ன சொல்கிறார் என்பது சாவித்திரிக்குப் புரிந்தது; ஆனால் வேதாசலத்துக்குப் புரியவில்லை!



அன்பே அகிலா! 24

கதை: குமரன் : சித்திரம்: விஜயா




தொடரும்.....


ஃப்ரெஸ்காவை நேசியுங்கள்
Beauty Talc
புத்துணர்ச்சியூட்டும்
சுகந்தம் கொண்ட
ஃப்ரெஸ்கா பியூடி
டால்க் வெண்பனியைப்
போன்ற அழகுமெருகை
உங்களுக்குத் தருகிறது.
விசேஷ மாட்-ஃபினிஷ்
கொண்ட ஃப்ரெஸ்கா
உங்கள் வதனப்
பொலிவைச் சோபிக்கச்
செய்கிறது.
மென்மையான,
நறுமணம் கமழும்
ஃப்ரெஸ்கா உங்களை
துடிப்புமிக்க புத்துணர்ச்
சியுடன் திகழச்
செய்கிறது. எனவே,
ஃப்ரெஸ்காவை
நேசியுங்கள்
இரண்டு அளவு-
களில்
கிடைக்கிறது.
அளிக்கும்
ஃப்ரெஸ்கா
பியூடி டால்க்
ஃப்ரெஸ்கா என்றாலே புத்துணர்ச்சிதான்!
Interpub/GSF/8/72 TM



சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி

பன்னிரண்டாவது அத்தியாயம்

அண்ணாச்சி கடை . வாசலில் நாலைந்து சைக்கிள்கள் நடுத் தெருவில் தூக்கி எறியப்பட்டு நொறுக்கப்பட்டிருந்தன. சோடா பாட்டில்கள் உடைந்த கண்ணாடித் துண்டுகள், எரிக்கப்பட்ட புத்தகங்கள், பத்திரிகைகளின் சாம்பற் குவியல் என்று கடை முகப்பு அலங்கோலமாயிருந்தது. கடை ஏறக்குறையச் சூறையாடப்பட்டிருந்தது. வெற்றிப் பெருமிதத்தோடு அங்கே சென்றிருந்த பாண்டியன் முதலியவர்களுக்கு அங்கே என்ன நடந்திருக்க முடியும் என்பது புரியவும் புலப்படவுமே சிறிது நேரம் ஆயிற்று. கடையில் இருந்த சிறுவர்கள் இருவரையும் கூடச் சூறையாட வந்திருந்தவர்கள் அடித்துப் போட்டுவிட்டுப் போய்விட்டதாகவும், அவர்கள் ஆம்புலன்ஸில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் பட்டிருப்பதாகவும் கூடியிருந்தவர்கள் சொன்னார்கள். சம்பவம் அப்போதுதான் நடந்து முடிந்திருந்தது. பக்கத்தில் விசாரித்ததிலிருந்து சில உண்மைகள் பாண்டியனுக்குத் தெரிந்தன. தெரிந்த உண்மைகளால் அவன் மனம் தளர்ந்து ஒடுங்கியது.

மாலையில் பல்கலைக் கழகத்திலிருந்து லாரிகளைத் திருப்பிக் கொண்டு போகிற போக்கில் இராவணசாமியின் ஆட்கள் மாணவர்கள்மேல் காட்ட முடியாத கோபத்தை அண்ணாச்சியின் கடையின் மேல் காட்டிவிட்டுப் போயிருந்தார்கள். லாரிகளோடு ஆட்கள் வந்தபோது அண்ணாச்சி கடையில் இல்லை. கடையைக் கவனித்துக் கொண்டு அண்ணாச்சியிடம் வேலை பார்க்கும் பையன்கள் இருவர் மட்டுமே இருந்தனர். தாக்கவும், சூறையாடவும், வந்திருந்தவர்களுக்கு இது மிகவும் வசதியாகப் போயிற்று. எதிர்ப்புறத்து மருந்துக் கடைக்காரர்கள் போலீசுக்கு ஃபோன் செய்து போலீஸ் வந்தும்கூடக் கடையைச் சூறையாடிய இராவணசாமியின் ஆட்களை எதுவும் செய்ய வில்லை என்பதையும், கண்டு கொள்ளாததுபோல் இருந்து சூறையாடியவர்களை ஓட விட்டுவிட்டார்கள் என்பதையும், அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தெரிவித்தார்கள். பாண்டியனுக்கு நெஞ்சம் கொதித்தது.

''பாவிகள் ! உருப்படவே மாட்டார்கள்'' என்று கையைச் சொடுக்கி நெரித்தாள் கண்ணுக்கினியாள். அவளும் கோபம் அடைந்திருந்தாள்.

''ராவணசாமி நம்மிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு லாரிகளோடு வெளியேறியதும் நாமெல்லாம் தேர்தல் முடிவுகளை எதிர்பார்த்து நூல்நிலைய முகப்பில் காத்திருந்தபோது அண்ணாச்சியும் கடையில் இல்லாத வேளையில் இதைச் செய்திருக்கிறார்கள்'' என்றான் மோகன்தாஸ்.

அப்போதுதான் அண்ணாச்சியும் மணவாளனும் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். மணவாளனின் முகத்தில் பதற்றமும் கவலையும் தெரிந்தது. அண்ணாச்சியின் முகம் சுபாவமாகவே தோன்றியது.

எல்லாவற்றையும் பார்த்து விட்டு முகத்தின் சுபாவமான நிலை மாறாமலே, வலது கையால் மீசையின் மேற்புறத்தை நீவியபடி, ''சரிதான்! எங்கிட்டவே விளையாட ஆரம்பிச்சிருக்காங்க... அதையும்தான் பார்க்கலாம்'' என்றார் அண்ணாச்சி. அவரிடம் நெருங்கி, ''இன்னிக்குப் பார்த்து நீங்க எங்கே போனீங்க...? நடக்கக் கூடாதது நடந்திரிச்சே!'' என்று பாண்டியன் துக்கம் பொங்கக் கூறியபோது,

''இதை மறந்திடு தம்பி! நீங்களெல்லாம் ஜெயிச்ச சமாசாரத்தையும் இதையும் ஒரே சமயத்திலேதான் வந்து

சொன்னுங்க.... இதனுலே ஏற்பட்ட கவலையை விட அதனுலே ஏற்பட்ட சந்தோசம்தான் எனக்கு அதிகம்'' என்றூர் அவர். மேலும் அவரே கூறினுர்:

''பக்கத்து 'சந்தனச் சோலே' கிராமத்திலே அந்த நாளிலே எங்களோடு ஜெயிலிலே இருந்த தியாகி ஒருத்தரு சாகக் கிடக்கிறூர்னு வந்து தகவல் சொன்னுங்க... உடனே ஒரு டாக்ஸி ஏற்பாடு பண்ணிக்கிட்டுத் தம்பி மணவாளனேடு நான் அங்கேபோகவேண்டிய தாயிடிச்சு. பகல் ஒரு மணியிலிருந்து அங்கேதான் இருந்தேன். இப்பத்தான் திரும்பி வந்து, தம்பியும் நானும் லேக் விபூ ஒட்டல் வாசல்லே இறங்கினேம். உடனே இந்த ரெண்டு தகவல்களேயுமே வந்து சொன்னுங்க... அதான் ஓடியாந்தோம்....''

''எங்களாலே அண்ணுச்சிக்கு இவ்வளவு பெரிய பொருள் சேதம் வந்திட்டதேன்னு நிலேச்சாத் தாங்க முடியாத கவலேயா இருக்கு...''

''கவலேப்படாதே பாண்டியன்! நான் ஒத்தைக் கட்டை. கடை வச்சு லாபம் சம்பாரிச்சு, சொத்துச் சேர்த்து நான் யாருக்கும் கொடுத்துட்டுப் போகப் போறதில்லே. ஏதோ இத்தினி வருசமா இந்த யூனிவர்ஸிடியிலே படிக்கிற பிள்ளேங்களே யெல்லாம் என் சகோதரன்மார்களாக எண்ணிப் பழகி உபகாரம் பண்ணியிருக்கேன். எனக்கு வர லாப நஷ்டம் எல்லாம் என்னேடது மட்டுமில்லே...இதினுலே நான் விழுந்து போயிட மாட்டேன் தம்பி! இதை என்னுலே தாங்கிக்கிட முடியும்.''

அண்ணுச்சி இவ்வாறு கூறியபோது அவருடைய குரல் கரகரத்துத் தொண்டை கம்மிப் போயிருந்தது.

''எல்லாப் போட்டிகளிலுமே நம்ம மாணவர்கள் அத்தனே பேரும் ஜெயிச்சாச்சு. உள்ளேயே விடுதி மைதானத்தில் வெற்றி விழா நடத்த அனுமதி கேட்டோம். வி. ஸி. மாட்டேன்னிட்டாரு. இங்கே நடத்தலாம்னு அபிப்பிராயப்பட்டு வந்தோம். இங்கே இப்படி ஆகியிருக்கு. வெற்றி விழாவே வேண்டாம். 'கான்ஸல்' பண்ணிடலாம்'' என்று பாண்டியன் மனத் தளர்ச்சியோடு சொன்னுன். அண்ணுச்சி அதற்கு இணங்கவில்லே.



''இதுக்காக அதை நிறுத்திடப் பிடாது தம்பீ! இதோ... பத்தே நிமி சத்திலே இந்த இடத்தை ஒழுங்கு பண்ணி மேடை போட்டுத் தரேன்.... எவ்வளவோ தொல்லைங்களுக்கு நடுவில ஜெயிச்சிருக்கோம்... அதைக் கொண் டாடியே ஆகணும்.''

சொல்லிய வார்த்தைகளுக்குக் கொஞ்சமும் குறையாத உற்சாகத் தோடு வேலைகளைச் செய்தார் அண் ணாச்சி. நொறுக்கப்பட்ட சைக்கிள்களை ஒரு மூலையில் அள்ளிப் போட்டு விட்டு மற்றவர்களின் உதவியோடு மேடை அமைத்துத் தோரணங்களும், கொடி களும் கட்டி 'மைக்' ஏற்பாடு செய்து 'மைக்' பையனிடம் 'சினிமாப் பாட்டு கிட்டுப் போட்டீன்னு கொன்னுப்பிடு வேன்' என எச்சரித்து 'பாருக்குள்ளே நல்ல நாடு', 'காந்தியைப் போலொரு சாந்த ஸ்வரூபனை' என்று போட வேண் டிய ரிகார்டுகளையும் தேர்ந்தெடுத்துக் கொடுத்தார் அவர்.

கண் முன்னே தம்முடைய கடை சூறையாடப்பட்டுக் கிடக்கும் நிலை யிலும் சிறிது கூடத் தளராமல் அண் ணாச்சி செய்த காரியங்களைப் பார்த்துப் பாண்டியனுக்கு மெய் சிலிர்த்தது. அவன் மோகன்தாஸிடம் கூறினான்:

''கர்ம யோகிகள் என்று தனியாக எங்கெங்கோ இருப்பதாகப் பேசிக் கொள்கிறோமே, இதோ இங்கே ஒரு கர்ம யோகியைப் பார் மோகன் தாஸ்! இப்படி உண்மையான தொண் டர்களைப் பெற்றுள்ள இயக்கங்கள்தான் நாட்டுக்குக் கர்மயோகிகளை அளிக்கும் தவக் கூடங்கள் போன்றவை. கடந்த விநாடிகளில் ஏற்பட்டு விட்ட இழப்புக் காக முகம் சுளிக்காமல் இந்த விநாடியின் செயல்களில் முகம்மலர ஈடுபடும்தொண் டர்கள் எங்கே யெல்லாம் இருக்கிறார் களோ, அங்கே யெல்லாம்தான் இன்று தவம் இருக்கிறது. நேற்றைய தவங்களை முனிவர்கள் காடுகளிலும் மலைகளிலும் செய்ததாகச் சொல்லுகிறார்கள். இன் றைய தவங்களை நாம் காடுகளில் மலைகளில் செய்ய முடிவதில்லை. நாடு களில், நகரங்களில், ஊர்களில், தெருக் களில் நாம் செய்ய வேண்டிய பல்லா யிரம் தவங்கள் நம்மை எதிர்பார்த்துக் காத்திருக்கும் காலம் இது. அப்படித் தவம் செய்யும் திராணியுள்ள ஓர் உண் மைத் தொண்டரை இதோ பார்!... இன்று நடைபெறும் இந்த வெற்றி விழாக் கூட்டத்திலேயே இவருடைய



கடைக்கு ஏற்பட்டு விட்ட நஷ்டத்தை ஈடுசெய்யும் எந்தக் காரியத்தையாவது நாம் தொடங்க வேண்டும். என்ன சொல்கிறாய்?''

''நிச்சயமாகச் செய்யலாம்! ஆனால் என்ன செய்யப் போகிறோம்; எப்படிச் செய்யப் போகிறோம் என்பதையெல்லாம் இப்போதே அண்ணாச்சியிடம் சொல்லிவிடாதே. அவர் வேண்டாம் என்று மறுத்தாலும் மறுத்து விடுவார். ஆனால் நாளைக் காலையில் பொழுது விடிவதற்குள் இங்கே இந்தக் கடை பழையபடி இருப்பதற்கான எல்லா உதவிகளையும் நாம் செய்ய வேண்டும்.''

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோதே கூட்டம் நடத்துவதற்காகப் போலீஸ் அநுமதி பெறச் சென்ற மாணவர்கள் திரும்பி வந்து, ''அநுமதி கிடைக்கவில்லை பாண்டியன்! 'தேர்தல் முடிவுகளையொட்டி ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பான நிலைகளையும், அண்ணாச்சி கடை வாசலில் ஏற்பட்ட அசம்பாவிதங்களையும் கருதி இன்னும் ஒரு வார காலத்துக்கு மல்லிகைப்பந்தல் நகர எல்லையில் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடைபெறத் தடை விதித்திருக்கிறார்களாம். அதனால் நம் வெற்றி விழாக் கூட்டத்துக்கும் அநுமதி தர மறுக்கிறார்கள்'' என்றனர்.

''சும்மா நாடகம் ஆடுகிறார்கள், போலீஸ் அதிகாரிகள். ஏதோ சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொண்டு வட்டங்களையும், கோட்டங்களையும் பாதுகாப்பதற்காக — நம்முடைய விழாக்களையெல்லாம் நடக்கவிடாமல் செய்கிறார்கள். கொந்தளிப்பான நிலைமைகளுக்குக் காரணமானவர்களைப் பிடித்துக் கைது செய்து அமைதியைப் பாதுகாக்கத் துப்பில்லாமல் அமைதியாயிருப்பவர்களைத் துன்புறுத்துகிறார்கள். இதற்கு நாம் அடங்கக் கூடாது. தடை இருந்தால் தடையை மீறிக் கூட்டம் நடக்கும்... ஒழுங்காகக் கூட்டத்துக்கு அநுமதி உண்டா அல்லது அநுமதியைப் பெறாமலே கூட்டம் நடக்க வேண்டுமா என்பதைப் போய்க் கேட்டு வா!''

வந்த மாணவனும் அவனோடு திரும்பி வந்த மற்றவர்களும் மீண்டும் போலீஸ் நிலையத்துக்கு விரைந்தனர். இதற்குள் நன்றாக இருட்டி விட்டது. குளிரும் அதிகரித்திருந்தது. மேடை அலங்காரம் முடிந்து 'மைக்' கட்டிக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான பாடல்களும் ஒலிபெருக்கிகளின் மூலம் ஒலிக்கத் தொடங்கி விட்டன. சுமார் ஐயாயிரம், ஆறாயிரம் மாணவர்களும் கூடிவிட்டனர். மேலும் மாணவர்கள் கூட்டம் கூட்டமாக வந்த வண்ணம் இருந்தனர். அண்ணாச்சி கடை சூறையாடப்பட்ட செய்தி வேறு காட்டுத் தீயைப் போல் பரவியிருந்தது. மாணவர்கள் மட்டுமில்லாமல் பொதுமக்களும் ஆயிரக் கணக்கில் கூடிவிட்டார்கள். அந்த நிலையில் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்க வேண்டும் என்று பாண்டியனும் மற்ற மாணவர்களும் மணவாளனை வேண்டினார்கள். மணவாளன் மறுத்தார்: ''நான் எதற்கு? உங்களிலேயே யாராவது ஒருவர் தலைமை தாங்குவதுதான் நல்லது. இல்லாவிட்டால் ஓர் உண்மைச் சமூக ஊழியரும் தேசபக்தரும் இன்றைய தினம் வன்முறைக் கும்பலால் பாதிக்கப்பட்டவருமாகிய அண்ணாச்சியையே தலைவராக வைத்துக் கூட்டத்தை நடத்தலாமே?''

மணவாளன் கூறியது போலவே கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதற்கு அண்ணாச்சியும் மறுத்து விட்டார். மீண்டும் மணவாளனிடம் போய் அவரையே தலைவராக இருக்கும்படி வற்புறுத்தினான் பாண்டியன்.

'' நான் ஒரு காரணத்தோடுதான் சொல்கிறேன். இன்றைய கூட்டத்துக்கு நீங்கள்தான் தலைமை தாங்கணும். அதோடு ஒரு விஷயத்தையும் கூட்டத்துக்கு அறிவிக்கணும். அதை உங்க வார்த்தைகளாலே அறிவிச்சீங்கன்னா நல்லாயிருக்கும்'' என்று கூறிக் கொண்டே மணவாளனின் அருகே சென்று காதோடு காதாக அந்த விஷயத்தையும் சொன்னான் பாண்டியன். அதைக் கேட்டதும் மணவாளன் மறு பேச்சுப் பேசாமல் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதற்கு ஒப்புக்கொண்டு விட்டார்.

அவர்கள் கூட்டத்தைத் தொடங்குவதற்கு ஒரு விநாடிக்கு முன்பாகத் தொலைவில் ஒரு போலீஸ் ஜீப் வந்து நின்றது. டி. எஸ். பி. யும், இன்ஸ்பெக்டரும், இரண்டு கான்ஸ்டேபிள்களும் இறங்கி வந்தனர். மாணவர்களின் பெருங் கூட்டம் போலீஸைக் கண்டதும் உணர்ச்சி வசப்பட்டது. ஒரு மாணவன் கூட்டத்தினிடையே நடந்து சென்ற கான்ஸ்டேபிளின் தொப்பியைக் கூடத் தட்டி விட்டு விட்டான், ஆனால் அவ்வளவு பெரிய கூட்டத்தில் திரும்பிப் பார்த்துத் தொப்பியைத் தட்டி விட்டது யாராக இருக்கும் என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

''இப்போது ஜபர்தஸ்துடன் இவ்வளவு வேகமாக வருகிறீர்களே சார்! கடையைச் சூறையாடிய ரௌடிக் கும்பலைப் பிடிக்காமல் ஓட விட்டபோது

பார்க்-டேவிஸ்

மூவகை ஆற்றலுள்ள நிகோ சோப்

மற்றெந்த சோப்பையும் விட உங்கள் சருமத்திற்கு மிகுந்த பாதுகாப்பளிக்கிறது

1 நிகோ சருமக் கிருமிகளைக் கொல்லுகிறது

2 நிகோ உடல் துர்நாற்றத்தைப் போக்குகிறது

3 நிகோ உடலைத் துப்புரவாக்கிப் பாது காப்பளிக்கிறது

நீங்கள் ஆரோக்கியமான சருமத்தைப் பெற, நாள்தோறும் நிகோ சோப் தேய்த்துக் குளியுங்கள். நிகோவின் நச்சுநாச நுரைவளம் சரும நோய்க் கிருமிகளைக் கொன்று, உங்கள் சருமத்திற்கு ஆரோக்கியமளிக்கிறது. நிகோவிலுள்ள மருந்துப் பொருள்கள் வியர்வையினால் ஏற்படும் துர் நாற்றத்தைப் போக்குகின்றன. நிகோ சின்னஞ்சிறிய சருமத் தொற்றுகளையும் எதிர்த்துப் போராடி, சருமத்துக்கு மென்மையளிக்கிறது. அதோடு மினுமினுப்பும் புதுமையும் தருகிறது. இது மட்டுமல்ல; முகப் பருக்கள் மற்றும் வேர்க்குருவிலிருந்தும் உங்கள் சருமத்துக்குப் பாதுகாப்பு தருகிறது. நிகோ. ஷாம்புவாகக்கூட இதைப் பயன்படுத்தலாம். இதனால் பொடுகு விழாமல் தடுக்கிறது நிகோ. எனவே, இன்று முதலே, நிகோ சோப் உபயோகிக்கத் தொடங்குங்கள்.

நிகோ பழக்கத்தைக் கடைப்பிடிப்பீர்.
அது உங்கள் சருமத்திற்கு அவசியம்.

TRIPLE ACTION

NEKO®

The Original Antiseptic Soap



® Regd. Trade Mark. Regd. Users—Parke Davis (India) Ltd., Bombay-72 AS.

JAISONS 293

இந்த வேகமும், இந்த ஜபர்தஸ்தும் எங்கே போயிருந்தன?'' என்று டி. எஸ். பி. காதில் கேட்கும்படியாகவே இரைந்து கத்தினர்கள் சில மாணவர்கள். எதையுமே காதில் போட்டுக் கொள்ளாமல் மேடையை நோக்கி முன்னேறினார் டி. எஸ். பி. அப்போது தான் கூட்டம் தடையை மீறி நடக்கும் என்று மணவாளனைத் தலைவராக அமர்த்தி 'மைக்'கில் அறிவித்துக் கொண்டிருந்தான் பாண்டியன்.

அந்த மேடைக்கு இருபது கஜ தூரத்துக்கும் முன்னதாகவே மாணவர்கள் நெருக்கமாகச் சூழ்ந்து அடைத்துக் கொண்டு வழியை மறித்து விடவே, டி. எஸ். பி.யோ அவரோடு வந்தவர்களோ மேலே செல்ல முடியாமல் அப்படியே நிற்க வேண்டியதாயிற்று.

''கூட்டத்துக்கு அநுமதி வழங்கப்படவில்லை. தடையை மீறி நடத்துகிறீர்கள். இதை நான் அநுமதிக்க மாட்டேன்'' என்று கத்தியபடி ஆத்திரத்தோடு கான்ஸ்டேபிள்களின்பக்கமாகத்திரும்பி, 'மைக்' ஒலிபெருக்கிகளைப் பறிக்குமாறு டி. எஸ். பி. கடுகடுப்போடு உத்தரவிட்டார். மாணவர்களும் பதிலுக்குச் சத்தம் போட்டார்கள். கான்ஸ்டேபிள்கள் மைக் ஒலிபெருக்கிகளைக் கழற்றுவதற்காக நின்ற இடத்திலிருந்து ஓர் அங்குலம் கூட மேலே நகர முடியவில்லை. டி. எஸ். பி. க்கு ஓரளவு அச்சமாகவும் இருந்தது. பல்லாயிரக் கணக்கான மாணவர்களைக் கொதித்து எழச் செய்து, அதன் காரணமாகப் பெரிதாக ஏதாவது ஆகிவிடக் கூடாதே என்று மனத்தில் நடுக்கமும் வந்திருந்த காரணத்தால் அவர் தம் கருத்தை மாற்றி மறு பரிசிலனை செய்தார். மிரட்டுவது போல் மிரட்டி ஒரு நாடகம் ஆடிவிட்டு டி. எஸ். பி., மோகன்தாஸை அருகில் அழைத்து, ''ஆல்ரைட்! பத்தரை மணிவரை இங்கே இந்தக் கூட்டத்தை நடத்திக் கொள்ள உங்களுக்கு அநுமதி தருகிறேன். அமைதியாக நடத்திக்கொள்ளுங்கள். ஒரு சம்பிரதாயமான வெற்றி விழாவாக இதை அநுமதிக்கிறேனேயன்றி, என் அநுமதியைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மாணவர்களை வன்முறைக்குத் தூண்டிவிடவோ இங்கே ஒரு கடை சூறையாடப்பட்டது பற்றிப் பேசவோ கூடாது. உங்கள் பேச்சுக்களால் புதிய அசம்பாவிதங்கள் எதுவும் நேர்ந்துவிட வழிகோலாதீர்கள் என்பதற்காகவே இவ்வளவும் சொல்கிறேன்'' என்றார்.

''வன்முறைக்குத் தூபம் போட்டு வன்முறைகளை நடத்திவிட்டு ஓடிப் போனவர்களைச் சௌகரியமாக ஓடிப் போக விட்டு விட்டு இப்போது எங்களிடம் வந்து அமைதியைக் காக்கச் சொல்கிறீர்கள். அமைதியாக இருப்பவர்களிடம்தான் நீங்கள் அமைதியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று அவருக்குச் சுடச்சுடப் பதில் சொன்னான் மோகன்தாஸ். தொடர்ந்து போலீஸையும், வன்முறையாளர்களையும் பற்றிக் கண்டனக் குரல்கள் விண்ணதிர ஒலித்தன. மாணவ சக்தியின் ஒற்றுமை அக்குரல்களில் கேட்டது.

போலீஸார் ஒதுங்கி நின்று கொண்டார்கள். கூட்டம் நடந்தது. மணவாளன், பாண்டியன், மோகன்தாஸ், கண்ணுக்கினியாள், வெற்றி பெற்ற மற்ற மாணவர்கள் எல்லோரும் மேடையில் அமர்ந்திருந்தனர். எவ்வளவோ வற்புறுத்தியும் கேட்காமல் அண்ணாச்சி மேடைமேல் அமர மறுத்து மேடைக்கு



அருகே பக்கவாட்டில் கீழ்ப்புறமாக ஒரு மடக்கு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

''இதோ பாருங்க தம்பீ! நான் மேடைக்கெல்லாம் வந்து கண்ணைக் கூசற வெளிச்சத்தில் உட்காரமாட்டேன்; ஒரு தேசத் தொண்டனாக என் அரசியல் வாழ்க்கை தொடங்கிச்சு. தொண்டனாகவே அது முடியும். தொண்டனாக வாழறதிலே உள்ள சுதந்திரமும், மானமும் தலைவனாகிறதிலே கிடையாது. என்னை வற்புறுத்தாதீங்க! நான் கீழேயே இருக்கேன். மேலே இருக்கிற பெருமையெல்லாம் எனக்கு வேணும்'' என்று அவர் கூறியபோது அந்த நெஞ்சுக்குள் உறைந்திருந்த கொள்கைக் கட்டிடத்துக்குத் தேக்கு உத்தரமிட்டது போன்ற தெளிவான எண்ணங்கள் தெரிந்தன. அந்தக் கொள்கைப் பிடிப்பு மிகவும் உறுதியாயிருந்ததைக் காண முடிந்தது.

பேரவைத் தேர்தல் வெற்றி விழா, மாலை அணிவித்தல், பாராட்டுக்கள் எல்

சுற்றுப்புறங்களிலிருந்து நியூயார்க்கில் உள்ள அலுவலகங்களுக்குச் செல்பவர்கள் சாதாரணமாக ஒரு மணி முதல் ஒன்றரை மணி நேரம் வரை ரயிலில் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் படித்துக் கல்லூரிப் பட்டம் பெற வசதியாக ஓடும் ரயிலிலேயே வகுப்புக்கள் நடத்தப் போகிறார்களாம்.

நிம்மத் -- பாலி

லாம் இருந்தாலும் மேடையில் பேசியவர்கள் எல்லாரும் அண்ணாச்சி கடை சூறையாடப்பட்ட கொடுமையையும், அதன்-உள் நோக்கத்தையும் விவரித்தே பேசினார்கள். கூட்டத்தில் மாணவர்களும் பொதுமக்களும் பிறருமாகப் பதினையாயிரம் பேருக்கு மேல் திரண்டிருந்தார்கள். கண்ணுக்கினியாள் பேசும்போது அண்ணாச்சியை அந்தப் பல்கலைக் கழகத்தருகே குடிகொண்ட 'காவல் தெய்வம்' என்றும் 'படிக்காத மேதை' என்றும் வருணித்து விட்டு, ''நம்மை யெல்லாம் காக்கிற காவல் தெய்வத்தின் கோயிலே இன்று இடிக்கப் பட்டுவிட்டது. இது கொடுமையிலும் கொடுமை. காவல் தெய்வத்தின் கோயிலே முதலில் கட்டியாக வேண்டும்'' என்று பலமான கைதட்டல்களுக்கிடையே கூறினாள். பாண்டியன் பேசுகையில் தேர்தலுக்கு அபேட்சை மனுவைக் கொடுத்த நாளிலிருந்து தனக்கும் சக மாணவர்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகளை ஒவ்வொன்றாக விவரித்து விட்டு, தான் கடத்தப்பட்டது, தன்னிடம் பலாத்கார முறையில் கையெழுத்து வாங்கியது உட்பட எல்லாவற்றையும் விவரித்தான். அந்த எல்லாக் கொடுமைகளையும் விடப் பெரிய கொடுமையாக அண்ணாச்சி கடை சூறையாடப்பட்டு விட்டதைச் சொல்லிக் குமுறினான்.

''எனக்கு முன்பே பேசிய கண்ணுக்கினியாள் அண்ணாச்சியைத் தெய்வமாக வருணித்தாள். நான் அவரைத் தெய்வம் என்று சொல்ல மாட்டேன். தெய்வங்கள் சோதனை செய்த பின்பே உதவிக்கு வரும். நம் அண்ணாச்சியோ சோதனையின்றியே உதவிக்கு வரும் தூய தொண்டர். தொண்டு செய்வதையே வாழ்வின் தவமாகக் கொண்டவர். அவர் நம்முடைய இணையற்ற நண்பர்'' என்று புகழ்ந்தான் பாண்டியன். இறுதியாக மணவாளன் பேசினார்.

''நண்பர்களே! இறுதியாக நான்பேசு முன் உங்களுக்கு ஓர் அறிவிப்பைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாபெரும் நண்பரான அண்ணாச்சிக்கு ஏற்பட்ட நஷ்டங்களை ஈடு செய்ய மாணவருலகம் கடமைப் பட்டிருக்கிறது. அதற்காக இப்போது உங்களிடையே சகோதரி கண்ணுக்கினியாள், பாண்டியன், மோகன்தாஸ், பொன்னையா, மாரியப்பன் ஆகியவர்கள் வசூலுக்கு வருகிறார்கள். தாராளமாக உதவுங்கள்'' என்று அவர் அறிவித்ததும் கண்ணுக்கினியாள் முதலிய ஐவரும் வசூலுக்காகத் துண்டு ஏந்தி விரித்தபடி கூட்டத்தில் இறங்கினார்கள்.

மணவாளன் மேலே தொடர்ந்தார்:

''இன்று நம்முடைய சமூக, அரசியல், பொருளாதார வானத்திலே கூடியுள்ள கரு மேகங்களைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. இந்த மேகங்களின் தற்காலிக இருட்டு நம்மைப் பயமுறுத்துகிறது. நாம் ஒரு மகத்தான மாறுதலுக்காகக் காத்து நிற்கிறோம். நமது நாடு லஞ்சமும், ஊழலும், பதவி ஆசையும், அதிகார வெறியும் இல்லாத ஒரு நற்காலத்தை எதிர்பார்த்துப் போராடி வருகிறது. இந்தப் போராட்டத்தில் அதிர்ஷ்டவசமாக மாணவர்கள் முன் நிற்கிறார்கள். நம்மால் வருங்காலத்தை மாற்ற முடியும் என்பதனால்தான் நிகழ்காலத்தை ஆள்கிறவர்களுக்கு நம்மேல் கோபம் வருகிறது. நம்மை அடக்குகிறார்கள்; ஒடுக்குகிறார்கள். நமக்கு மேலேயும் சுற்றிலும் இருளைப் படைக்கும் இந்த அதிகார மேகங்களால் ஒரு பெரிய மழை வரும். அந்த மழையால் ஒரு வெள்ளம், - ஏன், ஒரு யுகப் பிரளயமே கூட வரலாம். அந்த மழையின் பின் அந்த யுகப் பிரளயத்தின் பின் ஏற்படவிருக்கும் சத்தியப் பிரவாகத்தில் நீந்தக் காத்திருக்கிறோம் நாம். அசத்தியங்களும், கொடுமைகளும், அதிகாரங்களும் அடக்குமுறைகளும், அதிகமாகி, இருள் கனத்து மூடும்போதெல்லாம் நாம் ஒரு சத்தியப் பெருக்கை அவாவி நிற்போம்....''

மணவாளனின் பேச்சு ஒரு கணம் தடைப்பட்டது. மேடையை நோக்கிச் சரமாரியாகக் கற்கள் வந்து விழுந்தன. ஆனாலும் மணவாளன் மேடையிலேயே நின்று தீரனாகப் பேசிக்கொண்டிருந்தார். நெற்றிப் பொட்டில் ஒரு கல் விழுந்து குருதி சிந்தியது. அண்ணாச்சி மேடைமேல் தாவி ஏறி மணவாளனை மறைத்துக் கொண்டு முன் நின்றார். மாணவர்கள் கல்லெறிபவர்களைப் பிடிப்பதற்காக விரைந்தனர். போலீஸ் கைகட்டி நின்று கொண்டிருந்ததைக் கூட்டத்தினர் எல்லாருமே பார்த்தார்கள். ஒரே கூப்பாடும், குழப்பமுமாகி இருந்தாலும் யாரும் அங்கிருந்து கலைந்து போகவில்லை. (தொடரும்)



—நீரில் கலந்த
அழுக்கு
எதையும் ஏற்காத,
அருமையான
ஸ்டெயின்லெஸ்
பருத்தித் துணி

பின்னியின்
படைப்பு.

BSCM-2A/72TAM

10 இந்தியர்களில் 8 பேர் கிராமங்களில் வசிக்கிறார்கள் என்றால்




அவர்களை நாம் அதிகமாகக் கவனிக்க வேண்டிய நேரம் இது!

எனவே யூகோபாங்க் நம் நாட்டிற்கென்று தனது சேவையை மிக விரிவாகப் பரப்புகின்றது. எங்கள் அலுவலே நாட்டிற்குச் சேவை செய்வதாகும். விவசாயத்திற்கும் கிராம முன்னேற்றத்திற்கும் விசேஷ முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், கிராமங்களின் அடித்தளம் பலமாயிருந்தால் இந்தியாவும் பலமிருந்திருக்கும்.

அவ்விடங்களில் தான் யூகோபாங்க் நாட்டின் செல்வத்தை நல்ல வகையில் உபயோகிக்கின்றது. அங்குதான் 80 சதத்திற்கு மேலான இந்தியர்கள் வசிக்கின்றனர்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.

UCO-4/71



1921, டிசம்பர் 27உ.

ராஜாஜியின் ஜெயில் டைரி

பெரிய சடங்கு நடந்து முடிந்துவிட்டது. சிறையின் தலைமை அதிகாரி இங்கட்கிழமை தோறும் சிறையைச் சுற்றிப் பார்த்துக் கைதிகள் ஒவ்வொருவரையும் விசாரிக்கவேண்டுமென்பது விதி. ஆனால் நடப்பது இதுதான்: அவர் ஒவ்வொரு பகுதிக்கும் வருவார். கைதிகள் ஒவ்வொருவரும் தமக்குக் கொடுத்துள்ள கம்பளியையும் பாயையும் விரித்து வைத்துக் கொண்டு தம்முடைய அறை முன் நிற்பார்கள்.

'' உங்கள் சொந்தப் படுக்கையையும் வெளியே கொண்டுவந்து வைக்க வேண்டியதுதான். தரை அசுத்தமாக இருந்தால் வராந்தாவில் வைக்கலாம்'' என்று தலைமை அதிகாரி என்னிடம் கூறினார்.

நேற்று கிறிஸ்து பிறந்த தினமாதலால் பார்வையிடும் வைபவம் இன்றே நடைபெறலாயிற்று. எங்களுக்குப் பத்திரிகைகள் தரலாமோ என்று கேட்டேன். 'எந்தப் பத்திரிகையும் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்.

அவர் அதற்கு முந்திய வாரத்தில் என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதாகச் சொன்னதை நான் அவருக்கு ஞாபகமூட்டவில்லை. எல்லாம் அதுவாக நடக்கட்டும் என்று சும்மா இருந்து விட்டேன். எங்களுடைய சித்தூர் தையல்கார நண்பர் சந்தாமியான் சாகேபை வெளியேயுள்ள சிறு அறைக்கு அழைத்துப் போகும்படி அவர் உத்தரவிட்டார். அந்த நண்பர் கடுங்காவல் /தண்டனை பெற்றவராம். அவர் மனோதைரியமும் தேகக் கட்டும் உடையவர். அவருக்கு நாற்பத்துமூன்று வயதிருக்கும்.



நேற்று இரவு மருந்து சாப்பிட்டேன். இழுப்பு வரவில்லை. என்னுடைய வலது காலில் இதுவரை பருக்கள் ஏற்பட்டுக் கஷ்டம் தந்தது போதாதென்று இப்போது மறுபடியும் ஒன்று புதிதாக முளைத்திருக்கிறது. போதுமான அளவு பருக்கள் வந்து தீர்ந்து விட்டபடியால் இனிமேல் வராது என்று எண்ணினேன். ஆனால் அந்தப் பாதுகாவல் அதிக நாள் நீடிக்கவில்லை என்று தோன்றுகிறது.

நான் மனத்தைப் பலவிதத்திலும் திடப்படுத்தி வருகிறேன். சிறைவாசத்தின் உண்மையான இயல்பைப் பற்றியும், தேசத்தின் மோசமான நிலைமையைப் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்குமாறு என்னுடைய மனத்துக்கு அடிக்கடி கூறி வருகிறேன். இத்தனை எச்சரிக்கையாக இருந்தபோதிலும் என்ன காரணமோ இடையிடையே என் மனமானது திடீரென்று சோர்வு அடைந்து விடுகின்றது. இதயமானது அன்பை நாடி அலைவதுதான் காரணம் என்று எண்ணுகிறேன். தினந்தோறும் கைதிகளையும் வார்டர்களையும் ஒத்துழையாமைக்காரர்களையும் பார்க்கிறேன். அவர்களும் என்னிடம் சகோதர வாஞ்சை காட்டவே செய்கிறார்கள். ஆனால் என் இதயம் விரும்புகின்ற அன்பு அதுவன்று. இந்த மாதிரி அடிக்கடி என் இதயம் சூன்யமாக ஆகிவிட்டதுபோல் வருந்துகின்றது. தாயை விட்டுப் பிரிந்த குழந்தைகள் மனத்தில் எத்தகைய பயம் உண்டாகுமோ அத்தகைய பயம் என்னுடைய மனத்தில் உண்டாகின்றது. அண்ட சராசரங்கள் அனைத்

தையும் சிருஷ்டிக்கும் அன்னை எனக்கு ஆற்றலும் மனோ தைரியமும் அருள் புரிவாளாகுக! என்னிடம் அன்பு கொண்டவர்கள் எல்லோரும் அங்கே சிறைக்கு வெளியே இருக்கிறார்கள். இப்படிப் பிரிந்திருக்க நேரிட்டிருப்பதன் காரணமாக என்னிடம் அவர்கள் முன்னிலும் அதிகமாக அன்பு கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதுகூட அவர்களுடைய அன்பானது சிறைக் கதவையும் மீறி என்னிடம் வந்து கொண்டேயிருக்கிறது. அவர்களுடைய அன்புக்காக வாடி நிற்கும் மயக்கமானது நீங்கி நான் அவர்களுடைய அன்பின் தன்மையைச் சரியாக உணர்ந்து என் மனத்தைத் தளரவிடாமல் உறுதி செய்து கொள்வேனாக!

வழக்கம்போல் மாலை ஆறு மணிக்குக் கதவைப் பூட்டி விட்டார்கள். முன் கூட்டி இரண்டுவேளை ஆஸ்துமா மருந்து வாங்கி வைத்துக் கொண்டேன்.

நமக்கும் சுதந்திரத்துக்கு மிடையில் நிற்கும் இடையூறுகள் சிறை பயம், மரண பயம் என்னும் இரண்டே. எங்களைப் போல் அநேக மக்கள் இங்கு வந்துவிட்டால் அப்புறம் சிறை பயம் அறவே அழிந்து போகும். சிறையிலிருக்கும்போது நம்முடைய பெரிய மதத்தை ஆராயும் விஷயத்தில் நம்முடைய நேரத்தைச் சரியாகச் செலவு செய்வோமானால் மரண பயத்தையும் எளிதில் வென்றுவிடலாம்.

இன்று சுடுதண்ணீர் கிடைப்பதில் கஷ்டம் ஏற்பட்டதால் நான் குளிர்ந்த நீரிலேயே ஸ்நானம் செய்தேன். சுடுதண்ணீர் பெறுவது சர்க்கார் அநுமதியாத ஒரு சுகம் என்று அறிகின்றேன்.

ஓர் எழுத்து மாறினால்...



'....பெயரைக் கேட்டால் போதும், அழுத பிள்ளை வாயை மூடும்!' என்பார்களே—அது 'பிப்மால்-சி' என்ற மருந்துக்கு முற்றிலும் பொருத்தமாகி விட்டது. ப்ராபிலீன் க்ளைகாலுக்குப் பதிலாக டை-எதிலீன் க்ளைகாலைச் சேர்த்து அம்மருந்தினைத் தயாரித்ததன் விளைவாக எழும்பூர் ஆஸ்பத்திரியில் பதினான்கு குழந்தைகள் உயிரிழக்க நேர்ந்த பரிதாபச் செய்தி 30–8–72 அன்று வெளியாயிது.

இது குறித்து இராசயனப் பேராசிரியர் டாக்டர் ஏ. ஸ்ரீனிவாஸனுடன் உரையாடுகையில் அவர் குறிப்பிட்டார்: "ஒரே மாதிரி உச்சரிப்புள்ள இரசாயனப் பொருட்கள் பல இருக்கின்றன. இவற்றை ஒன்றுக்கொன்று தவறாக உபயோகித்து விட்டால் விபரீதமாகிவிடும்."

1. மெதில் ஆல்கஹால் (Methyl Alcohol) மரத்திலிருந்து தயாரிக்கப் படுவது. உடலுக்குத் தீங்கு விளைவிப்பது.

எதில் ஆல்கஹால் (Ethyl Alcohol) தானியங்களிலிருந்து தயாரிக்கப்படுவது. இதன் நீர்த்த கரைசல் (Dilute Solution) ஒயின் ஆகும்; மருந்துகள் தயாரிப்பில் பயன்படும்.

2. மெதில் எதில் கீடோன் (Methyl Ethyl Ketone) பெட்ரோலியத்தில் உள்ள மெழுகை நீக்கப் பயன்படுவது.

டைமெதில் கீடோன் (Di Methyl Ketone) அல்லது அஸிடோன் (Acetone) ரேயான், பெயிண்ட் தயாரிப்பதற்குப் பயன்படும் பொருள். இதனைச் சுருக்கமாக டி. எம். கே. (D.M.K.) என்றும் கூறுவதுண்டு.

இரசாயனத்தில் கூடவா 'டி. எம். கே.' என்று வியக்கிறேன்! அவர் தொடர்ந்து கூறுகிறார்:

3. அஸெடிக் அமிலம் (Acetic Acid) ஊறுகாயில் சேர்க்கப்படும் வினிகர் தயாரிக்கப் பயன்படுவது. ஃபார்மிக் அமிலம் (FormicAcid) தோல் பதனிடவும் வண்ணமூட்டவும் பயன்படுவதாகும். சிவப்பு எறும்பு கடிக்கும்போது இந்த விஷம்தான் உடலில் ஏறுகிறது. முற்காலத்தில் சிவப்பு எறும்புகளைப் பிடித்துக் காய்ச்சி வடிகட்டி (Distillation) ஃபார்மிக் அமிலம் தயாரித்தனர்.

4. ஈதர் பலவகைப்படும். டை எதில் ஈதர் (Di ethyl ether), டைவினைல் ஈதர் (Divinyl ether) இரண்டும் மயக்க மருந்தாகப் பயன்படுத்தப் படுகிறது. டை மெதில் ஈதர், மெதில் எதில் ஈதர், மெதில் ப்ரோபில் ஈதர், டை ஐஸோ ப்ரோபில் ஈதர் என்று வேறு பல வகை 'ஈதர்' உண்டு. இவை மயக்க மருந்தாகப் பயன்படா.

5. அட்ரோபைன் (Atropine) கண்ணில் சில துளிகள் விட்டுக் கண்மணியை விரிவடையச் செய்து கண் வைத்தியர்கள் பரிசோதனை செய்வது வழக்கம். மாறாக ட்ரோபைன் (Tropine) என்ற பொருளை உபயோகித்தால் பலன் ஏதும் இராது!

6. க்வினைன் மலேரியாவுக்குக் கைகண்ட மருந்து. அதற்குப் பதில் க்வினிடின் (Quinidine) உபயோகித்தால் பயனிராது.

"இப்படி எத்தனையோ இருக்கின்றன" என்கிறார் பேராசிரியர். —பா. பானுமதி




க்ரிஸ்டல் புன்னகையின் பிரதிபலிப்பு

க்ரிஸ்டல்-க்ளீன் பற்கள்-
க்ரிஸ்டல்-க்ளீன் மூச்சு

க்ரிஸ்டல் குறுநகையே குதூகல வாழ்வின் பிரதிபலிப்பு. காரணம், க்ரிஸ்டல் பற்பசையில் உள்ளடங்கிய மகோன்னதப் பொருள்கள் பற்சிதைவைத் தடுப்பவை— வாயை நாள்முழுவதும் துப்புரவாகப் புதுமலர்ச்சியோடு வைத்திருப்பவை.

க்ரிஸ்டல்

டூத் பேஸ்ட்



SLS மற்றும் DCP அடங்கியது.

மகோன்னத நுரை, மகோன்னத சுவைநயம்.

2 சைஸ்களில் கிடைக்கிறது.


அலெம்பிக் ஹோம்ப்ரோ தயாரிப்பு.

everest/361n/ACW-TM


CIBA Cosmetics
சொகுசான
நங்கையருக்கேற்ற
சோபிதமான டால்க்—
பினெல்லா
பினெல்லா ஸ்டார்டஸ்ட் டால்க்கின் சுகந்தக்
கிறுகிறுப்பு நாள்முழுக்க நிலைத்து நிற்கிறது "நீங்கள்
விலையுயர்ந்த செண்ட் பூசியுள்ளீர்களோ"
எனப் பிறரை மயங்க வைக்கிறது. ஆம்.
பினெல்லா மேனியிலிருந்தால், அத்தரோ
செண்டோ பூச அவசியமேயில்லை' அந்த
அளவு சொகுசான, சோபித சுகந்தம்
அளிக்கும் ஒரே டால்க—பினெல்லா
Binella
பினெல்லா
ஸ்டார்டஸ்ட் டால்க்

CBIT-1 TAM

ஸைக்கோ ஸாரநாதன்



38. புலி பாய்ந்தது!

அன்றிரவு உணவை முடித்துக் கொண்டு சாப்பாட்டுக் கூடத்தை விட்டுத் திறந்தவெளிக்கு வந்தபோது பத்மநாபனின் பற்கள் தந்தி அடிக்க ஆரம்பித்தன.

''என்னவோ இன்றைக்குக் குளிர் ரொம்ப அதிகமா இருக்கிறாப் போலத் தோன்றுகிறது'' என்றார்.

''நியாயமா டி. ஐ. ஜி. ஸார் மர்மங்களையெல்லாம் விடுவிச்சுக் குற்றவாளிகளைப் பிடிச்சுட்டதாலே குளிர் விட்டுப் போயிருக்கணும் உங்களுக்கு!'' என்றான் அமிர்தலிங்கம்.

''நாளைக்கு நாங்க ஊர் திரும்பறோம், மிஸ்டர் அமிர்தலிங்கம்! உங்களைச் சந்திக்கப் பழக நேர்ந்ததிலே ரொம்ப மகிழ்ச்சி'' என்றார் பத்மநாபன்.

அனுவின் காமிராவை அவன் உடைத்தபோது அவன் பேரில் கோபம் ஏற்பட்டிருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் மறுநாளே அவன் ப்ரையண்ட் பார்க்கில் அனுசூயாவுடன் சிறுபிள்ளைபோல் விளையாடிக் கொண்டிருந்தான் என்பதை அறிந்ததும், அவர் காழ்ப்பு இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. சிறுமி அனுசூயா தன் வயதுக்கேற்ற இயல்புப்படி சட்டென நடந்ததை மறந்து விடவே, இவரும் அந்நினைவை ஒதுக்கித் தள்ளிவிட்டார். அமிர்தலிங்கம் பணத்தைத் தண்ணீராகச் செலவிட்டுக் கொண்டிருந்ததானது அவனிடம் மதிப்பை உயர்த்திச் சுமூகமான உறவு நிலவ உதவியது. அவன் வாரி விட்டுக் கொண்டிருப்பது பிதுரார்ஜிதச் சொத்தோ அல்லது உழைப்பும் திறமையும் சம்பாதித்துத் தந்த பணமோ அல்ல; டாக்டர் குஹாவிடமிருந்து கொள்ளையடித்து வந்த ரூபாய் நோட்டுக்கள் என்பது பாவம், பத்மநாபனுக்கு எப்படித் தெரியும்?

''நடுவிலே ஏதாவது அசம்பாவிதமா நடந்திருந்ததுன்னு அதை மனசிலே வைச்சுக்காதீங்க; சென்னைக்கு வரப்போ அவசியம் நம்ம வீட்டுக்கு வாங்க'' என்று உபசாரமாகச் சொன்னார் 'அன்னம்' பத்திரிகை துணை ஆசிரியர்.

''ஓ எஸ்!'' என்றான் அமிர்தலிங்கம். ''எப்படியும் மீனுவின் கல்யாணத்துக்கு வரவேண்டியவன்தானே நான்?'' இப்படிக் கேட்டவன் ரங்கனை நோக்கியபடி, ''சீக்கிரம் நடந்திடுமில்லையா?'' என்றான். ''அழைப்பிதழ் அனுப்பத் தவறாதீங்க!''

தம்பிடமிருந்து பார்வையைத் திருப்பி ரங்கனை நோக்கி அவன் பேசிய தன் உட்கருத்தைப் பத்மநாபன் புரிந்து கொண்டார். ஆயினும் அதை உணர்ந்ததாகக் காட்டிக் கொள்ளாமல் ''உங்க விலாசமே தெரியாதே எனக்கு'' என்றார். ''யோசித்துப் பார்த்தா ஆச்சரியமாகக் கூட இருக்கு. இரண்டு வாரங்களுக்கு மேலே பழகியிருக்கோம். ஆனாலும் இன்னும் உங்களைப் பற்றி ஒரு விவரமும் எனக்குச் சொல்லலே நீங்க!''

ஜீ.ராஜேந்திரன்



"பணக்காரனுக்குப் பிள்ளையாகப் பிறக்கிற பாக்கியம் பண்ணினதாலே கடந்த இரண்டு வருஷங்களுக்கு மேலாகவே என் விலாசம் 'கேர் ஆஃப் இஸ் ஆர் தட் ஹோட்ட'லாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனாலும் டோண்ட் ஒர்ரி. நியூயார்க்கிலே இருந்தால்கூட மீனு மேரியேஜ்ஜுக்கு ஜம்போவிலே பறந்து வந்து விடுவேன்."

"அது சரி; நியூயார்க்கில் நீங்க இருக்கும்போது மீனுவுக்கு இங்கே கல்யாணம் நடக்கிறது உங்களுக்கு எப்படித் தெரியும்? ஏதாவது விலாசம் கொடுத்தால் தானே?"

"அதென்ன அப்படிச் சொல்லிட்டீங்க? ஸஹாரா பாலைவனமானாலும் பத்மநாபன் மகள் கல்யாணம்னு விஷயம் அங்கே எட்டாமல் போகுமா?"

"ஏற்கெனவே குளிர் நடுக்குகிறது. இன்னும் ஐஸ் வேறே வைக்கறேள்!" என்றார் பத்மநாபன், விலாசம் தர அவன் விரும்பவில்லை போலும் என்று எண்ணியவராக.

"குட் நைட்" என்று கூறிப் பிரிந்தான் அமிர்தலிங்கம்.

"நாங்களும் வரோம்" என்று விடை பெற்றார் நடராஜன். "நாளைக்கு நீங்க புறப்படுவதற்குமுன்னால் பார்க்கலாம்."

தகப்பனாரைப் பின்பற்றி நடந்த ரங்கநாதன் ஒரு முறை திரும்பி மீனுவை நோக்கினான். சாப்பாட்டுக் கூடத்து வாசலில் விளக்கொளியில் மீனுவின் கண்கள் நீர்த் திரையிட்டு மின்னுவதானது பனிச்சென்று தெரிந்தது. அந்த ஒளிச் சிதறலினூடே அவள் பார்வை 'ஜாக்கிரதை! ஜாக்கிரதை! எனக்காக ஆயிரம் தடவை ஜாக்கிரதை!' என்று கெஞ்சுவது புரிந்தது.

* * *

தாங்கள் தங்கியிருந்த அறையை நெருங்கியதும், "சாவி யார்கிட்டே இருக்கு?" என்றார் பத்மநாபன்.

வராந்தாவில் கண்ணாடிக் கதவின் பூட்டைத் திறந்து விட்டு, உடைந்திருந்த பகுதி வழியே கையை நுழைத்து உள் பக்கம் போட்டிருந்த தாழ்ப்பாளையும் திறந்தாள் மீனு.

"தேவலாம்; 'வேறு கண்ணாடி பதிக்கிறேன்' என்று சொல்லிச் சொல்லியே கடைசி வரையில் சமாளித்துவிட்டார் தனராஜ்" என்றார் பத்மநாபன். "நாம கிளம்ப வேண்டிய சமயமே வந்துடுத்து."

"திருடன் வந்தால் கண்ணாடி ஒரு பிரமாதமா? உடைத்து நொறுக்கிக் கையை உள்ளே விட எத்தனை நேரமாகும்?" என்று மீனு கேட்டாள்.

"உடைக்கிற சத்தமாவது கேட்குமில்லையா?"

"உங்களுக்கா?" என்றாள் அம்புஜம். "குறட்டை விட ஆரம்பிச்சால் பூகம்பம் வந்தால்கூடத் தெரியாதே!"

"இது வராந்தாதானே அப்பா? அறைக்குத் தனிக் கதவு இருக்கே. அதை உள் பக்கம் தாளிட்டுக்கொண்டு தானே படுக்கிறோம்?"

"யார் இல்லேன்னு? ஒண்ணுக்கு இரண்டா கதவும் தாழ்ப்பாள்களும் இருந்தால் பத்திரம்தானே என்கிறதால் சொன்னேன். போதாக்குறைக்கு இந்த ஓட்டை வழியா ரத்தத்தை உறைய வைக்கிற மாதிரி சில்லுன்னு காற்று அடிக்கிறது." பெரிதாகக் கொட்டாவி விட்டார் அவர்.

"அம்புஜம்! உனக்கு ஏமாற்றம் அளிக்க நான் விரும்பலே. கண்ணை அசத்தறது. படுத்துண்டு 'குறட்டைவிடறேன்'" என்றார்.

"உங்களுக்கு என்ன? தொப்புன்னு விழுந்துடுவேள். நான் இனிமே வெந்நீர் போட்டு இதுகளுக்கு ஹார்லிக்ஸ் கரைச்சுக் கொடுத்து, அதைச் சாப்பிட இவா பண்ணுகிற சண்டித்தனத்தைச் சமாளிச்சு, படுக்கையிலே வைச்சு அமுக்கித் தட்டிக்கொடுத்து, கதை சொல்லித் தூங்கப் பண்ணறதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடறது" என்ற அம்புஜம் மின்சாரக் கெட்டிலில் நீரை நிரப்பிப் பிளக்கைச் செருகினாள்.

"என்னுடைய அனுதாபங்களைக் குறட்டை ஒலி மூலமாகத் தெரிவிச்சுக்கறேன்" என்றார் பத்மநாபன். பின்னர் அம்புஜம் வெந்நீருடன் சேர்ந்து தனைக் கப்போகிறாளோ என்று அஞ்சியவராக, "மீனு! அம்மாவுக்கு உதவி பண்ணு" என்று ஒப்புக்குச் சொல்லிவிட்டுக் கட்டிலில் படுத்தார். நடுத்தர வயதும் பலமான சாப்பாடும் அவரைச் சீக்கிரமே நித்திரை லோகத்துக்கு அழைத்துச் செல்லும் வாகனமாயின.

மீனு அப்பாவின் பேச்சை இலட்சியம் பண்ணாமல் ஒரு கதைப் புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு படுத்தாள்.

"படுத்தாதீங்கோ. நாலு வைச்சுடுவேன்" என்ற மிரட்டல் ஒலி சில நிமிஷங்களில் எழுந்தது. "கதை சொல்லணும்" என்று உத்தரவாதம் வாங்கிக்கொண்டு ஹார்லிக்ஸைக் குடித்து முடித்த அனுவும் விசுவும் தாயாருக்கு இரண்டு புறத்திலும் படுத்தனர். அனுவின் வலது காலும் விசுவின் இடது காலும் தாயார் மீது பாசத்துடன் விழுந்து இருந்தன.

''ஒரே ஒரு ஊரில் ஒரு ஈ இருந்ததாம். அதுக்குத் தன் பேர் மறந்து போச்சாம். ஒரு கன்னுக்குட்டிக் கிட்டே போய்க் கொழு கொழு கன்றே...'; இப்படியாகக் கதை கூற ஆரம்பித்த அம்புஜம், ''இந்தா மீனு! படிச்சது போதும்; வாசற் கதவைச் சாத்திட்டு, விளக்கை அணைச்சுட்டுப் படுத்துக்கோ'' என்றாள்.

''ஆகட்டும்'' என்றாள் மீனு. அவள் படித்துக்கொண்டா இருந்தாள்? 'பிரமை பிடித்தது போல் எதுக்குடி உட்கார்ந்திருக்கே?' என்று தாயார் கேட்கப் போகிறாளே என்பதற்காக ஒரு புத்தகத்தைப் பிரித்து நெஞ்சுக்கு மேலே நிறுத்திக் கொண்டிருந்தாளே ஒழிய, அவள் மனமெல்லாம் ரங்கனிடம் அல்லவா இருந்தது? 'அவருக்கு ஏதாவது ஆபத்து நேருமோ? என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் அப்பாவும் மகனும்? சைக்கோ சாரநாதனைப் பிடிக்க இரவில்தான் முயல வேண்டுமா? எங்கே இருக்கிறான் அவன்? ஜீப்பில் ஏறிப் போவார்களா? சத்தம் கேட்குமே அவர்கள் புறப்படும் போது; எழுந்து போய்ப் பார்க்கலாமா?' அது



அவருக்குப் பிடிக்குமோ என்னமோ?' இவ்வாறெல்லாம் பலவாறாக யோசித்த படி யிருந்தாள் மீனு.

''...கோல் வளர்ந்த கொடி மரமே, கொடி மரத்தில் இருக்கும் கொக்கே, என் பேர் என்ன?'' என்று கதை கூறிக் கொண்டு போன அம்புஜம், பக்கத்து மேஜையின்மேல் இருந்த டிராவல் அலாரம் கடிகாரத்தைப் பார்த்தாள். ''மணி பத்தரையாகியிருக்கு இதுகள் தூங்க'' என்று அலுத்துக் கொண்டவள், தன் மீது கனத்துக் கொண்டிருந்த கால்களை விலக்கிவிட்டு ஒருக்களித்துப் படுத்தாள்.

திடும்மென்று விளக்கு அணைந்தது. ''மறுபடியும் கரண்ட் ஃபெய்லியர் போலிருக்கு'' என்றாள் அம்புஜம், தூக்கத்தில் தடித்த குரலில். ''இங்கே தங்கியிருந்த பதினாறு ராத்திரிகளில் பத்து ராத்திரிகளுக்குக் குறையாமே மின்சாரத் தடை!''

''உம்'' என்றாள் மீனு.

''இதுக்காகவே சிம்னி விளக்கு ஒண்ணு வைச்சிருப்பானே;ஏத்தறியா?''

''உம்'' என்றாள் மீனு அசுவாரசியமாக.

''கதவைச் சாத்தியாச்சா?'' என்ற போது அம்புஜத்தின் நாக் குழறியது; கண்ணிமைகள் கனத்தன.

''உம், உம்!'' என்றாள் மீனு அசிரத்தையாக.

கதவு திறந்துதானிருந்தது. மீனுவின் கண்களும் திறந்தே இருந்தன, இருளிலும்.

* * *

விளக்கு அணைந்தபோது அமிர்தலிங்கம் ஏற்கனவே ஸாரநாதனாக மாறி விட்டிருந்தான். அவன் டோஃபா, பவர் இல்லாத மூக்குக் கண்ணாடி, பொய்த் தாடி மீசை, மணிமாலை எல்லாம் டிரெஸ்ஸிங் டேபிள்மீது இருந்தன. ஹிப்பி பாணி உடை கட்டில் மேல் கிடந்தது. கொடைக்கானல் கடைத் தெருவில் தான் துணி வாங்கித் தைத்திருந்த ஒரு பைஜாமா ஜிப்பாவை அணிந்து, வழுக்கைத் தலையை ஒரு தடவை தடவி விட்டுக் கொண்டவன், மற்றொரு கடையில் தான் வாங்கியிருந்த புத்தம் புதிய நன்கு முறுக்கேற்றப் பட்ட நாலு முழம் மணிக் கயிற்றைப் பெட்டியைத் துழாவி எடுத்தான்.

அது இப்போது அவன் கரத்தைவிடு விடுவென்று சுற்றி வளைத்தது. அதே வேகத்தில் பிரிந்து கொள்ளவும் செய்தது. அந்த வேகத்துக்கு ஏற்ப அவன் மனத்திலும் ஒரு குமுறல் விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டுபோயிற்று. கடைசியில் 'இந்தச் சுமையை இனியும் தாங்கிக் கொண்டிருக்க முடியாது; ஒரு வடிகாலைத் தேட வேண்டியதுதான்' என்ற நிலைக்கு அவன் வந்து விட்டான். அடக்கமாட்டாத ஒரு வெறி உந்தித் தள்ள அவன், நெஞ்சை இறைக்கச் செய்த சிறிய சிறிய பெருமூச்சுக்களுடன் தன் அறையை விட்டு வெளியேறியபோது மணி பன்னிரண்டு.

* * *

அறைக்குத் திரும்பிய நடராஜனும் ரங்கனும் துரிதமாக ஆனால் ஒருவித நிச்சய புத்தியுடன் பரபரப்பின்றிச் செயல்பட்டனர். ஜவுளிக் கடை ஒன்றில் ஸூட் அணிந்து அலங்காரமாக நின்ற ஆண்மகன் சிலைகள் இரண்டினை அவசரத் தேவை என்று சொல்லி டி.ஐ.ஜி. இரவல் கேட்டிருந்தார். அவர் கோரியதை இல்லை என்று கூறக் கடைக்காரருக்குத் துணிவு வருமா, என்ன? அன்று பிற்பகல் அவர்கள் ஆப்ஸர்வேட்டரிக்கும் ஏரிக்கும் போயிருந்தபோது, நடராஜனின் உத்தரவுப்படி போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இடுப்புவரையிலான அப்பொம்மைகளை நன்றாகத் தான் போட்டுச் சுற்றிக் கொணர்ந்து அவர் அறையில் வைத்து விட்டுப் போயிருந்தார். இதற்கெனவே தம் அறைச் சாவியை ரிஸப்ஷனில் கொடுத்துச் சென்றிருந்தார் நடராஜன்.

அந்தப் பெரிய பொட்டலம் இப்போது பிரிக்கப்பட்டு, பொம்மைகள் நடராஜன், ரங்கன் ஆகியோருக்குப் பதில் அவர்களுடைய நைட் டிரஸ்களை அணிந்த கோலத்தில் கட்டில்களில் படுத்திருந்தன. இடுப்புக்குக் கீழே இரு தலையணைகளை வைத்துப் போர்த்தியிருந்தனர். வராந்தா கண்ணாடிக் கதவு, உள்ளே அறையின் வாசல் கதவு இரண்டையும் திறந்து வைத்துவிட்டு, நாலு ஸெல் டார்ச் நன்றாக வேலை செய்கிறதா என்று பரீட்சித்தார் டி.ஐ.ஜி. கைத் துப்பாக்கியையும் சரிபார்த்துக்கொண்டார்.

''இனி விளக்குகளை யெல்லாம் அணைத்து விட்டுக் காத்திருக்க வேண்டியதுதான்'' என்றவர் அறையின் வாசல் கதவோரமாக நாற்காலியை இழுத்துப் போட்டு மறைந்தவாறு அமர்ந்தார். ''நீ பாத்ரூமில் ஒரு ஸ்டூலைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திரு, ரங்கன்! அந்தக் கதவும் திறந்தே இருக்கட்டும்'' என்றார்.

''பாத் ரூம் வழியாக உள்ளே வரக் கொல்லைப்புறக் கதவு ஒன்றிருக்கிறதே'' என்றான் ரங்கன்.

''அதை நன்றாக இழுத்துச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுவிடு! வாசல்புற


வண்ணங்களில் உங்கள் எண்ணத்தை
பிரதிபலிக்கச் செய்யும்
அசல் காஞ்சீபுரம் பட்டுப்புடவைகளை
நியாய விலையில் தேர்ந்தெடுக்க சிறந்த இடம்
கோ-ஆப்டெக்ஸ்
குறளகம், தி. நகர், லஸ் மற்றும்
காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி.


மின்னலடிக்கும் வெண்மைக்கே...
ரின்
RIN
DETERGENT WASHING TABLET
ரின். சோப் அல்ல இது. புத்தம் புதுமையான ஒரு சலவைச் சாதனம்—வில்லை வடிவிலே ஒரு டிடர்ஜெண்ட். சிக்கன மிக்கது ரின்: சோப்பைவிட மேலும் அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுத்திடும். திறந்த சோப்புப் பெட்டியிலே ஈரமுலர வைத்துக் கொண்டால் சிறந்த பலன் அளிக்கும் ரின். குடும்பத்திலுள்ள ஆடவரின், பெண்டிரின், குழந்தையரின்...யாவரின் துணிகளிலும் மின்சுடரின் வெண்மை பளிச்சிடவே: ரின்!
சலவையோ யானையளவு!
சோப்பைவிட அரைமடங்கு அதிகத் துணிகளை வெளுப்பது ரின்!

மாக அவன் வருவதைத்தான் நான் விரும்புகிறேன்.''

''அதாவது ஸாரநாதன் வடிவில் ஆபத்து வருவதாயின் அது முதலில் உங்களைத் தாண்டித்தான் வர வேண்டும்; என்னைக் கடந்து அல்ல; அப்படித் தானே?''

அவன் குரலில் தொனித்த ஆதங்கம், கரிசனம் இரண்டையும் புரிந்துகொண்டு மகிழ்ந்தவர் அதை வெளிக்காட்டாது, ''நான் என் கடமையைச் செய்கிறேன்'' என்றார் நறுக்குத் தெறித்தாற்போல்.

அவர் ஆக்ஞைப்படி விளக்குகளை அணைத்துவிட்ட ரங்கன், ''பேசலாமா, கூடாதா?'' என்று வினவினான்.

ரேடியம் டயல் கொண்ட தம் கைக் கடிகாரத்தை நடராஜன் பார்த்தார். மணி ஒன்பதரை. ''இன்னும் அரை மணி நேரம் பேசலாம், தப்பில்லை. ஹோட்டலில் சந்தடி அடங்க அத்தனை நேரமாகும். மேலும் அமிர்தலிங்கமும் இப்போதுதானே தன் அறைக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறான்?''

''அவன்தான் ஸாரநாதன்னு நீங்க நினைக்கிறீங்க; ஆனால் தீர்மானமாகத் தெரியாதபோது அவனைக் கைது செய்ய முடியலே. இத்தனை நாட்களா இங்கு நடந்த கொலைகள் எல்லாம் ஸைக்கோ செய்தவை என்ற வதந்தி பரவியிருந்ததால் அவனுக்குப் போலியான ஒரு மனத்திருப்தி இருந்து வந்தது; கொலை செய்யணும்கிற வெறி அடங்கிக் கிடந்தது. இப்போ அவனுக்கு இருந்த ஒரு மன நிறைவை உடைச்சு எறிஞ்சுட்டீங்க. அதனால் கொலை வெறி மறுபடியும் பொங்கும், அடிபட்ட புலியாச் சீறிக்கிட்டு இங்கே பாய்வான்னு எதிர்பார்க்கறீங்க; அப்படித்தானே?''

''ஆமாம், ரங்கா! அவனைச் சீண்டி விடத்தானே அந்தண்டை இந்தண்டை போக விடாமல் தோள் மேல் கை போட்டுப் பக்கத்திலேயே உட்கார வைச்சு, என் துப்பறியும் திறனையும் வெற்றிகளையும் பறைசாற்றிக்கிட்டிருந்தேன்! அவன் மன நிம்மதியைக் குலைத்த என்மேலே அவனுக்கு ஆத்திரம் பொங்கி எழும். இன்னும் சற்று நேரத்தில் நம்மில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ கொலை செய்யும் நோக்கத்துடன் இங்கு வருவான். முதலில் ஒரு பொம்மையின் கழுத்தில் கயிற்றைச் சுற்றி வளைத்து இறுக்குவான். அப்போ டார்ச் லைட் அடித்துக் கையும் மெய்யுமா அவனைப் பிடிச்சுடலாம். வேஷம் அம்பலமாயிடும்!''

கடிகார முள் சுற்றி வந்து கொண்டிருந்தது. ரங்கனின் சிந்தனையும் அங்கு நிகழ்ந்த சம்பவங்களைச் சுற்றியே வளைய



''போன ஆண்டு நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஒரு வீழ்ச்சியைச் சந்திந்திருக்கக்கூடுமே?''
''அடே, சரியாய்ச் சொல்லிட்டீங்களே! முதல் முதலா குற்றாலம் நீர்வீழ்ச்சியைப் பார்த்தேன்.''

வந்தது. சற்று நேரம் பொறுத்துக் கேட்டான்: ''அப்பா! ஊரிலே எல்லாரும் இந்த மூன்று கொலைகளையும் ஸைக்கோ ஸாரநாதன்தான் செய்தான் என்று நம்பியபோது நீங்கள் மட்டும் எப்படித் தீர்மானமாக 'இல்லை' என்று சொன்னீங்க?''

''ஸைக்கோவின் கொலைகளுக்கு ஒரு 'பாட்டர்ன்' உண்டு ரங்கா! அவன் ஆண்களை மட்டுமே கொலை செய்வான். பெண்களைத் தொடுவதில்லை. கழுத்தில் தான் அவன் கொலை வெறி செயல்படும். வேறு எந்த அவயவத்தையும் குறி பார்க்க மாட்டான். கயிற்றைக் கொண்டு கழுத்தைச் சுற்றி வளைத்து இறுக்கித்தான் கொல்வான். கத்தியோ, துப்பாக்கியோ பயன்படுத்தியதேயில்லை. இப்படி ஒரே விதமாகக் கொலைகளைப் புரிய அவன் வாழ்க்கையில் ஏதோ சம்பவம் நிகழ்ந்து அவன் மனத்தைப் பேதலிக்கச் செய்திருக்க வேண்டும். இங்கு நடந்த மூன்று கொலைகளிலும் இந்த ஒருமைப்பாட்டினைக் கொஞ்சமும் காணோம். அதனால்தான் நான் நிச்சயமாக இருந்தேன்.''

''உறுதியாக நீங்கள் சொல்லியும் ஜனங்கள் நம்ப மறுத்துட்டாங்களே!''

''சந்தர்ப்பச் சூழ்நிலைகள் அப்படி அமைந்து விட்டன. நான் இங்கே வந்த சமயம் 'ஸைக்கோ தப்பி விட்டான், தமிழகத்துக்கு வந்திருக்கலாம்' என்று தினசரிகளில் செய்தி வந்தது. அதற்கேற்றாற்போல் ஒரு மரணமும் நிகழ்ந்து விட்டது. நான் ஸைக்கோவைப் பிடிக்கத்தான் வந்திருக்கிறேன், ஆனால் அதை மறைக்க லீவில் வந்திருப்பதாகச் சொல்கிறேன் என்று மக்கள் எண்ணிவிட்டார்கள். தொடர்ந்து மேலும் இரு



"எங்கள் ஊறுகாய் ப்ராடக்ட்ஸ் கம்பெனிக்கு என் மாமியார் ப்ரொப்ரைட்டர், என் மாமனார் ரைட்டர், பெரிய மாமனார் அக்கவுண்டண்ட், மைத்துனர் காஷியர், பெரிய மைத்துனர் டெலிவரி ஸொர்க், மைத்துனி டைப்பிஸ்ட்! விட்டுப்போன மூன்றெழுத்துப் பியூன் உத்தியோகம் எனக்கு!"

மரணங்கள். குற்றவாளிகள் இன்னும் பிடிபடாத நிலை. ஆகவே ஸைக்கோவைக் கைப்பற்ற முடியாத நான், என் கையாலாகாத்தனத்தை ஒப்புக்கொள்ள மனமின்றி இக் கொலைகள் ஸைக்கோ செய்தவையல்ல என்று சாதிக்கிறேன் என்பதாக மக்கள் நினைத்தார்கள், பேசினார்கள்.''

''இருந்தாலும் அடுத்தடுத்து இங்கே மூன்று கொலைகள் நிகழ்ந்தது ஆச்சரியம்!''

''குறிஞ்சிப்பூ உனக்குத் தெரியுமே, ரங்கா! பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறைதான் பூக்கும். அதேபோலத்தான் இந்தச் சம்பவக் கோவையும். எப்போதோ ஒரு முறை இப்படி நேர்கிறது. அடுத்தடுத்து மூன்று கொலைகள் நடந்ததைச் சற்று யோசித்துப் பார்த்தால் புரிந்து கொள்வது சிரமமில்லை. தினகரன் விழுந்து இறந்தபிறகு அது ஸைக்கோ செய்த காரியம் என்ற வதந்தி பரவிவிட்டது. அந்த வதந்தியே மேலும் சில கொலைகள் நடக்கத் தூண்டுதலாக இருக்கலாம்.''

''எப்படிச் சொல்கிறீர்கள் அப்பா?''

''கொலை செய்ய வேண்டும் என்கிற எண்ணம் பலருக்கு இருக்கும்; துணிவு வராது! ஆனால் சந்தேகம் ஸைக்கோ மீதுதான் விழும், நாம் தப்பித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை எழும் போது தைரியம் பிறக்கிறது. இந்த மூன்று கொலைகளுக்குக் காரணமானவர்களைப் பிடிப்பதில் இன்னும் கொஞ்சம் காலதாமதம் ஆகியிருந்தால் மேலும் ஒரிரு கொலைகள் கூட விழுந்திருக்கும்!''

நேரம் சென்றது. கைக் கடிகாரங்களின் டிக்டிக் ஒலி தெளிவாகக்கேட்டது.

''அப்பா!''

''இனி நாம் பேசுவது நல்லதல்ல, ரங்கா!''

''அமிர்தலிங்கம் உண்மையில் ஹிப்பியாகவே இருந்து இங்கு இன்றிரவு வராமல் போய்விட்டால்?''

''விடிய விடியக் கண் விழித்துக் காத்திருந்து பார்த்துவிட்டு, அவனை ஸாரநாதன் என்றுசந்தேகித்ததற்காக நானேக் காலை மானசீகமாக அவனிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டியதுதான்!''

''முன்புகூட ஸாரநாதனைப் பிடிக்கப் போலீஸார் திணறித் திண்டாடித்தான் போனார்கள், ஏன்?''

''அதைப் புரிந்து கொள்வதில் சிரமமே இல்லை, ரங்கா! கொலை வெறி ஏற்படும்போதுதான் அவன் பயங்கர மனிதன். கொலை வெறிகளுக்கிடையில் உள்ள கால கட்டத்தில் அவன் மிக மிக நல்லவன் என்பது மட்டுமல்ல; ரொம்ப ரொம்பச் சாமர்த்தியசாலி! கேடி எப்போதும் கேடிதான். முரடன் எப்போதும் முரடன்தான். ஆனால் ஸைக்கோ அப்படியல்ல. அவன் குணம், தோற்றம், நடை, உடை, பாவனை யெல்லாம் அடியோடு மாறிப் போய்விடுகிறது. தெரிந்ததா காரணம்?''

''உம்'' என்றான் ரங்கன்.

நீண்ட நேரம், மிக மிக நீண்ட நேரம் அங்கே மௌனம் நிலவியது. ரங்கனுக்கு அலுப்புத் தட்ட ஆரம்பித்தது. பக்கத்தில் இருந்த ஃப்ளாஸ்கிலிருந்து மூடிக் கோப்பையில் ம. ஊற்றிக் கொண்டான்.

''வீல்!'' என்று சத்தம் கேட்டது! தொடர்ந்து அதே குரல் மலைச் சிகரங்களுக்கெல்லாம் எட்டி எதிரொலிக்கிறப் போல மீண்டும் எழுந்தது! தீனமாகவும் இருந்தது; பீதி நிறைந்தும் ஒலித்தது!

அலறல்தான் என்றாலும் காதலியின் குரலைக் கண நேரத்தில் கண்டுகொண்டான் ரங்கநாதன். பதறித் துடித்து எழுந்த வேகத்தில் ஃப்ளாஸ்க், கோப்பை எல்லாம் எட்டப் போய் விழுந்து உடைந்தன. மேனி சிலிர்க்கத் திகைத்து நின்றான் கண்ணிமைக்கும் நேரம். அடுத்த விநாடி, ''அப்பா! உங்கள் கணக்குத் தப்பாப் போச்சு! மீனுவுக்கு ஆபத்து!'' என்று கூச்சலிட்டுக்கொண்டே இருளில் தட்டுத் தடுமாறி ஓடினான். இடித்துக்கொண்டதையும் தடுக்கி விழுந்ததையும் பொருட்படுத்தாமல் பத்மநாபன் குடும்பத்தினரின் அறை இருந்த திக்கு நோக்கி மின்னலெனப் பாய்ந்தான்! (தொடரும்)

இளைஞர் சமுதாயம்

23. துடிப்பும் வெடிப்பும்

“மன்றம், மண்ணாங்கட்டி எதுவும் வேண்டாம். ஊர் வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டு வருவீர்கள். நீங்களெல்லாம் பெரிய தலைவர்கள்! இளைஞர் மன்றம் நடத்தப் போகிறீர்களாக்கும்! மன்றம் ஏற்படுத்தி என்ன கிழிக்கப் போகிறீர்கள்? போங்கடா, வேலையற்ற பயல்களா! உங்களிலே, படிக்கிறவன்களெல்லாம் அக்கறையாய்ப் படித்துப் பாஸ் பண்ண வழி பாருங்கடா! பாஸ் பண்ணினவன்களெல்லாம் சோம்பேறியாய்ப் பொழுதைப் போக்காமல் வேலை தேடி அலையுங்களடா!'' 'இத்தகைய 'அறிவுரை'யைக் கேட்ட பின்பு எந்த இளைஞனுக்குத் தான் பொதுத் தொண்டில் ஆர்வம் வளரும்?

ஒரு பட்டதாரி வாலிபரைத் தஞ்சை ஜில்லா அறந்தாங்கியில் சந்தித்தேன். இருவரும் பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தோம். வெகு விரைவில் அறிமுகமாகி விட்டோம். பி. காம். படித்துத் தேறியிருந்த அவர் மேற்படி நிகழ்ச்சியை அழாக்குறையாக என்னிடம் கூறினார். ''....ஸார்! மன்னிக்க வேண்டும். நீங்கள் இளைஞர்களுக்குரிய கடமைகளை மட்டும்தான் வலியுறுத்துகிறீர்கள். பெரியவர்கள் இளைஞர்களுக்கு அளிக்க வேண்டிய உற்சாகத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூறவில்லை'' என்றார்.

இதைக் கேட்டதும் எனக்கு என்ன பதில் சொல்லுவதென்றே தெரியவில்லை. நண்பர்களுடன் சேர்ந்து இளைஞர் மன்றம் ஆரம்பிக்கும் ஆர்வம் அறந்தாங்கி அன்பருக்கு ஆரம்பத்திலேயே பட்டுப் போய்விட்டது!

கோவில்பட்டியிலும் இதே அனுபவம் எனக்குக் கிடைத்தது.

கோவில்பட்டி, நல்வழி இயக்கம் என்னும் இளைஞர் மன்றத்தின் செயலாளரும், பெரியவர்கள் தங்களைப் பொதுக் காரியங்களில் ஈடுபடுவதற்கு உற்சாகமூட்டுவதில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டார். இவர் பெயர் பொ. சத்தியசீலன். இவ்வூரில் ஒரு வாசக சாலையைச் சிறப்பான முறையில் நடத்திவருகின்றனர், நல்வழி இயக்கத்தினர்.

தீபவொளி அறிவகம் என்று அதற்கு அழகாகப் பெயர் கொடுத்திருக்கின்றனர்.

''எங்கள் மன்றத்தின் பெயரிலிருந்தே நாங்கள் செய்ய ஆர்வம் கொண்டிருக்கும் பல நல்லியக்கங்களைக் காணலாம். கோவில்பட்டியின் ஜீவாதாரமான பிரச்சினை குடிநீர்ப்பிரச்சினை தான். அந்த மகத்தான பிரச்சினையைப் பெருமுயற்சி செய்து எங்கள் மன்றத்தின் மூலம் வெற்றி காண வேண்டும் என்பது எங்கள் பேரவா. அடுத்தது சுகாதாரம். அதிலும் ரொம்பக் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. எங்கள் முயற்சிகளுக்கெல்லாம் முதலில் எங்களுக்குக் கிடைக்க வேண்டியது பெரியவர்களின் ஒத்துழைப்பு. நாங்கள் எங்கள் மன்றத்தின் மூலம் கட்டுரைப் போட்டி நடத்திப் பரிசளிக்கிறோம். சிறு சேமிப்புத் திட்டம் தொடங்கியிருக்கிறோம். அதை மக்களுக்கு விளக்கப் பலவிதத்திலும் முயன்று வருகிறோம். சிறு நூலகம் ஒன்று நடத்திவருகிறோம்......'' என்று பொரிந்து தள்ளிவிட்டார் செயலாளர்.

இளைஞர்கள் மூலம் எனக்குக் கிடைத்த பெரியவர்களுக்கான யோசனைகளை (பெரியவன் என்ற முறையில்) நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். கூடியவரையில், இளைஞர்களின் உற்சாகத்தை வளர்க்கப் பார்க்க வேண்டும். அது நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவும். —சோமாஸ்



கூட்டுக் குடும்பம்

பூமணமும், சந்தன மணமும் கலந்து விகசிக்கும் சூழல். பட்டுப் புடவையும்; பரந்த புன்னகையுமாய் வளைய வரும் பெண்கள். குழந்தைகளின் கூச்சல்; பெரியவர்களின் அடக்குமுறை. இந்தக் கோலாகலத்திடையே தூர ரீங்கரிப்பாக உலவும் நாதகரம். மண மேடையில் இரண்டு இளம் மனங்கள் ஒன்றுபடச் செய்யும் சடங்கு களின் பரபரப்பு. ஜெயகுமாரின் கையில் மங்கல மஞ்சள் நூலாரம் கொடுக்கப்படுகிறது. கெட்டி மேளமும், உச்சஸ்தாயி நாதகரமும் ஓங்கிக் குரல் தர, பந்தலில் நிறைந்திருந்தவர்களின் கைகளிலிருந்து பூச்சிதறலாய்த் தம்பதியர் மீது அட்சதை வர்ஷிக்கப்படுகிறது. லலிதா வின் கழுத்தோரம் புதுமை குறுகுறுக்கிறது.

கழுத்துக் கொள்ளாத மாலை. மனம் கொள்ளாத புதுமை உணர்வுகள். அந்தச் சோர்வில் தள்ளாடும் அவள் நடை. அதை உணர்ந்து கொண்ட அவனது மென்சிரிப்பு. அந்தச் சிரிப்பொலியில் அவள் சோர்வு சிலிர்ப்பாகிப் பூரித்தது. சற்று முன்னால் அவன் கரங்கள் மஞ்சள் சரட்டை அணிவித்தபோது ஏற்பட்ட குறுகுறுப்பைவிடப் பதின்மடங்கு உணர்ச்சிச் சிதற லால் தலை குனிந்து கொண்டாள்.

கல்யாணக் காரியங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. பெரியவர்களுக்குக் கல்யாணக் களைப்பிலும் ஒரு பூரிப்பு. கல்யாணம் பண்ணிக் கொண்டவர்களுக்கோ ஒளிவு மறைவான குதூகலம்.

சபாபதி — பார்வதி தம்பதியின் முதல் பிள்ளை ஜெயகுமாருக்குத் திருமணம்! இன்னும் ஐந்து பேர் அவனுக்குப் பின்னால் இருந்தார்கள். மூன்று பையன்கள், இரண்டு பெண்கள்.

பட்டுப் புடவையைக் களைவதற்கு முன் கண்ணாடி எதிரில் நின்று பார்த்துக் கொண்டாள் லலிதா. இத்தனை நேரம் வரையில் அவர் கண்களுக்கு அழகாகவே பட்டிருக்கிறோம் என்ற திருப்தியில் மென்னகை உதிர்ந்தது. களைந்த புட வையை உடுத்திக் கொண்டு கீழே விரித்திருந்த மெத்தையில் படுத்தாள் லலிதா. பக்கத்திலிருந்த லலிதாவின் தாயாரும், சிநேகிதிகளும் சாப்பிடும் இடத்துக்குச் சென்று விட்டார்கள்.

அந்த இடைவேளைத் தனிமையில் அவள் மனத்தில் கோடி கோடியாகக் கற்பனைகள் முகிழ்க்க ஆரம்பித்தன. அவருக்கு எந்தப் பூ பிடிக்கும்? எந்த நிறம் பிடிக்கும்? தலை முடியைத் தூக்கிக் கட்டினால் பிடிக்குமா? பின்னி விட்டுக் கொண் டால் பிடிக்குமா? அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டும் என்று நினைப்பாரா? கலகலப்பாகப் பேச வேண்டும் என்று எதிர்பார்ப்பாரா?

இந்தச் சமயத்தில் யாரோ வந்து எட்டிப் பார்ப்பதை உணர்ந்து லலிதா தட்டென எழுந்து கொண்டாள்.



கோமகள்

நீண்ட இருதாவும், தலையில் நீள முடியுமாக இறுக்கமான உடைகளுடன் நின்றான் அவன். அவன் முகத்தில் சிரிப்பும், கேலியும் ஒருங்கே மின்னின. ''நான் செல்வகுமார் ! எங்க மன்னி யைத் தேடி வந்தேன்.... அதாவது மணப் பெண்ணை...... ?''

லலிதாவின் முகம் வெந்து பூத்தது..... ''நான்...... நான்தான்......!''

''நீங்களா? அட.....! ஆமாம்! நீங்களே தான் ! பட்டுப் புடவையை மாற்றியதும் ஆளே அடையாளம் தெரியவில்லையே ?.... என்னடா ! மணையில் மன்னி அழகாக இருந் தாளே என்று பார்த்தேன் ....! கடைசியில் பட்டுப் புடவைதானு அது?''

லலிதாவுக்குத் துணுக்கென்றது.

இது என்ன கேலி? அவளை அழகில்லை என்று கூற 'மெனக்கெட்டு' அவரின் இருபது வயதுத் தம்பி அவளைத் தேடி வரணுமா? அவள் பதில் பேசாமல் நின்றாள்.

''கோவிச்சுக்காதீங்க, மன்னி ! நான் கொஞ்சம் வேடிக்கையாகப் பேசுவேன். அந்த வேடிக்கையில் உண்மையும் இருக்கும்! நீங்க என்ன படிச்சிருக்கீங்க? ஓ... அதுதான் தெரியுமே... உங்களுக்கு இலக்கியம் பிடிக் குமா ? சங்கீதமா ?''

''எனக்குப் பாட்டு தெரியும். கற்றுக் கொண்டேன்.''

''ஓ ! அப்படீன்னு பாட ஆரம்பிச்சுடா தீங்க ! என்னு அண்ணுவுக்குச் சங்கீதம்னு வேப்பங்காய்! நாங்க வீட்டிலே இல்லாத நேரத்திலே பூஜை அறையிலே பாடுங்க! இல் லேன்னு எங்களுக்கும் சங்கீதம் வேப்பங்காயா மாறிவிடும்!''

இது என்ன கேலி? அவள் மனம் சாம்பியது.

''நான் வரேன் மன்னி!'' என்று நடந் தான் அவன்.


பாலாவும் லீலாவும் வந்து போனார்கள். செல்வகுமார் தனக்குப் பிடித்தது பிடிக்காதது பற்றியெல்லாம் பேசி விட்டுப் போனான்.

இன்னும் ஒருவன் வரவேண்டும். வந்தால் பேட்டி முடிந்துவிடும் என்று விளையாட்டாக லலிதா நினைத்த போது ரவிகுமார் அங்கே வந்தான். அவன் புகுமுக வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அவளை அன்போடு உப சரித்தான். ஆதரவாக, கனிவாகப் பேசினான். இடையிடையே அவளைக் கேலி செய்யவும் அவன் தவறவில்லை. என்றாலும் வந்தவர்களி லேயே இவன்தான் தனக்கு ஏற்றாற்போல் பழகினான் என்பதில் அவளுக்குச் சற்றுத் திருப்தி உண்டாயிற்று.

''என்ன மன்னி! களைப்பாக இருக்கிறீர்கள் போலிருக்கிறதே? நான் போய்விட்டு வரேன். கொஞ்சம் தூங்குங்க. சாயந்திரம் வர வேற்புக்குப் போனால், இரவு எட்டு மணி வரை வருகிறவர்களை வரவேற்க எழுந்து எழுந்து உட்காரத்தான் நேரம் சரியாக இருக் கும்'' என்று கூறி விடைபெற்றான்.

லலிதாவுக்கு எல்லாம் வேடிக்கையாக இருந்தது. மூத்தவனுக்குத் திருமணமாகி ஒருத்தி புதிதாக வீட்டுக்கு வருகிறாள் என்றால், உடன்பிறந்த மற்றவர்களுக்கு எத்தனைவித உணர்ச்சிகள் குறுக்கிடுமோ ? தினசரி மிருது வாக ஓடிக் கொண்டிருந்த வாழ்வில் மற் றொருத்தி தலை நீட்டுவதில் ஏதாவது நெருடல் தோன்றுமோ என்னவோ ? ஒருத்தன் மன்னியை எடை போடுகிறான். ஒருத்தன் ரசனை பற்றி ஆராய்கிறான். ஒருத்தன் அன் பாக வரவேற்புத் தருகிறான். பெண்கள் இருவ ரும் அவள் அண்மையை விரும்புவதுபோலும், பற்றில்லாத மாதிரியும் நடக்கின்றனர். இவர்களிடையே அவள் ஊடுருவி இரண்டறக் கலந்து, அந்தக் குடும்ப நபராக ஒன்ற எத்தனை காலம் ஆகக் கூடுமோ ? இந்தக் கடினமான பிரயாசையில் வெற்றி கிடைக்குமா ?

அன்றிரவு ஜெயகுமார் அவளிடம் தன் குடும்ப நபர்களை ஒட்டுமொத்தமாக விமரிச னம் செய்து அசத்தினான். தன்னை உணர்த்துமுன், தன் குடும்பத்தாரை உணர்த்தி அவள் கடைப்பிடிக்க வேண்டிய அசாத்தியப் பொறுமையையும், கடைத்



தேற வேண்டிய வழியையும் கூறி அவளைப் பய முறுத்தி வைத்தான்.

லலிதா ஒரு புதிய பாதையில், புதியவர்கள் மத்தியில் தனக்கென விளையும் சுவைக ளோடும், உணர்ச்சிகளோடும் தன்னந்தனி யாக வாழ வந்தாள்.

அந்த வீட்டில்தாம் எத்தனை சுவைகள் ? எத்தனை கருத்து பேதங்கள் ?

ஒருத்தருக்குப் பாகற்காய் உயிர் என்றால், மற்றவருக்கு வாழைக்காய் உயிர் ! ஒருத்த ருக்கு வெண்டைக்காய் பிடிக்காதென்றால், மற்றவருக்கு அதன் மீது அலாதி பிரியம் ! பற்பசைகள் ஆளுக்கு ஒருவிதம்! பேச்சும், செயலும் மட்டும்.....?

இவர்களுடன் ஒட்டாத ஓர் அலாதிச் சுவை யுடன் வந்த லலிதா தன் கணவனின் சுவை யோடு ஒட்டலாமென நினைத்தாள். ஆனால் அவனுக்கு மட்டும் ஒரு தனிச் சுவை இல்லை ! மற்றவர்களை ஆமோதிப்பதே அவன் சுவை யாக இருந்தது !

அந்தக் குடும்பத்தில் அவர்களுக்குள் இருந்த பேதங்கள் பேதங்களாய்த் தலைகாட்டவில்லை. சுவை மாறுபாடு கருத்து மாறுபாடாக உரு வாகி விருக்கவில்லை. வேற்றுமைகளுடே ஒரு குடும்பம் என்ற ஞாபகமோ, பாசமோ அவர்களைக் கட்டி வைத்திருந்தது. லலிதா வுக்கு அந்தச் சந்தைக் கூட்ட இரைச்சலில், அர்த்தமற்ற கேலிப் பேச்சில், ஆரவாரமான சிரிப்பில் லயிப்பு ஏற்படவில்லை.

அவளது கற்பனைகள் குடும்ப சாகரத்தில் கரைந்தன. தன் கணவனுக்குப் பிடித்த நிறமோ, பூவோ, பொழுதுபோக்கோ எதற் கும் அங்கு முக்கியத்துவம் இல்லை. அங்கு அவனது பெற்றோர்கள் திட்டமிடுவது போல்தான் ஜெயகுமார் நடந்து கொள் கிறான். அந்த நடப்புக்களில் சிக்கிய லலிதா அத்துடன்தான் திருப்தியுற வேண்டுமா ? அவள் மனத்தின் ஆசைகள் ஏமாற்றத்தால் ஏங்கின. தன் உணர்வுகளை, ருசிகளை, சுவை பேதங்களை அந்தக் குடும்பத்தில் அடகு வைத்து, கரைந்து போகும் வித்தையில் தேர்ச்சி பெற முடியாமல் திணறினாள் அவள். கணவனோடு தனித்து அனுபவிக்க வேண்டிய புற உலகின் உல்லாசங்களை அவள் எதிர் பார்த்து மறுகினாள். அது மட்டுமல்ல; ஒவ் வொரு நிமிடமும் மற்றவர்கள் தலையிட்டு தன் னைக் கட்டுப்படுத்தி வதைப்பதாக அவள் உணர்ந்தாள். அந்த அதிர்வில் அவள் முகத் தின் மிருதுவும், உதட்டின் புன்னகையும், கண்களின் அடக்கமும் கணவனுக்குக்கூடக் காணக் கிடைக்காமல் ஒதுங்கி ஒடுங்கிக் கொண்டன.

சுபாவத்திலேயே லலிதா சாது. அதிர்ந்து பேச மாட்டாள்; சிரிக்க மாட்டாள். நிதான நடை, மிருதுவான பேச்சு. கச்சிதமான நடை உடை பாவனைகள். யாராவது சற்றுக் கடிந்து கொண்டாலும், அளவு மீறிப் பரிகசித் தாலும் 'குபுக்'கென்று அழுகை கண்ணில் தேங்கிவிடும்.

''மன்னி.....! தட்டு வை !'' அன்று சாது வாக விசாரணை செய்த ரவிகுமார் இன்று காட்டுக் கத்தலாகக் கத்துகிறான்.

''என்ன மன்னி ! இன்னுமா தட்டு வைக்கலே? முன்னமேயே கத்தினேனே....''

''இதோ வந்துவிட்டேன், ரவி!'' பரபரக் கிறாள் லலிதா.

''போ, மன்னி ! நீ மசமசப்புத்தான் ! சுறுசுறுப்பே போதாது........!''

லலிதா அதிர்ச்சியோடு நிமிர்ந்தாள்.

''சாதம் போடு, மன்னி !'' மறுபடியும் அலுப்பாகக் குரல் ஓலமிட்டது.

''அப்பாடா !'' என்று வியர்வையை முன்றானையில் ஒற்றினாள் லலிதா.

''எனக்குத் தலை பின்னிவிடேன் மன்னி!'' எத்தனையோ முறை சொல்லி ஓய்ந்தாற்போல் செல்லக் கொஞ்சல்.

சீப்பையும் தைல பாட்டிலையும் தேடினால் அவை கிடைக்கின்றனவா ? அவற்றைத் தேடு வதில் சற்று நேரம் கழிந்தால் பாலா முணு முணுக்க ஆரம்பிப்பாள். அவளுக்குப் பின்னி முடித்தால் நீலா வருவாள். அவளுக்கு இரட்டைப் பின்னல் ! லலிதாவின் தலை கலைந்திருக்கும். அந்த நேரத்தில் தனக்குச் சீவிக் கொள்ள அவளுக்கு ஓய்வு ஏது ?

உள்ளே சிவகுமாரும், செல்வகுமாரும் சாப்பிட வந்துவிடுவார்கள். பார்வதி சாப் பாடு பரிமாறுவாள்.

''அம்மா! மன்னி நம்ம வீட்டுக்கு வாயக்கு இல்லே. என்னோட டெரிலின்லே பட்டன் தைச்சு வைக்கச் சொன்னேன் செய்யவே இல்லே!'' என்கிறான் சிவகுமார்.

''மன்னியின் சமையலும் மட்டம்தான்!'' என்கிறான் செல்வகுமார். '' ஐயோ ! வெண்டைக்காயா ? ஜெயகுமாரைக் கூப் பிட்டுப் போடும்மா. அவன்தான் சாப்பிடக் கடமைப்பட்டவன் !''

''போதும்டா, உங்கள் கேலி ! உங்களுக்கு யார் சமைச்சாலும் பிடிக்காது. பேசாமல் சாப்பிடுங்க. அவளைப் பாடாய்ப் படுத்தி வைக்கிறது, அப்புறம் குறை சொல்றது....''

லலிதா பெருமூச்செறிந்தாள். மாமியார் அவளை மதித்து அவள் சார்பில் பேசியதில் ஒரு திருப்தி. என்றாலும் அவள் முகம் வாடிய தாமரையாகி விடுகிறது.

''லலிதா !''

யாருக்கும் கேட்காத மெல்லிய குரல், அவள் பூ நெஞ்சுக்கு மட்டும் கேட்கிறது. கையசைவு வரும்படி சைகை காட்டுகிறது. லலிதா ஜெயகுமார் அருகே வந்தாள்.

'' ஏன் லலி, என்னவோ போலிருக்கே ?''

அவள் கண்களில் 'குபுக்'கென்று நீர் மடை யிடுகிறது.

'' ஏய் ! லல் ! என்ன இது ?''

அவள் குனிந்து கொண்டாள்.

அவன் கைகளைப் பற்றித் தன்னருகே இழுத் துக் கொண்டான் அவன். ''இவையெல்லாம் குறைகளல்ல லலி! காமென்ட்ஸ் ! அதை நீ வேடிக்கையாய் ரசிக்க வேண்டும். சின்னக் குழந்தை மாதிரியா அழறது ? எங்கே....ஒரு சின்னச் சிரிப்பு.... ஆ.... ஆங்.... வெரிகுட் ! நீ போகலாம் !''

லலிதா உள்ளே வந்தாள். பாட்டரிக்குப் புது 'செல்' போட்ட மாதிரி அவள் முகத்தில் ஒரு வெளிச்சம்.

காலைப் பனியில் குளித்துக் கிடந்த மலர்கள் எல்லாம் பனியின் துளியொன்றை யும் ஏந்தி அழகுற நின்றன. மெல்ல மெல்ல

உலகம் விழிப்படையும் நேரம். லலிதாவுக்கு விழிப்புத் தட்டியபோது அவளால் எழக்கூட முடியவில்லை. உடம்பெல்லாம் அசதி. அடித்துப் போட்டாற்போன்ற களைப்பு.

அவள் எழாதது கண்டு ஜெயகுமார், ''லலி ! மணி ஆறாகப் போகிறதே...வழக்கமாக ஐந்து மணிக்கு எழுந்துவிடுவாயே....?'' என்றான்.

உடலின் சோர்வும் அசதியும் அவளைப் பேச விடவில்லை. சொல்வதற்குக் கூச்சம். அவனையே பரிதாபமாகப் பார்த்தபடி அவள் மெல்ல, ''என்னால்.... முடியவில்லை..... !'' என்றாள்.

''என்ன உடம்புக்கு?'' மணந்தவன் பதறினான். ''நான் அம்மாவிடம் சொல்றேன் !''

பார்வதி அவள் அருகே வந்து உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். ''என்னம்மா பண்ணறது ?''

வெட்கமும், தயக்கமும் பின்ன, ''தலை பாரமா இருக்கு. மயக்கமா இருக்கு அத்தை !'' என்றாள்.

''ஓ ! அது ஒன்னுமில்லை. நீ பேசாமல் ஓய்வு எடுத்துக் கொள். எலுமிச்சம் பழ ரசம் அனுப்பறேன்.''

லலிதா சுற்றுமுற்றும் பார்த்தாள். கண்களில் பூச்சியாடியது. என்ன உடம்புக்கு ? இப்படி என்னவோ பண்ணுகிறதே.....

'' மன்னி !''

அவளருகே செல்வகுமார் நின்றான். அவன் கையில் புதிய க்ளுகோஸ் பாக்கெட் ஒன்று. ''இதில் ஒரு ஸ்பூன் வாயில் போடறேன், மன்னி ! மயக்கத்துக்கு இதமாக இருக்கும் !'' அவன் குரலின் கவலையிலும், உருக்கத்திலும் அவள் நெகிழ்ந்தாள். அவள் வாயில் கரைந்த க்ளுகோஸ் போலவே நெஞ்சிலும் அவனது பரிவு இதமூட்டியது.

''மூச்சு இறைக்கிறதே செல்வம். இதற்காகவா கடைக்குப் போனாய்?'' என்றாள் லலிதா.

''போனால் என்ன மன்னி. போனதற்கு அந்தக் கடையில் இது நம் அவசரத்துக்குக் கிடைத்ததே !''

ஓ! இவன் தன்னிடம் காட்டும் நெகிழ்ச்சிக்கு அன்பு என்றுதானே பெயர் !

''குட்மார்னிங் மன்னி !''

கையில் டம்ளருடன் அவளருகே நிற்கிறான் சிவகுமார். ''இந்த எலுமிச்சம்பழ ரசத்தை வாயில் கொஞ்சம் கொஞ்சமாய் விடவா மன்னி ?'' சிவகுமாரா பேசுகிறான்? அவன் குரலின் கேலியும், குத்தலும் எங்கே ? இதுவரை கேட்டே இராத பாசமும், பரிவும் புதிதாய்த் தொனிக்கிறதே.....

'' நானே சாப்பிடறேன்....'' லலிதா அதை வாங்கி மெல்லப் பருகினாள்.

உள்ளே வந்த ஜெயகுமார் அவளைப் பார்த்து விநோதமாகச் சிரித்தான்.

''என்ன இது?'' என்று நாணிக் கொண்டாள் அவள்.

''என்ன இது? அதைத்தான் நானும் கேட்கிறேன். சொல்லு. சிவகுமார் என்னை வாழ்த்துகிறான் !''

'' ஒன்றும் புரியவில்லையாக்கும் ?''

''மன்னி ! ஒரு வாய் காப்பி சாப்பிடு !'' பாலா வந்து நின்றாள். அவள் குரலில் அநுசரணையான இதம் தொனித்தது.



''கடிகாரத்தை. கடி - நாரமாக மாற்றி விட்டேன்!''

''மன்னி உன் உடம்புக்கு என்ன?'' நீலா அவளருகே வந்து உட்கார்ந்து கொண்டாள், கண்களில் சுரக்கும் கனிவும், அன்புமாய்.

'' மன்னி ! இப்போது எப்படி இருக்கு?'' என்ற விசாரணையோடு ரவிகுமார் வருகிறான்.

''டேய் ! உங்க மன்னி கொஞ்சநேரம் ஓய்வாய் இருக்கட்டும். எல்லாரும் வெளியே வாங்க !'' என்று மாமனார்கூட வெளியிலிருந்து குரல் தருகிறார்.

அந்த வீட்டுக் காட்சிகளே தலைகீழாய் மாறிய மாதிரி இதென்ன ?

ஜெயகுமார் உடை மாற்றிக்கொண்டே அவள் அருகில் வந்தான். ''என்னையும் சேர்த்துத்தான் அப்பா வெளியே வரும்படி சொல்கிறார் போலிருக்கிறது. நான் ஆபீசுக்குப் போய் லீவு போட்டுட்டு வந்துடறேன்.''

'' ஏனாம் ?''

''ஏன் ? பசங்கள் உன்னிடம் என்னை அண்டவே விடமாட்டேன் என்கிறார்களே ? உன் உடம்பு பற்றிக்கூடக் கேட்க முடியவில்லை. எல்லோரும் உன்னைச் சூழ்ந்து கொண்டார்கள். உம் ! நீ படுத்ததுமே பதறிப் போய்விட்டார்கள் பார்த்தாயா ? நான் சொன்னேன் இல்லையா? நீ வந்ததிலே யிருந்து உன்னையும் அம்மாவாக ஏற்றுக் கொண்டுவிட்டதால் அம்மாகிட்டே கத்தற மாதிரியே உன்கிட்டேயும் கத்தினார்கள் ! நீ படுத்ததும் பதறிவிட்டார்கள். அவர்களது நிஜரூபத்தை நீயும் தெரிந்து கொண்டாய் இல்லை ? எல்லாம் அம்மாவின் உபதேசம்! வரப்போகிற மன்னியைத் தாயாராகப் பாராட்டணும்னு சாப்பாடு உருட்டிப் போடும்போது கூட அம்மா சொல்வாள்!''

லலிதா பிரமிப்பு அடங்காமல் அவனைப் பார்த்தாள். ''உண்மைதான் ! அவர்களுக்கும் தாயாகும் தகுதி எனக்கு இனியாவது வரட்டும் ! அந்தப் பொறுமை, புரிந்து கொள்ளும் சிரத்தை எல்லாவற்றையும் இனி மேல் நான் கற்றுக் கொள்வேன்.....''

அன்பு மழையின் ஆயிரம் துளிகளும் தன் மீது விழும் பரவசத்துடன் அவற்றை ஏற்று நின்றாள் லலிதா. அந்தச் சூழல் அவளுக்கு இனிக்க ஆரம்பித்தது.

ஆம் ! அது கூட்டுக் குடும்பம் ! அதிலும் கூட்டமான குடும்பம் ! அதன் கலகலப்பு என்றும் வற்றாது! அதன் பாச ஊற்று என்றும் பெருகி நிற்கும் !

மனம் இருக்க மந்திரம் எதற்கு?

கையில் காலணா இல்லாமல் வாழ்க்கையைத் தொடங்கி நாளடைவில் மிக உன்னத நிலைக்கு உயர்ந்து விட்டவரைச் சுருக்கமாக வர்ணிப்பதென்றால் என்ன சொல்வோம்? 'உழைப்பால் உயர்ந்தவர்' என்போம். பிறகு சற்று யோசித்துவிட்டு, 'உழைப்பு மட்டும் போதாது, நல் வாய்ப்புக்களைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளும் திறன், சிரமங்களைக் கண்டு அஞ்சாத மனோதிடம், அறிவாற்றல் போன்ற சில குண நலன்களும் தேவை' என்போம்.

'ஆனால் இந்த இதழ் மேலட்டையை அலங்கரிக்கும் திரு கே. ஆர். சுந்தரமய்யர் அவர்களை இவ்விதம் வர்ணித்தால் அவர் அதை முழுமையாக ஒப்புக்கொள்ள மாட்டார். ''இதெல்லாம் ஐம்பது சதவீதம்தான் சரி, பாக்கி ஐம்பது சதவீதம் கடவுளின் கருணை'' என்பார். ''அவனவனுக்கும் ஒரு டைம்டேபிள் போட்டு வைச்சிருக்கான் ஆண்டவன்; அதன்படித்தான் எல்லாம் நடக்கும்'' என்பார்.

இவ்வாறு அவர் கூறுவதற்குக் காரணம் இல்லாமலும் போகவில்லை. அவருடைய வாழ்க்கையேதான் அந்தக் காரணம்!

திரு சுந்தரம் எஸ். எஸ். எல். ஸி. தேறியதும் தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் பயின்று தேர்ச்சி பெற்றார். சாதாரணமாக அல்ல. 'டிஸ்டிங்க்ஷன்' பெற்றுத் தேறினார். சிறிது காலத்துக்குப் பிறகு வேலை தேடி மலேயா சென்றார். அங்கு ஒரு வேலையும் கிடைத்தது. முதலாளி ஒரு கடிதம் சொன்னார். சுந்தரம் அதை 'ஷார்ட் ஹாண்'டில் எழுதிக் கொள்ள முயன்றார்: முடியவில்லை! டிஸ்டிங்க்ஷன் பெற்றுத் தேறியிருந்த போதிலும் சிறிது காலம் -தொடர்பு விட்டுப் போனதால் இப்போது சுருக்கெழுத்து மறந்தே விட்டது! கடைசியில் முதலாளி சொன்னதை வைத்துக் கொண்டு - தாமே ஒரு கடிதம் ''டைப்'' செய்து கொண்டு போய் வைத்தார்!

பலன்: சீட்டுக் கிழிந்தது! ஏறத்தாழ இதே சமயம் சுந்தரத்தின் தாயார் இறந்து விட்டதாகச் செய்தி கிடைக்கவே, தமிழகம் திரும்பி விட்டார்.

'' நான் பள்ளிப் படிப்பு முடிந்ததும் கல்லூரியில் சேர்ந்திருந்தால் இப்போது என்னவாக இருப்பேன் என்று யோசித்துப் பார்க்கிறேன்'' என்றார் திரு சுந்தரமய்யர், அவரை நான் பேட்டி காணச் சென்றபோது.





இந்தப் பக்கத்தில்:

1. ராயல் என்பீல்ட் தொழிற்சாலையில் தர நிர்ணய அறை.
2. மோட்டார் சைக்கிள் உறுப்புகளைத் துளைக்கும் இயந்திரங்கள்.

எதிரே:

3. மோட்டார் சைக்கிள் இணைக்கும் பிரிவு.



திரு கே. ஈசுவரன்

கல்லூரிக்குச் சென்றிருந்தாலோ அல்லது மலேயாவிலேயே தங்கி விட்டிருந்தாலோ அவர் இப்போது என்னவாக இருப்பாரோ, நாம் ஊகித்துக் கூற முடியாதுதான்; ஆனால் வருஷத்துக்குப் பதினையாயிரம் மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்யும் 'என்பீல்ட் இந்தியா'வின் அதிபராக (சேர்மன்) இருக்க மாட்டார் என்பது மட்டும் சர்வ நிச்சயம் !

ஆகவே, தக்க சமயத்தில் அவர் மறந்து போன பிட்மன் ஷார்ட்ஹாண்டையும், அவர் சேராத கல்லூரியையும் வாழ்த்திவிட வேண்டியதுதான் !

இதையேதான் திரு சுந்தரமய்யர், 'ஆண்டவன் போட்டிருக்கும் டைம் டேபிள்' என்று குறிப்பிட்டார்.


ஆயின் டைம் டேபிள் வகுத்துவிட்டால் போதுமா ? மாணவன் கிளாஸைக் 'கட்' பண்ணிவிட்டு மாட்னிக்குப் போகிறவனாக இருந்தால் என்ன பண்ணுவது ? கல்லிடைக் குறிச்சி ராமசுப்பையரின் மகனை கே. ஆர். சுந்தரமய்யர் ஆண்டவன் நடத்தும் வாழ்க்கை என்னும் கல்லூரியில் சிறப்பு மாணவனாகத் இருந்ததால்தான் சென்னைக்கே பெருமை தரும் சிறப்புடைய மக்களில் ஒருவராக இன்று விளங்குகிறார்.

தமது வாழ்க்கையின் தொடக்க நிலையில் ஸ்ரீ குளத்து அய்யரிடம் தொழில் வர்த்தகத் துறையைத் தாம் கற்றறிந்ததை நன்றியுடன் நினைவுகூர்ந்தார் திரு சுந்தரம் அய்யர்.

இன்று மிகப் பிரபலமாக இருக்கும் ஈஸன் இன்ஜினீரிங் கம்பெனியின் டைரக்டர் திரு கே. ஈசுவரனின் தகப்பனார் திரு குளத்து அய்யர். மாட்டு வண்டி தவிர வேறு எதைப் பற்றியும் கிராமப்புற மக்கள் சிந்தித்துக்கூட அறியாத அந்த நாட்களிலேயே சைக்கிள்கள், டியூப்கள், டயர்கள் முதலியவற்றில் வியாபாரம் செய்து வந்த குளத்து அய்யர் 'துணிச்சலான பேர்வழி', 'தீர்க்கதரிசி' என்றெல்லாம் பாராட்டப் பெற்றார்.

தனியே ஒரு சிறு சைக்கிள் கடை வைத்திருந்த சுந்தரம் அய்யர் பின்னர் குளத்து அய்யரிடம் சென்று அவரது நிறுவனத்திலேயே சேர்ந்து கொண்டார். வர்த்தக நுணுக்கங்களையும் நிர்வாக ஆற்றலையும் நிரம்பப் பெற்றார்.

சிறிது காலத்துக்குப் பிறகு சுந்தரமும் ஈசுவரனும் சென்னைக்கு வந்து ஒரு குஜராத்தி



நிறுவனத்தில் முறையே குமாஸ்தாவாகவும் ஃபிட்டராகவும் வேலையில் அமர்ந்தார்கள். இவர்கள் வந்து சேர்ந்தபிறகு அந்தக் குஜராத்தி நிறுவனத்தின் லாபம் பன்மடங்காகப் பெருகியது.

'' இன்ன காரணம் என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை ; ஆனால் நன்றாக உழைத்து முதலாளிக்கு நிறைய லாபம் சம்பாதித்துத் தருகிறோம் என்ற எண்ணமே எங்கள் இருவருக்கும் ரொம்ப சந்தோஷத்தை அளித்தது'' என்றார் ஸ்ரீ சுந்தரமய்யர். தலா நாற்பத்தைந்து ரூபாய் சம்பளம் போதாமல் வெளியிலிருந்தும் பணம் வரவழைத்துக் கொள்ள வேண்டிய நிலையில்தான் இருந்தார்கள். ஆயினும் ஏதோ கணிசமாகச் சாதிக்கிறோம் என்ற திருப்தியே மகிழ்ச்சியூட்டியது.

1930ம் ஆண்டு தொடங்கவிருந்தபோது, 'நாமும் சொந்தமாக ஒரு சைக்கிள் நிறுவனம் தொடங்க வேண்டும்' என்ற எண்ணம் சுந்தரத்துக்கும் ஈசுவரனுக்கும் ஏற்பட்டது. இவர்கள் தனி கம்பெனி ஆரம்பித்தார்களோ இல்லையோ இது வரை அவர்கள் வேலை பார்த்து வந்த குஜராத்தி நிறுவனத்தின் அதிபர், 'சுந்தரமும் ஈசுவரனும் இல்லாமல் வியாபாரம் நடத்தவாவது' என்று நினைத்துக் கடையை நிரந்தரமாகவே இழுத்து மூடி விட்டார் !

தனி கம்பெனி ஆரம்பிக்க முதல் போட்டு இவர்களுக்கு உதவியவர் சீ. வ. நா. செ. அவர்கள். ('சீனு வனு நானு செனு' என்றுதான் அவரை அழைப்பது வழக்கம்!) ஆக, ஈசுவரனும் சுந்தரமும் கையில் காலணாக் காசு கூட இல்லாமல் வேறொருவரின் பணத்தை மூலதனமாகக் கொண்டுதான் சைக்கிள் வியாபாரம் ஆரம்பித்தார்கள். முதல் போட்டவர் பின்னும் எப்போது வேணுமானாலும் நிறுவனத்திலிருந்து விலகிக் கொள்ளலாம்; ஆயின் அவ்வாறு தீர்மானித்த தேதியிலிருந்து பணத்தைத் திருப்பித் தரக் குறிப்பிட்ட காலம் அவகாசம் தர வேண்டும் என்பது ஏற்பாடு.

'' சீனு வனு நானு செனு விலகிக் கொள்ள முடிவு செய்தபோது குறிப்பிட்ட கால அளவுக்கு அதிகமாகவே பணத்தைத் திருப்பித் தர எங்களுக்கு அவகாசம் அளித்தார்'' என்று நன்றியறிதலுடன் நினைவுகூர்ந்தார் திரு சுந்தரம் அய்யர். ''அவர் எங்களுடனேயே இருந்து இந்த வளர்ச்சியிலெல்லாம் பங்குபெற வில்லையே என்ற வருத்தம் எங்களுக்கு உண்டு'' என்றும் சொன்னார். ஆம், கடந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளில் அந்தச் சிறிய சைக்கிள் கடை அடைந்துள்ள வளர்ச்சி கொஞ்ச நஞ்சமா என்ன!


உலக யுத்தத்தின்போது சுமார் 12,000 சைக்கிள்களை இவர்கள் ஆண்டுதோறும் தருவித்து விற்று வந்தார்கள். இவர்களை நம்பி இருநூறு முந்நூறு சில்லறை வியாபாரிகள் இருந்தார்கள். திரும்பிய பக்கமெல்லாம் பிளாக்மார்க்கெட்; சைக்கிள் உறுப்புகளில் (Made as in England) என்று பொறித்து இங்கிலாந்தில் செய்தது என்று நம்ப வைக்கும் மோசடி வேறு. இவ்வாறெல்லாம் செய்து பலர் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தபோது இங்கிலீஷ் சைக்கிள் கம்பெனி மட்டும் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொண்டிருந்தது. ''இன்றைக்கும் அப்படித்தான்'' என்றார் சுந்தரமய்யர். '' நாணயம் தவறுவதில்லை ; ஏமாற்றம் அளிப்பதில்லை என்ற நற்பெயரைத்தான் இன்றும் எங்கள் நிறுவனங்களில் நாங்கள் முக்கியமானதாகக் கருதுகிறோம்.''

சைக்கிள்களை இறக்குமதி செய்ததோடு மின்சார மோட்டார்களையும் பம்பு செட்டுகளையும் விற்பனைக்கென்று தருவித்து வந்தார்கள். இதையொட்டி ஓர் இன்ஜினீரிங் பிரிவும் தோன்றியது. பின்னால் இது ஈசன் இன்ஜினீரிங் கம்பெனி என்பதாகப் பிரிந்தது. இன்று மின் விநியோகத்துக்குத் தேவையான ஸ்விட்ச் கியர்கள், ட்ரான்ஸ்ஃபார்மர்கள் போன்ற பல உபகரணங்களையும் தயாரித்து இங்கு மட்டுமின்றி அயல்நாடுகளிலும்கூட நிறுவும் மிகப் பெரிய நிறுவனமாக வளர்ந்து விட்டது.

சுந்தரமய்யரின் மூத்த மகன் சங்கரனுக்கு மோட்டார் சைக்கிள் ஓட்ட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டபோது, அவருக்கென்று ஒரு மோட்டார் சைக்கிளை வாங்கப் போக, 'ஏன் சைக்கிள்களுடன் மோட்டார் சைக்கிள்களையும் விற்பனைக்கென்று இறக்குமதி செய்தால் என்ன?' என்ற எண்ணம் ஏற்பட்டது. இதைச் செயல்படுத்தியபோது பிறந்ததுதான் மெட்ராஸ் மோட்டார்ஸ் என்ற நிறுவனம். இதையடுத்து, தனித் தனி பாகங்களாக மோட்டார் சைக்கிள் உறுப்புக்களைத் தருவித்து அவற்றை இங்கு இணைத்துத் தருவது என்று முடிவாயிற்று. 'என்ஃபீல்ட் இந்தியா' என்ற பெயரில் உருவான இணைப்புத் தொழிற்சாலை நாளடைவில் மோட்டார் சைக்கிள் உற்பத்தித் தொழிற்சாலையாகவே மாறியது. இன்று என்ஃபீல்ட் இந்தியாவில் தயாராகும் குருஸேடர், புல்லெட் மோட்டார் சைக்கிள்கள் தொண்ணூற்றெட்டு சதவிதம் இந்தியத் தயாரிப்புக்களே. திரு சங்கரன் இன்று இதன் மானேஜிங் டைரக்டர்.


ஆக, இங்கிலீஷ் சைக்கிள் அன்டு மோட்டார் கம்பெனி என்ற பெயரில் இவர்கள் அன்று ஆரம்பித்த சிறு நிறுவனம்தான் இன்று பல்கிப் பெருகி, மெட்ராஸ் மோட்டார்ஸாகவும், ஈசன் இன்ஜினீரிங்காகவும், — என்ஃபீல்ட் இந்தியாவாகவும் இன்னும் பல நிறுவனங்களாகவும் விழுதுகள் விட்டு ஆல்போல் தழைத்திருக்கிறது. பிராட்வேயிலுள்ள அந்தப் பழைய சைக்கிள் வியாபாரக் கடை இன்று லாபகரமாக இயங்கவில்லை என்றாலும் அதை மூடிவிடாமல் நடத்திவருகிறார்கள்.

''இந்த வளர்ச்சிக்கெல்லாம் முக்கிய காரணம் ஈசுவரன்தான். அவர் அப்பாவிடம் இருந்தது போலவே ஈசுவரனிடத்திலும் அசாதாரணமான துணிச்சலும் எதிர்காலத்தை எடை போடும் ஆற்றலும் இருக்கின்றன'' என்று மனம் நெகிழ்ந்து கூறினார் சுந்தரம் அய்யர். ''நிர்வாகம் பண்ணிவிடுவேன், இன்னதை இவன் முடிப்பான் என்று ஆய்ந்து பார்த்து வேலை வாங்கி விடுவேன் ; ஆனால் ஈசுவரனைப் போல் அத்தனை துணிச்ச


மாதரின் அழகு
மேலும்
பரிமளிக்க...
லக்ஷ்மியின்
வாயில்
புடவைகள்
ஸ்ரீ
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்
அன்றாடம் உடுப்பதற்கும், எல்லா
விசேஷ சந்தர்ப்பங்களுக்கும்
உகந்த துணி
90s & 100s உயர்ச
VSK-LM-475 Tm

பெண்மையின் மென்மையை உணர ஆண்களைப் போல் 'ஷேவ்' செய்யாதீர்!

ஆன் பிரெஞ்சு ஹேர் ரிமூவர் தடவி பெண்மை வழியிலே உரோமத்தை வழித்தெறியுங்கள். அது மென்மையானது, இன்மணம் கொண்டது. உரோமங்களின் வேர்கள் வரை ஊடுருவிச் செயல் புரிகிறது. வெட்டுக்கள் இல்லை, உரோமத் துகள்கள் இல்லை. வாரக் கணக்கில் வழவழப்பான சருமம்.





பட்டுப்போன்ற கரங்களுக்கும் கால்களுக்கும்.

ஆன் பிரெஞ்சு ஹேர் ரிமூவர்

ட்ரேட்மார்க்கின் ரெஜிஸ்டர்ட் யூஸர்: ஜெப்ரி மேனர்ஸ் & கம்பெனி லிமிடெட்.   95-AF-172-Tam.

னுடன் காரியத்தில் இறங்கும் சுபாவம் எனக்கு இல்லை !''

எனவே, சக்கரங்கள் ஹாண்டில்பார் போன்ற ஸ்க்கின் பகுதியாக ஸ்ரீ சுந்தரமய்ய ரும் அதற்கு விசை கொடுத்து விரையச் செய்யும் மோட்டார் பகுதியாக ஸ்ரீ ஈசுவர னும் விளங்கினர் எனலாம். ஒரு மோட்டார் சைக்கிளின் சீரான இயக்கத்துக்கு இரண்டு பகுதிகளுமே இன்றியமையாதவைதாமே!

என்ஃபீல்ட் இந்தியா தயாரிக்கும் புல்லெட் மோட்டார் சைக்கிள்கள்தாம் நமது ராணு வத்தால் பயன்படுத்தப்படுகின்றன. 1951–52 ஆகிய இரண்டு வருஷங்கள் ராணுவத் தினர் இந்த மோட்டார் சைக்கிளைக் கடுமை யான பரீட்சைக்கு உட்படுத்திய பின்னரே இது ராணுவத்துக்கு உகந்தது எனத் தேர்ந் தெடுத்தனர்.

சீனு நம்மீது ஆக்கிரமிப்பு செய்தபோது இந்தத் தொழிலகம் சிறிய மோட்டார் சைக்கிள்கள் தயாரிப்பை அடியோடு நிறுத்தி வைத்து முழுக்க முழுக்க புல்லெட் 3.5 மட்டுமே செய்து குவித்து ராணுவத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தது : நாட்டின் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியதாயிற்று.

சுந்தரமய்யருக்கு சிருங்கேரி சாரதாபீடம் சங்கராசாரியாரிடம் அளப்பரிய பக்தி. நான்கு தலைமுறைகளாகவே அந்தப் பீடத்தை வழிபட்டு வருகிற குடும்பம். வீட்டிலே ஓர் அறையைச் சுட்டிக்காட்டி, ''இதோ இந்த இடத்தில் அன்பே வடிவான அவர் அமர்ந் திருந்து கூறிய வார்த்தைகளை எந்நாளும் மறக்க முடியாது'' என்றார் சுந்தரமய்யர். சிருங்கேரி பெரியவாள் கூறிய அந்த அமுத வாக்கு என்ன?

'' 'அவன் அதைச் செய்தான், இவன் இப்படிச் சொன்னான்' என்று குற்றம் கண்டு பிடித்துக் கொண்டே போனால் கடைசியில் சுவாமிகள் மட்டும்தான் மிஞ்சுவார் ! ஆகவே ஒருவனுடைய குறைகளுக்கு மத்தியிலும் அவ னுடைய ஆத்மா நல்ல கதி அடைய நாம் ஏதாவது உதவ முடியுமா என்றுதான் பார்க்க வேண்டும்.''

பெரியவாளின் இந்தப் பொருள் பொதிந்த வார்த்தைகளைத் திருப்பிச் சொல்லும்போது சுந்தரமய்யருக்கு நாத் தழுதழுத்து விட்டது. ''தவறுகள் செய்யும் சாமானியன் எதிரே பெரியவாள் கருணையே வடிவாக நின்று அருள்பாலிக்கிறார்; அன்பினால் அவனைச் சீர் திருத்த முயல்கிறார். இத்தகைய அவரது அன்பு நம்மை அப்படியே கரைத்துக்கொண்டு விடும்'' என்ற சுந்தரம் அய்யர் தொடர்ந் தார்: ''ஒருவனால் அனுஷ்டிக்க முடியாத விரதத்தை மேற்கொள்ளுமாறு பெரியவாள் ஆக்ஞாபிக்க மாட்டார். அவனவனுக்கு எது சாத்தியமோ அதைத்தான் உபதேசிப்பார். ஏன் தெரியுமா? குரு வார்த்தையைப் புறக் கணித்த குற்றம் வேறு அவனைச் சேரவேண் டாமே என்ற கருணை !''

சுந்தரமய்யரின் வீட்டு வரவேற்பு அறை யில் திரும்பிய பக்கமெல்லாம் சுவர்களில் சிருங்கேரி பெரியவாளின் படங்கள்தாம் காட்சி தருகின்றன. இதை விட்டால் அடுத் தாற்போல் நம் கவனத்தைக் கவர்வன



'' ஹார்ஸ் பவர்னு என்னன்னு ?''
'' வெளியிக்கு வா ! காட்டறேன் !''

ஐந்து தட்டுக்கள் உள்ள கண்ணாடி அலமாரி யில் இணியத் இணிய அடுக்கி வைக்கப்பட் டிருக்கும் வெள்ளிக் கோப்பைகள். மூன்று தட்டுகளில் இடம் போதாமல் நெருக்கி அடித் துக் கொண்டிருப்பவை சுந்தரமய்யர் பிரிட்ஜ் ஆட்டத்தில் பெற்ற பரிசுகள். பாக்கி இரண்டு தட்டுக்களில் இருப்பவை இவரது பிள்ளைகள் டென்னிஸ், பாட்மிண்டன் போன்ற விளை யாட்டுக்களில் பெற்ற பரிசுகள். சுந்தரமய்ய ரும் 60-ம் வயதில் டென்னிஸ் ஆடியவர் தாம். இன்று தமிழ் நாடு பிரிட்ஜ் அஸோஸி யேஷனின் தலைவராக இருந்து வருகிறார்.

சுந்தரமய்யருக்கு எட்டு பிள்ளைகள். நால்வர் இன்ஜினியர்கள். இவர்களில் மூவர் முதல் வகுப்பில் தேறியவர்கள். மற்றொருவர் இங்கிலாந்தில் டிஸ்டிங்ஷனோடு தேறியவர் ! மற்ற பிள்ளைகளில் ஒருவர் பி. காம்., ஒருவர் பி. எஸ்ஸி., ஒருவர் சார்ட்டர்ட் அக்கௌண் டன்ட், மற்றும் ஒருவர் எம். ஏ. (எகனமிக்ஸ்) சர்வகலாசாலையில் முதலாவதாகத் தேறியவர் !

'' நீங்கள் வளர்த்துவிட்ட நிறுவனங் களைக் கட்டிக் காக்கும் தகுதி பெற வேண்டும் என்பதற்காகவே பிள்ளைகளை இப்படியெல் லாம் திட்டமிட்டுப் படிக்க வைத்தீர்களோ?'' என்று கேட்டேன்.

'' அதெல்லாம் ஒன்றுமில்லை. இங்குள்ள சூழ்நிலை அவர்களுக்கு இயல்பாகப் பொறுப் புணர்ச்சியை ஊட்டியிருக்கலாம். மற்றபடி எல்லாம் ஆண்டவன் வகுத்த வழிதான்'' என்றார்.

எப்பேர்ப்பட்ட மேதையானாலும் அவ னுடைய இல்லத்தரசி சரியாக அமையாது போனால் அவனது திறமைகள் பளிச்சிட முடி யாமல் மழுங்கிவிடலாம். அநாவசியமான வீட்டு விசாரங்கள் பிடித்துக் கொண்டால் அவன் சாமர்த்தியங்கள் செயல்படுவது சாத் தியமில்லாமலே போய்விடக் கூடும். இந்த விதத்தில் ஸ்ரீமதி காமேசுவரியை மனைவி யாக அடைந்த திரு சுந்தரமய்யர் ரொம்ப அதிர்ஷ்டசாலி. கணவர் மிகச் சாதாரண நிலையில் இருந்தபோது மூன்றரை ரூபாய்க்குச் சுங்கிடிப் புடவை வாங்கி உடுத்தியபோதும் ரொம்பத் திருப்திதான் ; பின்னால் பட்டுப் புடவை உடுத்தி வெள்ளித் தட்டில் சாப்பிடக் கூடிய தகுதி பெற்ற போதும் கூடுதலோ குறைவோ இல்லாத அதே அளவு மன நிறைவு



நன்றி: ஸாட்டர்டே ஷிட்பீட்ஸ் - 'பீகின்ஸ்'

தான். 'மன்னி' என்று பலராலும் அன்புடன் அழைக்கப்படும் காமேசுவரி, கணவரின் கைப் பிடித்தபோது அவருக்கு வயது ஒன்பது : மாப்பிள்ளை சுந்தரத்துக்கு வயது பன்னிரண்டு.

''அன்றைக்கு என்னை நம்பி வந்து சேர்ந்தவள்தான், இன்று வரை தொழில் வர்த்தகரீதியாக என்னை ஒரு கேள்வி கேட்டது கிடையாது'' என்றார் சுந்தரமய்யர், எனது ஒரு வினவுக்குப் பதிலளிக்கும் முகமாக. ''1951 முதல் 1957 வரை ஆறு வருஷங்கள் ரொம்பச் சிரமமான நிலையில் நாங்கள் இருந்தோம். இந்த இக்கட்டிலிருந்து எப்படி மீளப் போகிறோம் என்ற சந்தேகம் வலுத்த அந்தக் கட்டத்திலும்கூடக் காமேசுவரிக்கு எதுவுமே தெரியாது ! நான் சொன்னதுமில்லை, அவள் கேட்டதுமில்லை'' என்றார்.

ஈசுவரனுக்கும் சுந்தரமய்யருக்கும் இருந்த அநுபவ ஞானம் அந்தச் சமயத்தில் கைகொடுத்து உதவியது. நெருக்கடியிலிருந்து விடுபட்டு மீண்டும் ஸ்திரமான நிலையை அடைந்தனர்.

சுந்தரமய்யர் சங்கீதப் பிரியர்; நல்ல ரசிகர். சிறு வயதில் ஏகாதசி, மார்கழி மாதப் பஜனைகளில் காலை நாலு மணிக்கெல்லாம் எழுந்து கலந்து கொண்டதிலிருந்து ஆரம்பமான ஆர்வம், பின்னால் மியூஸிக் அகாடமியின் பொருளாளராக இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் அதிகமாகச் சிறப்புப் பணியாற்றுவதில் கொண்டுவிட்டது. இன்றைக்கும் அவர் அகாடமியின் காப்பாளர்களில் ஒருவர்.

சங்கீதத்தை ரசிப்பதுபோலவே, வாழ்க்கையின் இதர பல அம்சங்களையும் ரசிக்கத் தெரிந்தவர் அவர். பால் பாயாஸம் பரிமாறப்படும்போது விருந்தினராகத் தம் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவரிடம் கூறுவார் : ''கையைக் குழிச்சுக்கோ ! பாயஸம் உள்ளங்கையை நிரப்பி இலையில் வழியணும்; அப்புறம் அதை எடுத்துச் சாப்பிடணும் !''

பெரியோர் சிறியோர் என்று பேதம் பாராமல் சகலரிடமும் அன்புடனும், நகைச்சுவையுடனும் சகஜமாகப் பழகும் இயல்புடையவர். ஒரு முறை இளவட்டங்கள் சூழ்ந்திருக்க அவர் கூறிய ஜோக் இது :

''எடையைக் குறைக்க வேண்டும் என்று தீர்மானித்துக் குதிரை ஏற்றம் பழகினேன். ஒரு மாசம் குதிரை சவாரி செய்ததிலே நல்ல பலன் தெரிந்தது. இருபது பவுண்டு எடை குறைந்துவிட்டது — குதிரைக்கு !''

என்ஃபீல்ட் இந்தியாவில் மட்டுமின்றி ஈஸன் இன்ஜினீரிங், சக்தி பைப்ஸ் ஆகியவற்றிலும் சேர்மனாக இருப்பவரும் வேறு பல நிறுவனங்களின் நிர்வாகத்திலும் தொடர்பு கொண்டுள்ளவருமான திரு சுந்தரமய்யரைப் பற்றிய இந்தக் கட்டுரையை முடிக்குமுன் என்ஃபீல்ட் இந்தியாவின் விஸ்தரிப்புத் திட்டத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற வேண்டும்.

முன்னேற்றம் அடையாத பகுதிகளில் தொழிலகங்களைத் தொடங்கினால் அதற்கு அரசு சில சலுகைகள் அளிக்கிறது. இந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு என்ஃபீல்டு நிறுவனம் க்ருஸேடர் 1.5 மோட்டார் சைக்கிள் தயாரிப்பை ராமநாதபுரம் மாவட்டத்துக்கு மாற்றத் திட்டமிட்டிருக்கிறது. ஆண்டொன்றுக்கு அங்கு 14,000 க்ருஸேடர்கள் உற்பத்தியாகும். சென்னையில் உள்ள என்ஃபீல்டு இந்தியா, புல்லெட் 3.5 மட்டும் தயாரிக்கும்; ஆண்டொன்றுக்கு 15,000 என்ற விகிதத்தில்.

மேலூருக்கும் திருப்பத்தூருக்கும் இடையில் உள்ள ஒரு பகுதியில் இப்போதே வேலை துவக்கப்பட்டுள்ளது. 1973ன் முற்பகுதியில், முதல் சில மோட்டார் சைக்கிள்கள் தயாராகி வெளிவரும். சுமார் ஐயாயிரம் நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு இருக்கும். அந்தப் பகுதியின் பொருளாதார நிலை மேம்படும்.

அரசாங்கச் சலுகைகள் பல உண்டு என்றாலும் பிற்பட்ட பகுதிகளில் தொழில்களைத் தொடங்குவதில் இடைஞ்சல்களும் மிகுதி. அருகில் ரயில்வே நிலையம் கிடையாது. திறமை மிக்க தொழிலாளர் கிடைப்பது அரிது. வேலையில் ஆட்களைப் பழக்க வேண்டும். தேவையான சமயத்தில் தேவைப்பட்ட பொருட்கள் கிடைக்காது. முன் கூட்டியே சகல தேவைகளையும் கணித்துச் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். உற்பத்தியாகும் மோட்டார் சைக்கிள்களைப் பல ஊர்களுக்கும் அனுப்பப் போதிய வசதிகள் இல்லை. டெலக்ஸ் போன்ற செய்தித்தொடர்பு உபகரணங்களைப் பெறுவதில் பல சிரமங்கள். பட்டணத்து வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட திறமைமிக்க இன்ஜினீயர்கள் அங்கு வந்து குடியேற யோசிப்பார்கள்.

இவ்வாறெல்லாம் இருந்தும் ஏராளமான முதலீடு செய்து ஒரு தொழிலை அங்கு ஆரம்பிப்பதென்றால் அதற்கு ஒன்று, நெஞ்சுறுதியும் ஆற்றலும் வேண்டும். இரண்டாவது, தாழ்ந்த நிலையில் உள்ள ஒரு மாவட்டத்தின் வளர்ச்சிக்கு உதவுவோம் என்கிற பரந்த மனப்பான்மையும் சேவா உணர்ச்சியும் வேண்டும்.

இவற்றைக் குறைவரப் பெற்றிருக்கும் திரு சுந்தரமய்யர், இது நாள் வரை பல வெற்றிகளைக் கண்டதுபோல் இதிலும் காரிய சித்தி பெறுவார் என்று எதிர்பார்க்கலாம்.

அராபியக் கதை ஒன்றில் படித்திருக்கிறோம், அலாவுதீன் மந்திர விளக்கைத் தேய்த்ததும் ஏதேதோ அற்புதங்கள் நிகழ்ந்தன என்று. பெரிய சாதனைகளைப் புரிய, 'மனம் இருக்கும்போது மந்திரம் எதற்கு ?' என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறது திரு கே. ஆர். சுந்தரமய்யரின் வாழ்க்கை.

— குட்டிகிருஷ்ணன்



''வேலை நிரந்தரமாவதற்கு ஆராய்ச்சிப் பட்டம் வேண்டுமாம், ஆராய்ச்சிப் பட்டம்!. இந்த வயதுக்கு மேல் நான் என்ன ஆராய்ச்சி பண்ண முடியும்?'' என்று சலித்துக்கொண்டார் பேராசிரியர் நரஹரி.

''உங்களுக்கு அப்படி என்ன வயதாகி விட்டது? எதிர் வீட்டுச் சாமிக்கண்ணு முதலியார் ஐம்பது வயதுக்கு மேல் டாக்டர் பட்டம் வாங்கவில்லையா?''

''வாங்கினான், கிழித்தான்! ஏதோ அமெரிக்க சர்வகலாசாலையில் போய்- இந்திய இலக்கியத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தான். இந்தியர்களே கேள்விப்படாத தோணியாண்டி என்ற புலவரைப் பற்றி ஏதோ எழுதித் தந்து பட்டம் வாங்கிவிட்டான்!''

''விவசாயப் பேராசிரியர் வடிவேலுகூட வயதான பின்னல்தானே பி.எச்டி. பட்டம் வாங்கினர்?''

''எல்லாம் வெறும் ஏமாற்றம். ஆராய்ச்சிப் பண்ணையில் கசப்பில்லாத பாவக்காய் காய்க்க வைத்திருப்பதாகப் பத்திரிகைகளிலெல்லாம் தடபுடலாக வெளியிட்டான். ஏமாந்து போன மேல்நாட்டு சர்வகலாசாலை ஒன்று அவரை 'விஸிட்டிங் பேராசிரியரா'க அழைத்தது. அந்த வெள்ளைக்காரர்களுக்குக் கசப்பில்லாத பாகற்காய் என்று வெள்ளரிக்காயைக் காட்டினுனே, இல்லை விளாம் பழத்தைக் காட்டினுனே அவர்கள் ஏமாந்து விட்டார்கள். திரும்பி வரும்போது பெயருக்குப் பின்னல் வால் நீண்டு விட்டது. பி.எச்டி. என்று சில எழுத்துக்கள் சேர்ந்துவிட்டன வல்லவா?''

''அகோரம் கூட அறுபது வயது நெருங்கும் போதுதான் டாக்டரானுர். தலைகூட வழுக்கையாகி விட்டதே!''

''மூளையை உபயோகித்துத் தலை வழுக்கையாகவில்லை. மனுஷனுக்கு ஏதாவது இருந்தால் தானே? 'ஆங்கில இலக்கியத்தில் குதிரை' என்று ஓர் ஆராய்ச்சி நூல், எழுத என்ன திறமை வேண்டி யிருக்கிறது? பொறுமைதான் தேவை. எந்த மட சாம்பிராணியாலும் அது போன்ற 'தீஸிஸ்' எழுத முடியும்.''

''நீங்களும் ஏதாவது குப்பை கூளங்களைச் சேர்த்து ஒரு நூல் எழுதுவதுதானே? மற்ற



மேனன் வந்தாரடி!

அவள் எழுதின அரைகுறைக் கதை-9

வர்கள் எழுதியவற்றைப் பற்றித்தான் கேலியும் கிண்டலும் பேசுவீர்களேயன்றிச் சொந்தமாக உருப்படியாக எதையாவது செய்தால் தானே!''

''நான் 'தீஸிஸ்' எழுதத் தயாராயிருக்கிறேன். ஆனால் சரித்திரத்தில் இனி ஆராய்ச்சி செய்ய என்ன இருக்கிறது? தோண்டி எடுக்க வேண்டிய நகரங்களையெல்லாம் எனக்கு முன்னால் பிறந்தவர்கள் எடுத்துத் தொலைத்து விட்டார்கள்! இருக்கிற ராஜாவைப் பற்றியெல்லாம் உள்ளூர்க்காரனோடே போட்டி போட்டுண்டு வெள்ளைக்காரன் வேறு ஆராய்ச்சி செய்து அலசிவிட்டான். இந்தப் பேராசிரியர் நரஹரி இனி 'பிராட்' செய்தால் தான் பி.எச்டி. பட்டம் கிடைக்கும். ஏதோ பழைய ஓலைச் சுவடியைக் கண்டெடுத்தேன். கல்வெட்டைக் கண்டெடுத்தேன்னு 'கப்சா' விட்டால்தான் முடியும்.''

''காலத்துக்குத் தகுந்தபடி நடந்துக்கணும், அப்பா! இது மோசடி யுகம். நேர்மை, மண்ணாங்கட்டி எல்லாம் எடுபடாது. பொய் சொன்னால்தான் பிழைக்கலாம். நான் சொல்கிறபடி செய்யுங்கள். அரை டஜன் மாணவ மாணவிகளுடன் பக்கத்திலிருக்கும் குப்பை மேடு என்ற கிராமத்து மண்ணைத் தோண்டுங்கள், தோண்டுங்கள், அப்படித் தோண்டுங்கள்! குறைந்தது ஒரு வருஷம் தோண்ட வேண்டும். சிம்ம மகேந்திரன் என்ற அரசனின் கல்வெட்டுக்கள் ஏதாவது அகப்படும் என்ற நம்பிக்கையில் தோண்டுவதாகப் பத்திரிகைகளுக்கு அவ்வப்போது செய்திக் குறிப்புக்கள் அனுப்புங்கள். உங்களிடமிருக்கும் ஓலைச்சுவடி ஒன்றில் அதற்கான ஆதாரம் இருப்பதாக அடித்துக் கூறுங்கள். இடைக் காலத்தில் நான் சென்னைக்குச் சென்று சில கல்வெட்டுகளும், விக்கிரகங்களும் தயாரித்து விடுகிறேன். திடீரென்று ஒரு நாள் பத்திரிகையில் கல்வெட்டுக்குப் பக்கத்தில் நீங்கள் மண்வெட்டியுடன் கம்பீரமாக நிற்கும் படம் வெளிவர வேண்டும். அப்புறம் சிம்ம மகேந்திரனைப் பற்றி ஆயிரம் பக்கம் அளப்பதற்குச் சொல்லியா தரவேண்டும்? டாக்டர் பட்டம் உங்களைத் தேடி வரும்'' என்று தகப்பனுருக்கு ஒரு குட்டி லெக்சர் தந்தான் பிள்ளை குஞ்சப்பா.



''என்னைத் தவிர ஆபீஸ் ஊழியர்கள் அனைவரும் ஸ்ட்ரைக்!''
''நீங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை?''
''என் தலையெழுத்து நான் முதலாளியாச்சே!''

''குஞ்சு சொல்றது காதில் விழுந்ததோ, இல்லையோ?''

''அதெல்லாம் சரிதாண்டி! உலகத்திலே இருக்கிற அத்தனை பேர் கண்ணிலேயும் மண்ணைத் தூவலாம். ஆனால் டாக்டர் குட்டி கிருஷ்ண மேனனை ஏமாற்ற முடியாது. யாரும் படிக்காத — யாராலும் படிக்க முடியாத— நூல்களையெல்லாம் தீவிரமாகப் படித்துக் குற்றம் கண்டுபிடிப்பதுதான் அவர் பொழுது போக்கு. அதுவும் சரித்திரம் என்றால் விடவே மாட்டார். சந்திரகுப்தன் அரண்மனையில் 140 கதவுகள் இருந்ததாக யாரோ எழுதி விட்டார்கள். அது 139தான் என்று நிரூபிக்க இந்த மேனன் எவ்வளவு பாடுபட்டார் தெரியுமா? பத்திரிகைகளுக்குத் தினமும் எத்தனை கடிதங்கள் எழுதுகிறார்? அத்தனையும் மறுப்பு, மறுப்பு, மறுப்பு!''

''அப்பா! நான் தயாரித்துக் கொண்டு வரும் கல்வெட்டு அந்தச் சிம்ம மகேந்திரனது அல்லவென்று சிம்ம மகேந்திரனே வந்தால் கூட நிரூபிக்க முடியாது. எழுத்துக்கள் ஆங்காங்கே அழிந்திருக்கும். நான் தயாரிக்கப் போகும் லிபியை யாராலும் படிக்க முடியாது.''

''எனக்கென்னமோ குட்டி கிருஷ்ண மேனனைக் கண்டால் பயம்தான்.''

''குட்டி கிருஷ்ண மேனனாவது, குட்டிச் சாத்தானாவது! பேசாமல் பின்னை சொல்கிற படி கேளுங்கள். டாக்டர் பட்டம் கிடைக்கும். பேராசிரியர் வேலையும் நிரந்தரமாகும்.''

வேறு வழியின்றித் தலைவனின் உபதேசத்தை உச்சி மேற்கொண்டார் பேராசிரியர் நரஹரி. அடுத்த பதினைந்து நாட்களில் குப்பைமேடு கிராமமே திமிலோகப் பட்டது. கட்டடம் கட்டுவதற்கு அஸ்திவாரம் போட இவ்வளவு மண்ணை ஏன் தோண்ட வேண்டும் என்று வியப்புடன் பார்த்தார்கள் கிராமவாசிகள். ஆராய்ச்சி மாணவர்கள் தலையில் கர்ச்சீப்பைக் கட்டிக்கொண்டு ஏதாவது கல்வெட்டு அகப்படாதா என்று பூதக் கண்ணாடி வழியாகத் துருவித் துருவிப் பார்த்தார்கள். மாணவிகள் வியர்வை ஒழுக, கறுப்புக் கண்ணாடி அணிந்துகொண்டு மாணவர்களுக்கு உதவினார்கள். பியூன் விரித்துப் பிடித்த குடையின் கீழ் நின்றபடி, மண் தோண்டு விழாவை மேற்பார்வை பார்த்தார் நரஹரி.

பத்திரிகைகளின் ஞாயிறு அனுபந்தங்களிலெல்லாம் நரஹரியின் ஆராய்ச்சியைப் பற்றின குறிப்புக்கள் புகைப்படங்களுடன் தோன்றலாயின. ரேடியோக்காரர்கள் வேறு நரஹரியைப் பேட்டி கண்டார்கள். அயல் நாட்டுப் பத்திரிகை நிருபருக்குத் தந்த பேட்டியில் அடக்கமாகப் பின்வருமாறு கூறியிருந்தார் நரஹரி. ''என் ஆராய்ச்சி வெற்றி பெறும் என்று சொல்வதற்கில்லை. ஓலைச் சுவடிகளில் போதிய அத்தாட்சி இருப்பதினால் இந்த வேலையை மேற்கொண்டேன். நமது நாட்டுச் சரித்திரத்தின் இருண்ட ஒரு பகுதியில் சிறிது ஒளியாவது சிந்த முடியாதா என்ற நைப்பாசைதான். என் வாழ்நாளில் முடியாவிட்டால் என் மாணவ மாணவிகளில் யாராவது இந்தப் புனித வேலையைத் தொடருவார்கள் என்ற அசையாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது.''

கடைசியில் அந்த நாளும் வந்தது! கல்வெட்டுக் கண்டெடுக்கப்பட்டது! பத்திரிகைகளிலெல்லாம் நரஹரியின் பெயர் பிரமாதமாக அடிபட்டது. அயல்நாட்டிலிருந்து அழைப்புக்கள் வந்தன. அதிகம் வளர்ப்பானேன்! நரஹரிக்கு ஒரு வருடத்துக்குள் டாக்டர் பட்டம் கிடைத்தது! குட்டி கிருஷ்ண மேனனை அவர் மறந்தே விட்டார்!

ஸ்ரீமதி விஜயா பாலகிருஷ்ணனின் அரைகுறைக் கதையைப் பின்வருமாறு முடித்து வைக்கிறார் திரு ஜி.எஸ். பாலகிருஷ்ணன்:

ஆனால் மேனன் அவரை மறக்கவில்லை. பாரிச வாயு காரணமாகப் படுக்கையில் விழுந்திருந்தவர் ஆயுர்வேத மருந்துகளின் உதவியால் நோயுடன் போராடிப் புத்துயிர் பெற்று ஒரு நாள் நரஹரியைத் தேடி வந்தார். மனுஷனால் சரிவர நிற்கக்கூட முடியவில்லை.

''உட்காருங்கள் மேனன்!''

''உட்கார நேரமில்லை. தவிர உடம்பு படுத்துகிறது. ஒரே ஒரு சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டு போக வந்தேன். பத்திரிகைக்கு எழுதலாம் என்றால் கை நடுங்குகிறது. கண் பார்வை சரியில்லை.''


''அப்படி என்ன சந்தேகம்?''

''சிம்மமகேந்திரன் கல்வெட்டைக் கண்டெடுத்தீர்களே... அவன் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தான்?''

''கல்வெட்டிலேயே கி.மு. 420 என்று இருக்கிறதே. பத்திரிகை போட்டோக்களில் கி.மு. 420 பளிச்சென்று விழுந்திருக்கிறதே!''


''பார்த்தேன். கண் பார்வை மங்கின நான்கூடப் பார்த்தேன். அதனால்தான் சந்தேகம் எழுந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு முன் வாழ்ந்த சிம்மமகேந்திரன் எப்படி கி.மு. என்று போட்டுக் கொள்ள முடியும்? கிறிஸ்து பிறக்கப் போவதை அவன் எதிர்பார்த்தானா? கவலைப்படாதேயும் நரஹரி. இந்த வயசுக் காலத்தில் உம்ம வண்டவாளத்தை வெளிப்படுத்திய பாவத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஏதோ டாக்டர் பட்டத்தின்மீது ஆசை... புரிகிறது...புரிகிறது'' என்று கூறி வெளியேறினார் குட்டி கிருஷ்ண மேனன்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam


ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush ...ings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics
GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

How could India Pistons have sold TWO MILLION piston castings to a single customer in the Uuited Kingdom.



unless the quality of our products is consistently good?

In the field of exports, repeat orders are worth their weight in gold, endorsing the ability of a manufacturer to maintain quality standards and delivery schedules.

India Pistons have received such recognition from all parts of the World. Take the United Kingdom, for example. A single customer there has trusted us with repeat orders valued totally around £400,000. In addition to this, we supply Original Equipment and Replacement pistons to a host of manufacturers in the U.A.R. and Yugoslavia. besides our regular exports to Asian, African and European markets.

At home, we meet the OE requirements of almost all automotive and industrial engine manufacturers and 60% of the total replacement needs.

How do we manage both?

One of the reasons is we have the largest and the most modern piston assembly-making unit in South East Asia. Another is we give precisely what our customer specifies.

INDIA PISTONS LIMITED

Sembiam, Madras-11

Manufacturers of: *PowerPak* Pistons, Piston Rings, Cylinder Liners, Gudgeon Pins and Circlips

A unit company of the Amalgamations Group

IP-183A